www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
ஜூன்.24-30,1994
ரூபா 9/00

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 60



## மாற்றம் வருமா மலையகத் தேர்தலில்?

எக்ஸ்ரே ரிப்போர்ட்



## புதிய தொனியில் பேசும் தமிழ் அரசியல் கட்சிகள்!

அரசியல் லசல்

சினிவிசிட்

நில்-கவனி-முன்னேறு

கிழக்கில் முன்னணியில் யார்

## 13 மாதங்கள் கருவறையில் இருந்த குழந்தை

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# தெய்வீகமான பயணத் துணைவர்

"நான் உன்னோடே இருந்து நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து"..... (ஆதி.28:15)

நம் பயணத்தில் நமக்கு உதவி வேண்டுமா? இங்கே சிறப்பான இரண்டு உதவி நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளன. அவை கடவுள் நம்மோடு இருப்பார்; அவர் நம்மைப் பேணிக் காப்பார். எல்லா இடங்களிலும் நமக்கு இவை இரண்டும் தேவை. நாம் நம்முடைய விருப்பப்படி அல்லாமல் கடவுளின் சித்தப்படி வேறொரு நாட்டுக்குப் போக வேண்டியதாயிருந்தால் அது தவிர்க்க முடியாதது என்று எண்ணி வருந்துகிறோம். ஒரு விசுவாசி எல்லா நாடுகளிலும் யாத்திரிகராகவும் வெளியாராகவுமே இருக்கிறார். ஆயினும் கடவுள் தலைமுறை தலைமுறையாகத் தம் அடியாருக்கு இருந்தது போல் விசுவாசிக்கும் எல்லா இடங்களிலும் தங்கும் இடமாக இருக்கிறார். உலகப் பிரகாரமான ஓர் அரசரின் பாதுகாப்பு நமக்கு இல்லாமற்போகலாம். ஆனால் கடவுள் "நான் உன்னைப் பாதுகாப்பேன்." என்று சொன்னால் நமக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. இது ஒரு பயணிக்கு ஆசீர்வாதமான பயண இசைவுச் சீட்டும், நாடு விட்டுக் குடிபெயர்ந்து செல்பவருக்குத் தெய்வீகமான பயணத் துணையும் ஆகும்.

யாக்கோபு தன் தகப்பன் வீட்டை விட்டு எங்கும் சென்றதில்லை. தாயின் செல்லப் பிள்ளையாய் இருந்தான். தன் சகோதரனைப் போல் துணிச்சலான வேட்டை வீரனாய் இருக்கவில்லை. ஆயினும் அயல் நாடு சென்றபோது கடவுள் அவனோடு சென்றார். அவனுக்கு மூட்டை முடிச்சு அதிகமில்லை, உடன் செல்கிறவர்களும் யாருமில்லை. ஆயினும் எந்த இளவரசனுக்கும் அவனைப்போல் சிறப்பு வாய்ந்த மெய்க் காவலர் இருந்ததில்லை. அவன் வெளியிடத்தில் படுத்து தூங்கின போதுகூட தேவதூதர் அவனுக்குக் காவலாயிருந்தார். கடவுள் அவனோடு பேசினார். ஆண்டவர் நம்மைப்போகச் சொல்லிக் கட்டளையிட்டால் நாமும் இயேசு கிறிஸ்து சொன்னதுபோல் "இவ்விடம் விட்டுப் போவோம் வாருங்கள்" என்று சொல்வோமாக!

குணத்தி பிரபா-கனடா.

# ஆன்மீகம்



# நன்மையும் தீமையும்

"நன்மையிலும் பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். பாவத்திலும் பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளவேண்டாம். அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கடுமையாகத் தண்டிப்பவன்.

(அல்குர் ஆன்: 5:2)

எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அதற்குரிய பலனை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும், அதற்குரிய பலனையும் அவன் கண்டு கொள்வான்.

(அல்குர் ஆன் 99:7,8)

நன்மை என்பது உனது உள்ளத்துக்கு மகிழ்ச்சியைத் தருவதாகும். தீமை என்பது உனது உள்ளத்தை உருக்கக் கூடியதாகும், பிறர் அதனைப் பார்க்கக் கூடாது என்ற உணர்விருக்கும், அதனை நீ செய்கின்றபோது.

-நபி மொழி-

"யாருக்கு அவரது நன்மை அவரை மகிழ்விப்பதாகவும், அவரது தீமை அவருக்கு வெறுப்பூட்டுவதாகவும் ஆகிவிடுகின்றதோ அவர் பரிபூரண முஃமின் ஆவார்.

-நபி மொழி-

"இறைவன் அளித்த சொற்ப வருமானத்தை எவர் ஒருவர் திருப்தியோடு ஏற்றுக் கொள்கிறாரோ, அன்னவர் சொற்ப காரியங்களை இறைவனும் திருப்தியோடு ஏற்றுக் கொள்வான்.

-நபிமொழி-

நஸ்மி.ஏ.கபூர்-நாரம்மலை.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
வேட்பாளர் பட்டியல்களும்
வெளியாகிவிட்டன.

தமிழ் பேசும் மக்களது
அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை
கூட்டாகவும்-தனித்தும்
பலப்பரீட்சையில் குதித்திருக்கின்றன.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு
இணைந்து ஒரு திட்டம் வைத்த
தொண்டாவும்-அஷ்ரப்பும்
அரசியல் அரங்கில்
மாறுபட்ட முகாம்களோடு நிற்கிறார்கள்.

அஷ்ரப் பொ.ஜ.முன்னணிக்கும்
தொண்டா-ஐ.தே.கட்சிக்கும்
ஆட்சிக்கு வர ஆதரவு தருவோம்
என்று வாக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால்-கவனிக்க வேண்டியது யாதெனில்-
இருபெரும் கட்சிகளுமே
இனப் பிரச்சனைக்கு
ஊசலாட்டமில்லாத உறுதியான
ஒரு தீர்வினை-தம்
தேர்தல் விஞ்ஞாபனங்களில்
தெளிவுபடுத்திட தவறிவிட்டன.

தொண்டாவின் அவசியமும்
அஷ்ரப்பின் தனித்துவமும்
இரு தலைவர்களுக்கும்
இருக்கக்கூடிய வாக்கு வங்கிகளுக்கு
செலுத்தப்படுகிற மரியாதையாக
அங்கீகரிக்கப்படுகிறதேயல்லாமல்
அவர்கள்-முன்வைக்கும் கருத்துக்கள்
இருபெரும் கட்சிகளாலும்

கவனிக்கப்படுவதாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சனை தீர்வுக்கு
இருவரும் ஒரு திட்டம் தயாரித்தபோதும்,
அதனை நடைமுறைப்படுத்த
தேசிய ரீதியில் யாரோடு
அணி சேருவது என்பதில்
இருவரும் வேறுபட்ட
கண்ணோட்டத்தையே கொண்டுள்ளனர்.

இனப்பிரச்சனைக்கான எந்தவொரு
தீர்வுத் திட்டமும்-
ஆட்சியில் இருக்கும் கட்சியினதும்
புலிகளதும்-
அங்கீகாரம் இல்லாமல்
காத்திரம் பெறும் என்று
கருதுவது தவறாகும்.

திட்டம் இருந்தால் மட்டும் போதாது.
அதனை எப்படி-எவ்வழியில்
முன்கொண்டு செல்வது என்பதும்
முக்கியமானது.

எதிர்வரும் தேர்தலில்
ஐக்கிய தேசியக் கட்சிக்கு
ஐந்து இலட்சம் வாக்குகள்
பெற்றுத் தருவேன் என்கிறார்
தொண்டா.

ஐந்து இலட்சம்
முஸ்லிம் வாக்குளை
பொ.ஜ.முன்னணிக்குப்
பெற்றுத்தருவேன் என்கிறார் அஷ்ரப்.

தேர்தல் முடிவு எப்படியமைந்தாலும்
இருவரில் ஒருவருக்கு சாதகமான
கட்சியே ஆட்சியில் ஏறும்.

அதன்பின்னர்-
இருவரதும் தீர்வுதிட்டத்தை
அதில் ஒருவர் மீது உள்ள
அரசியல் கசப்பால்
ஆட்சிக்கு வரும் கட்சி
அலட்சியம் செய்யமாட்டாது
என்று எப்படிச் சொல்ல முடியும்?

ஆக, அரசியலும்
அரசியல் அதிகாரப் போட்டிகளும்
தேர்தல் ஆரவாரங்களையும் மீறி
எடுத்துச் சொல்லும் உண்மை யாதெனில்-
இனப்பிரச்சனை தீர்வு என்பது
தொட்டுவிடும் தூரத்தில் இல்லை.

■

தேர்தல் கால வேடிக்கைகளை
முரசு வெளிப்படுத்திவருவதால்
விரல் விட்டு எண்ணக்கூடியோரின்
தரம் கெட்ட கூச்சல்களும்
சிரிப்பையூட்டுகின்றன.
சிரிப்பூட்ட முயலும் அவர்களுக்கு,
முரசின் மகிழ்ச்சியான நன்றி!

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கவிதைப்போட்டி இல-57

வந்து குவிந்தவற்றில்
வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில்
இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**விதியிங்கு ஏன் விரைந்தாய்!**

நீர் நிலைகள் வற்றியிங்கு
வெறும் வயிறாய் குடமிருக்க
விதியிங்கு ஏன் விரைந்தாய்!
கழுமரங்கள் வளர்த்திங்கு
கண்ணீரோ கரைபுரள
காரியங்கள் ஏன் வளர்த்தாய்!

பத்மினி சிவசுப்பிரமணியம்
மட்டக்களப்பு.

### வியக்கப்பட்டவை

**தாகம்!**

காலத்தால் தீராத
தணியாத தாகம்
தண்ணீரினாலா
தீரப் போகிறது?

லேகா-கொழும்பு-13.

**காணிக்கை**

அமைதிச் சூரியத்
தேடலில்
நிர்வாணமான
எங்களுக்கு
கண்ணீர் தேசத்தின்
காணிக்கை!

ஷியானி நளீர்-அக்குறணை.

**தட்டுப்பாடு**

பாரினிலே.......
நீருக்குத் தட்டுப்பாடு
போரினிலே.....
செந்நீர் வெள்ளக்காடு.

துரையப்பா விஜயானந்தன்
காரைதீவு-01.

**விடிவு இல்லை**

ஆயிரம் குடமிருந்தென்ன
எங்கள் தாகம் தணிக்க
தண்ணீரில்லையே!
நாட்டில்
ஆயிரம் கட்சிகள்
இருந்தென்ன
தமிழர் எங்களுக்கு
விடிவில்லையே!

க.பூர்ணிமா-தெஹிவளை.

"ஒடி வந்த தாகம் இன்னும்
ஓயவில்லை அண்ணா."

எல்.ஜி.ஜோசப்-கொழும்பு-05.

தண்ணீரு போதாட்டா
கலங்காதே தம்பி
நம்
கண்ணீரு இருக்குதடா
களைப்பாறு நம்பி.

புவனேஸ்வரி ஆறுமுகம்
பசறை.

## கவிதைப் போட்டி இல-60



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 30.07.1994.

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 60

தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772, கொழும்பு.



**நாங்கள்**

அனர்த்தங்கள் தந்த விளைவுகள்
ஆடைகளில்லாத அனாதைகள்
அறுசுவையில்லாத விழுதுகள்
ஆகாரமே நீரான அவலங்கள்.

தெ.லோஜனா-கொழும்பு-15.

கதிரவன் கனலைத் தாங்காக்
குழவிகள் தாகந் தீர்க்க
நதிகளும் வரண்ட தாலே
நல்ல நீர் தேடி வந்து
குதிரென அடுக்கி வைத்த
குடங்களின் அடியிற்கண்ட
அதி சிறு மழைநீர் தன்னை
அருந்துதல் காணீர் ஐயோ.

அன்புமணிதாசன்-ஆரையம்பதி.

**மழையே நீ வாராய்**

மண்குடமே வெறுங்குடமே!
தாகந்தீர்க்கும் நிறைகுடமே!
கோடை நீர் வற்றியதோ?
கொடிய மனிதர் மலிந்தனரோ?
யாதுமறியாப் பாலகர்கள்
தாகந்தீர்க்க அலைகிறார்கள்.
வான் நோக்கி-மழைநோக்கி,
வருணனையே வேண்டிடுவோம்.

லீலாவதி குணரத்தினம்-கொழும்பு-06.

**நிர்வாண உண்மை**

தேர்தல்கால வாக்குறுதிகளாய்
அத்தனையும் வெற்றுகுடம்-தம்பி
பருகுவதில் கொஞ்சம் தா
என் தாகமும் தணிந்துவிடும்.

ஷர்மி-கண்டி.

**நெஞ்சம் கலங்குதடி**

குடங்கள் ஆயிரம் குவிந்தென்ன-இங்கே
தண்ணீர் பஞ்சமடி பாப்பா
பால் மணம் மாறா பாலகர்-கண்டு
நெஞ்சம் கலங்குதடி பாப்பா.

வத்தளை-ஜெகதீஸ்.

**தேசிய நீர்**

செந்நீரும், கண்ணீருமாய்
சேர்த்து நெய்த மயான பூமியில்
ஏந்தி வந்த ஏழை மானுடம்
சிந்திய ஏழ்மைக் கண்ணீரோ
சேர்ந்திங்கு தாகம் தணித்தது?

நிவேஷலா முரளிதரன்-கல்லடி-உப்போடை.

குடத்தில் இருந்தால்தானே
குவளைக்கு வரும்!
படத்தைப் பார்த்தால்
கவிதையும் வரும்
மனக் கவலையும் வரும்.

எஸ்.கணேசமூர்த்தி
அக்கரைப்பற்று-08.

**சாதனை**

ஈயக்குண்டுகளும்
இரும்பு இதயங்களும்
இதுவரை சாதித்தவை
இந்த
வறுமையும்
வெறுமையும்தான்

த.தயாபரன்-ஆரையம்பதி.

# வாசகசாலை

அன்பின் முரசே,

எக்ஸ்ரே ரிப்போர்ட், அலசுவது இராஜதந்திரி, உலகரவுண்டப் போன்றவை என்மனதிற்கு மிகமிக புத்துணர்ச்சியூட்டுகிறது. உனது சேவை என்றும் மணம் பரப்ப எனது நிறைவான பாராட்டுக்கள்.

எஸ்.பரமேஸ்வரன்-அக்கரைப்பற்று-07.

□□

**கொள்ளை மகிழ்வு**

முரசே!...தாமதிக்காதே!!
இரயில் வரத் தாமதித்தால்-முரசு
கையில் வரத் தாமதமாகிறதே?
காலையில் கை கிடைத்தால் மனசு
கொள்ளை மகிழ்வில் சந்தோஷம் பாடுமே?
பிரிய முரசே! கவனம் எடுப்பாயா
பத்திரிகை வாகனத்தில் வந்து சேர்வாயா...?

கோட்டைமுனை-முத்துமணி.

□□

**கொலை மிரட்டல்**

அன்பு முரசே!

அருகி வந்த எழுத்துப் பிழைகள் முரசு 58இல் பெருகிவிடக் கண்டேன். தயவுடன் கவனிக்கவும். எம் ரசிகனை அறிமுகப்படுத்தாத நீ கொல்லப்படுவாய்!

கொலை செய்பவர் கிரைம்புலி குலாம்ஷா.
கொலை விழும்நேரம்-இரவு 12.00 மணி.
கொலை விழும் திகதி- ஜுலை 32.

எஸ்.பத்மா, உமாஜினி
எம்.நவ்சாத்-கொழும்பு-10.

□□

என் அன்பின் முரசே,

நீ வாரமலராகி வந்து என்னைப் போன்ற வாசகர்களை மாத்திரமல்ல. நாட்டின் அரசியல் பெரியவர்களையும் கூடச் சிந்திக்கச் செய்கின்றாய். மகாபாரதம், எக்ஸ்ரே ரிப்போர்ட், கொலை விழும் நேரம் ஆகியவைகளைத்தரும் நீ எனது சிந்தையில் அமர்ந்துவிட்டாய்.

எஸ்.வேலு-களுத்துறை.

**காரசார நேரம்**

உன்னில் உதயமாகும் அத்தனை அம்சங்களும் உன்னதமானவையே! சிறுகதைகள், கவிதைகள், நில்! கவனி!! முன்னேறு!!! தேன் கிண்ணம், கொலை விழும் நேரம், தொடர்கதை காரசாரமாயுள்ளது. உன் சேவை எமக்குத் தேவை. அன்பு முத்தங்கள் பல.

கலைச்செல்வன். பௌஸர்
ஸலாம்-தர்காநகர்.

□□



தித்திக்கும் தினமுரசே!

நீ தாங்கிவரும் யாவும் தரமானவை. குறிப்பாக அரசியல் அலசல், எக்ஸ்ரே ரிப்போட், அதிரடி அய்யாத்துரை போன்றவை சமகால நிகழ்வுகளை சித்தரிப்பதுடன், உலகக் கிண்ண உதைபந்தாட்டம் போன்ற முக்கிய நிகழ்வுகளை சுவையாகவும், சுறுசுறுப்பாகவும் தருவதில் உனக்கு நிகர் வேறேது?

சிந்தியா! பதில்களுக்காக இன்னும் சிந்திக்கிறாரா? மீண்டும் அவரின் வரவை எதிர்பார்க்கின்றேன். உன்சேவை தொடர வாழ்த்துக்கள்.

ஏ.டப்ளியூ.எம்.பௌஸ்-ஏறாவூர்.

□□

புத்தம் புதிய என் அன்பு மலரே,

நீ தாங்கி வரும் உலக அதிசயம், புராண கதைகளில் ஒன்றான மகாபாரதம், இராஜதந்திரியின் அரசியல் அலசல், அனைத்தும் வெகு ஜோர்.

எஸ்.சரோஜா-ஹட்டன்.

□□

அன்பின் முரசே,

உன்னுடைய ஒவ்வொரு ஆக்கங்களும் தேன் துளிகள். இளம் எழுத்தாளர்களில் - அதிலும் பெண் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் உன் பணி மகத்தானது. ஷர்மிளா இஸ்மாயில் போன்றோரின் ஆக்கங்கள் என் போன்ற பெண்களைக் கவர்ந்து வருகின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை. உன் பணியோடு எழுத்தாளர்களின் பணி வளர என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

செல்வி. யசோதினி-புத்தளம்.

□□

அன்பின் முரசே, உன்னுள் அடங்கியுள்ள அனைத்து விடயமும் எங்களை வியப்பில் ஆழ்த்துன்றன. சிறுகதை அருமை. ஹரீரா அனஸ், எம்.சுரேஷ் ஆகியோருக்கு எமது பாராட்டுக்கள்.

எம்.பி.சுகைனா பேகம்
தோப்பூர்-02.

□□

முரசே எம் இதய அரசே!

வாரம்தோறும் உலாவரும் தினமுரசே! வளரும் கவிஞர்களை உருவாக்கும் கவியரசே, வளமான படைப்புக்களை தரும் கலையரசே! எம் இதயத்தில் குடிகொண்டிருக்கும் இன்ப முரசே. நீ வாழ்க! வளர்க!

கலைவாணி, ஜோதி, சதாசிவம்
புவக்பிட்டிய.

□□

**இன்று முதல்.....**

என் அன்புக்குரிய முரசே!

நீ தரும் இலக்கிய நயம், நில்! கவனி!! முன்னேறு!!! இவைகள் எம்மை வியக்கவைப்பதுடன் கொலை விழும் நேரம் விறுவிறுப்பை ஏற்படுத்துகிறது. இன்றிலிருந்து நான் உன் ரசிகை. உன் நட்பை போல் நட்பு வைக்க உள்ளதை விட வேறும் இந்த வையகத்தில் கிடையாது என்று கூறி பல்லாண்டுகாலம் வாழ என் வாழ்த்துக்கள்.

தி.காந்திமதி-பொத்துவில்-03.

□□

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# ஆறு இலட்சம் வாக்குகள் தொண்டாவிடம்!

# பொதுத் தேர்தல் முடிவை மலையகம் மாற்றுமா?

(அலுவலக நிருபர்)

மலையகத்தில் உள்ள தமிழ் வாக்காளர்களில் குறைந்தது ஆறு இலட்சம் வாக்காளர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு வாக்களிக்கக் கூடும் என்று அரசியல் கணிப்பாளர்கள் சிலர் கூறியுள்ளனர்.

மலையகத்தில் ஏறக்குறைய எட்டு இலட்சம் தமிழ் வாக்காளர்கள் இருக்கின்றனர். அதில் ஆறு இலட்சம் வாக்குகள் திரு. தொண்டமானுக்கு ஆதரவாக விழக்கூடும் என்று கொழும்பில் இருந்து வரும் '[illegible]' பத்திரிகை தெரிவித்துள்ளது.

சமீபத்தில் கண்டியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் திரு. தொண்டமான் உரையாற்றினார்.

தமது 7 உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்வார்கள். புதிய ஆட்சியை அமைப்பதில் அவர்கள் தீர்க்கமான பங்கு வகிப்பார்கள் என்று தெரிவித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் திரு. தொண்டமானின் வாக்கு வங்கிகளில் பாரிய நம்பிக்கை வைத்துள்ளது.

அடுத்து ஆட்சி அமைக்கக்கூடிய ஆசனங்களைப் பெறுவதில் பொதுஜன ஐக்கிய முன்னணியோடு சமபல நிலை ஏற்பட்டால் திரு.தொண்டமான் 'கிங் மேக்கராக' மாறும் சாத்தியம் ஏற்படலாம்.

மறுபுறத்தில் சிறுபான்மை இன கட்சிகளது பலத்தோடுதான் புதிய ஆட்சி அமையும் நிலை ஏற்பட்டால் இனப் பிரச்சனை போன்ற முக்கிய விடயங்களில் தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டிய நிலை புதிய ஆட்சிக்கு ஏற்படலாம்.

பொதுஜன ஐக்கிய முன்னணி மலையக தமிழ் வாக்காளர்களை கவர்ந்திழுக்கக்கூடிய தேர்தல் வியூகத்தை வகுக்கத் தவறி விட்டதாகவே பரவலான அபிப்பிராயம் நிலவுகிறது.

திரு.சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியோடு தேர்தல் உடன்பாடு கொள்ளும் நிலையை பொதுஜன ஐக்கிய முன்னணி தவறவிட்டமையும் வாக்குகளை கவரும் வியூகத்தில் ஏற்பட்ட விரிசல் என்று கூறப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பாக பதுளை மாவட்டத்தில் போட்டியிட விருந்த தமிழ் வேட்பாளர் ஒருவரது பெயர் கடைசி நேரத்தில் நீக்கப்பட்டதால் அம் மாவட்டத்தில் தனக்குரிய சாதக நிலையை முன்னணி இழந்துள்ளது.

இதேபோல் கேகாலை மாவட்டத்தில் போட்டியிடவிருந்த ஒரு முஸ்லிம் வேட்பாளரின் பெயர் நீக்கப்பட்டு அவரது இடத்தில் வேறு ஒருவரின் பெயர் இடம்பெற்றுள்ளதும் அம் மாவட்டத்தில் பொ.ஜ.ஐ முன்னணிக்கு பாதகம் ஏற்படுத்தியுள்ளது.

மலையகத்தில் திரு.தொண்டமான் மூலமாக ஐக்கிய தேசியக் கட்சி பெறும் வாக்குகளை ஈடுசெய்ய முஸ்லிம் காங்கிரஸ் மூலமாகப் பெறப்போகும் வாக்குகள் உதவலாம் என்று கணக்கிட்டே பொ.ஜ.ஐக்கிய முன்னணி அலட்சியமாக இருந்துவிட்டது என்று அரசியல் கணிப்பாளர்கள் கூறுகின்றனர்.

மறுபுறத்தில் ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ போன்ற தமிழ் கட்சிகள் பெறப் போகும் ஆசனங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாகப் போகக்கூடும்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்பைப் பொறுத்தவரை தனது எதிர்கால அரசியல் இருப்பை உறுதிசெய்யவே பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாக பேசிவருகிறது.

ஆனால், அக்கட்சிக்கு ஒரு ஆசனம் கிடைப்பதுகூட சந்தேகமான நிலையில் உள்ளதால் அதன் ஆதரவைக் கருத்தில் கொள்ள முடியாது.

கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி அலை மேலோங்கி வருவதால் எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின் கூட்டணியினரின் பாராளுமன்றப் பிரவேசமும் ஒரு முக்கிய நிகழ்வாகவே இருக்கும்.

எனவே-பொதுஜன ஐக்கிய முன்னணி மலையகத்தில் தனது தேர்தல் வியூகத்தை திட்டமிட்டு வகுக்கத் தவறியதால் அங்கு ஒரு பாதகமான நிலையினை எதிர் நோக்கியிருக்கிறது.

அரசியல் கணிப்பாளர்கள் கூறுவது போல திரு.தொண்டமான் ஆறு இலட்சம் வாக்குகளை பெற்றுக்கொண்டால் எதிர்கால தேசிய அரசியலில் மலையகம் தீர்க்கமான ஒரு பங்கை வகிக்கக் கூடும்.

மறுபுறத்தில் அதனால் பாதிக்கப்படும் கட்சி எதுவாக இருந்தாலும் அது இனவாதப் பிரச்சாரத்தை முன்னெடுக்கும் நிலைக்கு செல்லக்கூடும் என்று அரசியல் கணிப்பாளர்கள் கூறுகின்றனர்.

## தமிழ் கட்சிகளின் குறியில் கூட்டணி!

## கிழக்கில் ஏட்டிக்குப் போட்டியான பிரசாரம்

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட தேர்தல் பிரசாரங்கள் தீவிரகட்டத்தை அடைந்துவருகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்புக்கும் எதிராக ஏனைய தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டு நிற்கின்றன.

ஈ.பி.டி.பி. கிழக்கில் போட்டியிடவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்பை பொறுத்தவரை கிழக்கில் ஒரு ஆசனத்தைக்கூட கைப்பற்றக் கூடிய பிரசாரபலம் மற்றும் ஆட்பலம் இல்லாத நிலையில் காணப்படுகிறது.

இந்திய அமைதிப்படைக் காலத்தில் அதன் செயற்பாடுகள் இன்னமும் மக்களின் நினைவில் இருப்பதால் அதன் இன்றைய [illegible] மாறும் [illegible] வேறொரு நிலையில் காணப்படுகிறது.

எனினும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தனது கௌரவத்தைக் காப்பாற்றக் கூடியளவுக்கு குறிப்பிட்டளவு வாக்குகளையாவது பெற்றுக் கொண்டால் போதும் என்ற நிலையில் மிகக் கடுமையாக முயற்சி செய்கிறது.

ஆயிரம் வாக்குகள்கூட கிழக்கில் அதற்கு விழவிடப் போவதில்லை என்று அங்கு போட்டியிடும் தமிழ் கட்சி ஒன்றின் வேட்பாளர் அடித்துக் கூறுகிறார்.

வெல்ல முடியாத அணிக்கு வாக்குகளை விரயமாக்க வாக்காளர்கள் விரும்பமாட்டார்கள் என்ற தேர்தல் சூத்திரம் ஈ.பி.ஆர்.எல். எஃப்பின் காலைவாரக்கூடும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியை பொறுத்தவரை இம்முறை ஏனைய தமிழ் கட்சிகளுக்கு மிகப் பாரிய சவாலாக உருவெடுத்திருக்கிறது.

தேர்தல் அனுபவமிக்க அதன் தலைவர்கள் கூட்டணிக்கு கிடைத்துள்ள பெரிய பலம்.

படைகளால் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளை எடுத்துக்காட்டிப் பேசுபவர் என்று திரு.ஜோசப் பரராஜசிங்கத்திற்கு இருக்கும் நல்ல பெயர் வாக்குகளை அறுவடை செய்ய கைகொடுக்கும்.

தான் விடுத்த அறிக்கைகள் பலவற்றை சுவரொட்டியாக வெளியிட்டுள்ள ஜோசப் பரராஜசிங்கம் தனது பணிகளை வாக்குகளாக மாற்றும் கலை தெரிந்தவராக இருக்கிறார்.

ரெலோவின் பட்டியலில் திரு.கருணாகரன் வாக்காளர் பலம் உள்ள வேட்பாளர்.

ரெலோ பற்றிய விமர்சனங்கள், குறைகள் மக்களிடம் நிலவும் போதும் கருணாகரனுக்கு என்று இருக்கக்கூடிய வாக்கு வங்கிகள் அவருக்கு கைகொடுத்து தூக்கிவிடும்.

மட்டக்களப்பில் முஸ்லிம் வாக்காளர்களது வாக்குகளை சிதறவிடாமல் முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்ற முடிந்தால் ஒரு ஆசனம் நிச்சயமானது. பெரும்பாலும் ஒரு ஆசனம் மட்டக்களப்பில் முஸ்லிம் காங்கிரஸ் வசம் செல்லக்கூடும் என்பதே தற்போதைய நிலவரமாகும்.

மட்டக்களப்பு- அம்பாறையில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனக்கு மூன்று ஆசனங்கள் கிடைக்கும் என்றுஎதிர்பார்க்கிறது.

ஆனால் இரண்டு ஆசனங்கள் உறுதி என்பது தற்போதைய நிலவரம்.

ஐக்கிய தேசியக் கட்சியும் மட்டக்களப்பில் ஒரு ஆசனத்தை கைப்பற்ற கடும் போட்டியில் இறங்கக்கூடும்.

ஏனைய சுயேச்சைக்குழுக்கள் வாக்குகளைப் பிரிக்கும் வேலையைச் செய்யலாமே தவிர வெற்றி பெறுவது சாத்தியமில்லை.

முன்னரே முரசில் குறிப்பிட்டதுபோல, ஸ்ரீனிவாசன் என்னும் முன்னாள் எம்.பிக்கு பாதுகாப்பான நம்பிக்கையாளராக நடித்து அவரது பணத்தை தூக்கிக்கொண்டு ஓடி பொலிசில் மாட்டிய கோபித ராஜா என்னும் காளிதாஸ் தலைமையிலும் ஒரு குழு எம்.பிக்களாக ஆசைப்பட்டு தேர்தலில் நிற்கிறது.

காளிதாஸ் என்பவர் மஜிக் வித்தைகள் காட்டிக்கொண்டிருக்கிறார். இக்குழுவிடம் தற்போது பணம் புரளுவதால் பின்னணியில் வேறு யாரும் இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. வாக்குகளை பிரிக்கும் முயற்சிக்கு இச் சுயேச்சைக்குழு துணை போகிறதோ என்று சந்தேகிக்கப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் அதற்கு குறிப்பிட்டு சொல்லும்படியான செல்வாக்கு இருப்பதாக கொள்ள முடியாது.

மட்டக்களப்பில் ஏட்டிக்குப் போட்டியான தமிழ் கட்சிகளது பிரசாரத்தில் கூட்டணியினரின் அனுபவம் உடனுக்குடன் பதில் சொல்லி எனைய கட்சிகளது வாதங்களை உடைக்க உதவுகிறது.

## பிரசாரக் களத்தில் கதிரை முன்னணியில்

கொழும்பு மாவட்டத்தில் தற்போதைய நிலவரப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசார வேகம் மந்த நிலையில் காணப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சிறிசேன குரே ஓரம் கட்டப்பட்டதும், அவரது ஆதரவாளர்கள் சிலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டதும் வழமையான ஐ.தே.கட்சி பிரசாரத்திலிருக்கும் பரபரப்பினை குறைத்திருக்கிறது.

நீலக்கொடிகளும், கதிரைச் சின்னம் கொண்ட பிரசுரங்களும் பரவலாகக் காணப்படுகின்றன.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவோரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மறைந்த அத்துலத் முதலியின் பாரியார் சிறிமானி ஆகியோர் முக்கியமானவர்கள்.

சிறிமானியின் வெற்றி அநேகமாக உறுதியாகிவிட்டது போலவே பேசப்படுகிறது.

பிரதமர் ரணில் கடுமையான போட்டியினை எதிர்நோக்கியிருக்கிறார்.

திருமதி சிறிமானியை பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளராக போட்டியிட வைத்ததின் மூலம் கொழும்பில் அத்துலத் முதலி ஆதரவாளர்களில் கணிசமானவர்களை முன்னணி தன் பக்கம் திருப்பியுள்ளது.

மறுபுறத்தில் ஐ.தே.கட்சி, மறைந்த ஜனாதிபதி பிரேமாவின் துணைவியார் ஹேமாவை தன் பட்டியலில் தவறவிட்டு விட்டது. அதனால் பிரேமா ஆதரவாளர்களில் சிறிசேன குரே, ஹேமா என்னும் இருதரப்புக்களும் தேர்தல் பிரசாரத்தில் கூடிய அக்கறை காட்டக்கூடும் என்று எதிர்பார்க்க முடியாது.

## போட்டியில் இருந்து விலகுங்கள்!

## புலிகளது அரசியல் பிரிவு அறிவித்தல்!!

கிழக்கு மாகாணத்தில் தேர்தலில் போட்டியிடும் அரசில் கட்சிகளதும், சுயேச்சைக் குழுக்களதும் வேட்பாளர்களுக்கு புலிகளது அரசியல் பிரிவு எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட புலிகளது அரசியல் பிரிவுத் தலைவர் விமல்ராஜ் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள அக்கடிதத்தில், "தமிழர்களது போராட்டத்தை நசுக்க முற்படும் அரசாங்கத்தினால் நடத்தப்படும் தேர்தலை நாம் அனுமதிக்க முடியாது.

"இத் தேர்தலில் நீங்கள் போட்டியிடுவதை நாம் அனுமதிக்க மாட்டோம். போட்டியிடுவதில் இருந்து நீங்கள் விலகிக்கொள்ளாவிட்டால் அதன் விளைவுகளைச் சந்திக்கவேண்டி ஏற்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காமினி-ரணில் விருப்பு வாக்கு போட்டி?

நடைபெறவுள்ள தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் ரணிலும், அமைச்சர் காமினியும் தமக்குரிய விருப்பு வாக்குகளை அதிகம் பெறும் போட்டியில் இறங்கியுள்ளனர்.

திருமதி ஹேமா தேர்தலில் போட்டியிடவில்லை. திரு.சிறிசேன குரேயின் பெயர் தேசியப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள போதும் அவர் பிரசாரத்தில் தீவிரம் காட்டுவதாகத் தெரியவில்லை. எனவே கொழும்பில் அதிக விருப்பு வாக்குகளை பிரதமர் ரணில் பெறமுடியும் என்று அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

கொழும்பில் இருந்துவரும் 'ராவய' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில், கொழும்பு மாவட்டத்தில் முதலாவது விருப்பு வாக்கு ரணிலுக்கும், இரண்டாவது விருப்பு வாக்கு [illegible], மூன்றாவது விருப்பு வாக்கு ஒசி அபயகுணசேகராவுக்கும் அளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட திரு.காமினி திசாநாயக்கா கண்டி மாவட்டத்தில் போட்டியிடுகிறார். அங்கு தனது நண்பரான சரத் அமுனுகமவுடன் விருப்பு வாக்குகளை பகிர்ந்து கொள்ளும் நிலை அவருக்கிருக்கிறது.

நுவரெலியாவில் இ.தொ.கா. வேட்பாளர்களுக்கு பெரும்பான்மை விருப்பு வாக்குகள் சென்றுவிடும் என்பதால், நுவரெலியாவை விட கண்டி மாவட்டமே சிறந்தது என்று காமினி வட்டாரம் கருதியதாகவும் கூறப்படுகிறது.

கண்டி மாவட்டத்தில் ஐ.தே.கட்சியின் தலைமை வேட்பாளரான ஏ.சி.எஸ். ஹமீடுக்கும் கணிசமான விருப்பு வாக்குகள் செல்லக்கூடும் என்று கருதப்படுகிறது.

## முரசின் செய்தியில் தவறு

## ஈ.பி.டி.பி.

இம்முறை யாழ் மாவட்டத்தில் மட்டுமே ஈ.பி.டி.பி. போட்டியிடுகிறது.

கிழக்கில் போட்டியிடுவோரில் சிறந்தவர்களை ஈ.பி.டி.பி. ஆதரிக்கும் என்று அந்த அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் கிழக்கில் தாம் யாரை ஆதரிக்கிறோம் என்னும் முடிவை இதுவரை ஈ.பி.டி.பி. தெரிவிக்காமல் மௌனம் சாதித்து வருகிறது.

"தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவளிப்பது பற்றி யோசித்தோம். ஆனால் அவர்கள் யாழ் மாவட்டத் தேர்தல் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்த நிலையில் அந்த முடிவை பரிசீலிக்க வேண்டி ஏற்பட்டது. வழக்குக்கு பயந்து ஆதரிப்பதாக கருதக் கூடிய சிலர் கூட்டணிக்குள் இருக்கிறார்கள்" என்று ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் கோபாலகிருஷ்ணன் என்பவரை தமது கட்சியும் ஆதரிப்பது போன்று கடந்த வார முரசில் வெளியான செய்தியை ஈ.பி.டி.பியின் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் திரு.ஆர்.பி.மணி மறுத்துள்ளார். கோபாலகிருஷ்ணன் ஈ.பி.டி.பியில் சேர விரும்பி பேசியது உண்மையென்றும், ஆனால் அவரை தாம் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை, அவருக்கு ஆதரவு வழங்கப் போவதுமில்லை என்று அவர் கூறியுள்ளார்.

## வன்னியில் வைத்தியர்கள் வேலைநிறுத்தத் திட்டம்

வவுனியா ஆதார வைத்தியசாலை வன்னிப் பகுதியிலேயே மிகவும் அத்தியாவசியமானதொன்றாக கருதப்படுகின்றது. வவுனியாவின் இராணுவ கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள ஓமந்தை, நெடுங்கேணி, மடு, கிளிநொச்சி போன்ற இடங்களில் இருந்தும் நோயாளிகள் சிகிச்சைக்காக வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு வருகின்றார்கள்.

இங்குள்ள மக்களின் தேவையை பூரணப்படுத்த இருபத்தியாறு வைத்தியர்களும் நான்கு விசேட வைத்திய நிபுணர்களும் தேவையாக உள்ளனர். ஆனால் தற்போது 10 வைத்தியர்களும் ஒரு வைத்திய நிபுணருமே கடமையாற்றுகின்றார்கள்.

வைத்தியர் பற்றாக்குறையை ஆராயுமிடத்து வைத்தியர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து இங்கு கடமையாற்ற விருப்பம் இருந்தும் இடமாற்றம் பெற்றுவர தயங்குகின்றார்கள். வைத்தியர்களுக்கான தங்குமிட வசதி மிகக் குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

இவற்றை கவனத்திற் கொண்டும் எவ்வளவோ இன்னல் படும் மக்களின் நலனை கருத்திற்கொண்டும் அடிப்படை கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மாதம் வைத்தியர்களினால் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து சுகாதார அமைச்சின் செயலாளர் தலையிட்டு மேற்கொண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்ததின் பின்பு வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

"ஆயினும் இதுவரை எமது கோரிக்கைகள் பெரும்பாலானவை நிறைவேற்றப் படவில்லை.

"இவ்வாறான நிகழ்வுகளினால் விரைவில் இங்குவந்து கடமையாற்றவுள்ள இரு விசேட வைத்திய நிபுணர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

இவர்கள் இங்கு கடமையாற்ற வருவதனால் சிறிது ஆறுதலடைந்த மக்கள் ஏமாற்றமடையும் நிலை தோன்றியுள்ளது.

அதுமட்டுமல்லாது தற்போது இங்கு கடமையாற்றும் வைத்தியர்களும் அதிருப்திக்குள்ளாகி வேறு இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் நிலைமையும் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்.

"இவ்வாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமது கோரிக்கைகளை முன் வைத்து மீண்டும் வேலை நிறுத்தத்தில் குதிக்க யோசித்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தேர்தலுக்காக மண்ணை விற்கிறார்கள்

## தமிழ் அமைப்புக்கள்மீது பாலசிங்கம் பாய்ச்சல்!

"எதிர்வரும் தேர்தல்களில் தமிழ் அமைப்புக்கள் போட்டியிடுவது எமது மண்ணை விற்பதற்கு சமமாகும்" என்று புலிகளது அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார்.

நெல்லியடியில் நடைபெற்ற கரும்புலிகள் நினைவுதினக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

"பேச்சுவார்த்தைக்கு நாம் தயாராகவே இருக்கிறோம். ஆனால் நாடாளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்கள் முடியும்வரை பேச்சுவார்த்தை நடத்த நாம் தயாரில்லை.

"புளொட், ரெலோ, ஈரோஸ் என்னும் மூன்று அமைப்புக்கள் தேர்தலுக்காக கூட்டு முன்னணி அமைத்துள்ளன. அக்குழுக்கள் தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் துரோகம் இழைத்து வருகின்றன. கடந்த 40 வருடகாலமாக நாம் ஏமாற்றப்பட்டு வருகிறோம். இவ்வாறான நிலையில் தேர்தலில் தமிழ் குழுக்கள் போட்டியிடுவது எம் மண்ணை பிரித்து விற்பதற்கு சமமாகும்" என்றும் திரு.பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# யாழ் மாவட்ட தேர்தலில் வாக்கு வேட்டை!

## படுக்கைகள்-பசைவாளிகளோடு செல்லும் கட்சிகள்!!

## தீவுப் பகுதி மக்கள் மீது திடீர் கரிசனை

யாழ் மாவட்டத் தேர்தல் அறிவிக்கப் பட்டவுடன் தீவுப்பகுதிகளுக்கு செல்வதற்கு தமிழ் கட்சிகள் பல போட்டி போடுகின்றன.

அங்கு கடந்த நான்கு வருடங்களாக ஈ.பி.டி.பி. கட்சியினர் இருக்கின்றனர். இப்போது தேர்தலை முன்னிட்டு ஈ.பி.ஆர். எல்.எஃப்., ஈரோஸ், ரெலோ போன்ற கட்சிகளது உறுப்பினர்கள் கப்பல் மூலமாக அங்கு சென்றுள்ளனர்.

படுக்கை விரிப்புக்கள், ஜெனரேட்டர், பெற்றோமாக்ஸ், மாஸ்ரிக், பிஸ்கட், மண்ணெண்ணெய், பசைக்கான மாவு, பெயின்ற் ரின், பிரஷ் போன்ற தேர்தல் பிரச்சாரத்திற்கு தேவையான பொருட்கள் சகிதம் கட்சிகளது உறுப்பினர்கள், வேட்பாளர்கள் ஆகியோர் தீவுப்பகுதியில் போய் இறங்கியுள்ளனர்.

இக் கட்சிகள் சிலவற்றுக்கு தீவுப் பகுதியில் தங்கியிருப்பதற்கு இடம் தேடுவதில் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

தேர்தலுக்காக என்று சென்றுள்ளவர்களோடு அங்குள்ள மக்கள் சரியாக முகம் கொடுத்து பேசுகிறார்கள் இல்லை என்று கூறப்படுகிறது.

இதேவேளை ஈ.பி.டி.பி., ரெலோ, புளொட் ஆகிய அமைப்புக்கள் படையினரோடு சேர்ந்து செயற்படுவதாக கண்டித்து பிரசுரம் வெளியிட்டுள்ள ஈ.பி.ஆர். எல்.எஃப்., கடற்படையினரோடு சென்று-நயினாதீவு மக்களிடம் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதையும் அவதானிக்க முடிகிறது.

தமது பிரசாரக் குழுவில் சிங்கள உறுப்பினர் ஒருவரை இணைத்து அனுப்பியிருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். தாம் படையினருக்கு எதிரானவர்களல்ல என்று தனிப்பட்ட ரீதியில் படையினரிடம் கூறிய தாகவும் அவர்களது பாதுகாப்பைக் கோரிய தாகவும் தெரிய வருகிறது. ஆனால் தமது தேர்தல் பிரசுரத்தில் படையினரோடு நிற்பவர்கள் என்று ஏனைய தமிழ் கட்சிகளை ஈ.பி.ஆர்.எல்.எஃப். தாக்கியிருந்தது.

தீவுப் பகுதியில் தமக்கு நிலைமை சாதகமாக இல்லை என்பதால் ஈ.பி.ஆர். எல்.எஃப். அங்கிருந்து தனது குழுவினரை திருப்பி அழைத்துள்ளது.

"தீவில் மக்கள் இருக்கிறார்களா என்று கேட்டவர்களே! இப்போது எங்கே வந்தீர்கள்-திருடவா?"

என்னும் வாசகங்களோடு கூடிய சுவரொட்டிகளும் தீவுப்பகுதிகளில் காணப்படுகின்றன.

யாழ் மாவட்டத் தேர்தலில் ஈ.பி.டி.பி: மீன் சின்னத்தில் சுயேச்சைக் குழு (இல.2) வாக, திரு.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் போட்டியிடுகிறது.

ரெலோ, புளொட், ஈரோஸ் ஆகியவை தராசு சின்னத்தில் திரு.சுதாகரன் தலைமையில் (சுயேச்சைக் குழு இல.1) போட்டியிடுகிறது.

## சர்வானந்தாமீது சிறிமாவின் தணியாத கோபம்

## தேசியப் பட்டியலில் இடம் கொடுக்க மறுப்பு!

மேல் மாகாணசபை ஆளுநராக இருந்த சர்வானந்தாவை ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா அப்பதவியில் இருந்து அகற்றியிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி மீது முன்னர் அனுதாபம் கொண்டிருந்த சர்வானந்தா ஜனாதிபதியின் நடவடிக்கையால் கசப்படைந்தார்.

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாடம் புகட்ட வேண்டும் என்றும், எனவே தேர்தலில் சர்வானந்தா போட்டியிடவேண்டும் என்றும் அவரது நண்பர்கள் சிலர் வற்புறுத்தியிருந்தனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியலில் அவருக்கு ஓர் இடம் பெற்றுக்கொடுக்கவும் முயற்சிக்கப்பட்டது.

திருமதி சந்திரிக்கா அதற்கு சம்மதித்து விட்டதுபோலவே சமிக்கை காட்டியிருந்தார்.

ஆகவே சர்வானந்தா வட்டாரமும் தேசியப் பட்டியலில் அவருக்கு இடம் உறுதி என்று நம்பியிருந்தது.

இதேவேளையில் திருமதி சிறிமாவோ அம்மையாரிடம், சர்வானந்தா விடயம் தெரிவிக்கப்பட்டது.

தேசியப் பட்டியலில் சர்வானந்தாவுக்கு ஓர் இடம் கொடுக்க யோசிக்கும் விடயமும் கூறப்பட்டது.

அவ்வளவுதான்! அம்மையார் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துவிட்டன.

ஜே.ஆர். ஜயவர்த்தன ஆட்சியில் நீதியரசராக திரு. சர்வானந்தா இருந்த போதுதான் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

தனது குடியுரிமை பறித்தவருக்கு தேசியப் பட்டியலில் இடமா? என்று அம்மையார் துள்ளிய துள்ளலில் திரு.சர்வானந்தாவின் வாய்ப்பு காணாமல் போய்விட்டது.

### தேர்தல் ஜோக்



"நம்ம கட்சியின் கூட்டங்களுக்கு கூட்டம் வருவதற்காகவாவது ஏதாவது ஒரு கட்சியுடன் கூட்டணி அமைக்க வேண்டிய இலட்சிய நோக்கம், கொள்கை உறுதி ஏற்பட்டது என்பதை கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்."

## ஏறாவூர் தேர்தல்-கொலை மிரட்டல்

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூரில் பிரசாரங்கள், சுவரொட்டிகள், பாதை விளம்பரங்கள் மூலம் தேர்தல் நடவடிக்கைகள் ஏற்கனவே சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டன. ஐ.தே.க.சார்பில் ஏறாவூர் நகரசபைத் தலைவரும், மட்டு மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளருமான செய்யதலி மௌலானா அவர்களும், ஸ்ரீ.ல.மு.கா. சார்பில் முன்னாள் ஈரோஸ் சுயேச்சைக் குழுவின் பா.உ.ரான பஷீர் சேகுதாவூத் மற்றும் நசீர் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இம்முறை இங்கு இருமுனைப் போட்டியே காணப்படுகிறது.

ஏறாவூர் மக்களின் ஆதரவைத் தனதாக்கிக்கொள்ள ஸ்ரீ.ல.மு.கா. முன்னாள் பா.உ.ஹிஸ்புல்லாவும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளார்.

இதனிடையே தேர்தல் பிரச்சாரத்தின்போது ஆயுதங்கள் பாவிக்கப்பட்டு மக்கள் எச்சரிக்கப்படுவதாகவும், சில முக்கிய பிரமுகர்களைக் கொலை செய்யத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகவும் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. சென்ற 9.07.94 அன்றிரவு அவ்வாறான உபயோகத்திற்கான ஒரு கிறீனைட், ஒரு கிறீஸ் கத்தி என்பன பொலிசாரால் பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மார்ச்சில் நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலின்போது ஏறாவூர் மக்கள் இங்கு போட்டியிட்ட ஐ.தே.க. மற்றும், ஸ்ரீ.ல.மு.கா ஆகியவற்றைத் தோற்கடித்து செய்யதலி மௌலானா தலைமையிலான சுயேச்சைக் குழுவை வெற்றி பெறச் செய்தனர் என்பதும் பின்னர் அவரது சுயேச்சைக்குழுவினர் ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஐ.தே.க.வில் இணைந்து கொண்டனரென்பதும் நினைவிலிருக்கலாம்.

## அஞ்சல் 'பட்டுவாடா'வில் அசிரத்தை

(அக்குறணை நிருபர்)

அக்குறணைப் பிரதேசத்தில் பல இனமக்களும் செறிந்து வாழும் பகுதியான 'பங்கொள்ளாமட' எனும் ஊரில் நீண்ட நாட்களாக ஒரு உப அஞ்சல் அலுவலக மேனும் இல்லாத குறை இருந்து வருகிறது. அஞ்சல் அலுவல்கள் சம்பந்தமாக இவ்வூர் மக்கள் பல மைல்கள் தூரம் செல்லவேண்டிய சிரமத்திற்குள்ளாகின்றனர். அத்துடன் ரதுகோஹதீகல (Rathugohadeegala) தபால் நிலையத்திலிருந்து இவ்வூருக்கென வரும் தபால்காரரை எதிர்பார்த்து நீண்டநேரம் வீட்டு வாசலில் காத்திருக்க வேண்டும். அப்படி இருந்தும் அனேகமான வீடுகளுக்குச் செல்லாமல் வீதியோரத்தில் இருக்கும் வீடுகளில் மற்றவர்களிடம் கொடுக்கும்படி கூறி, முக்கியமான கடிதங்களைக்கூட, கொடுத்துவிட்டுப் போய்விடுவதுண்டு. இச் செயலினால் எத்தனையோ கடிதங்கள் தவறி விடுவதுமுண்டு.

இக்குறை தீர்க்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுக்க வேண்டும். இந்நிலை தொடருமானால் பொதுமக்கள் தபால்மா அதிபருடன் தொடர்பு கொள்ளவிருக்கிறார்கள் என்று பங்கொள்ளாமட தினமுரசு வாசகியொருவர் தெரிவித்தார்.

## தமிழ் மீனவரும்- தனிச் சிங்களமும்!

(திருமலை நிருபர்)

மீன்பிடித்துறை அமைச்சினால் வழங்கப்பட்டுவரும் கடன் விண்ணப்பப் படிவம் தனிச் சிங்களத்தில் மட்டுமே வழங்கப்பட்டு வருவதனால் தமிழ் மீனவர்கள் திகைத்துப் போயுள்ளனர்.

மானிய அடிப்படையில் கடற்றொழில் உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள வழங்கப் பட்டு வரும் விண்ணப்பமே இவ்வாறு தனிச் சிங்களத்தில் அமைந்துள்ளது.

தமிழ்ப் படிவம் கேட்டால், 'விருப்பமானால் இதை நிரப்பிக்கொண்டு வாருங்கள். இல்லையேல் பேசாமல் போங்கள்' என்ற திமிர்த்தனமான பதிலே மீனவர்களுக்குக் கிடைக்கிறதாம்.

தமிழும் அரசகரும மொழியென்று அரசாங்கம் சொல்கிறது. ஆனால் தமிழர் தலைநகரிலேயே தமிழ்ப் படிவம் இல்லை யென்கிறார்களே? என்று மீனவர்கள் முரசு நிருபரிடம் வேதனையோடு கூறினார்கள்.


## விளம்பரப் பகுதி

பாடல் பதிவால் பலரது மதிப்பை பெற்ற ஸ்தாபனம்

VICTOP RECORDING STUDIO

356, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO-6

பழைய-புதிய திரைப்படப் பாடல்கள், பக்திப் பாடல்கள் முக்கியமான கர்நாடக சங்கீதப் பாடல்கள் யாவற்றையும் இசைத்தட்டுக்களில் இருந்து நேரடியாக பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம்.

அதுமட்டுமல்ல, மங்களகரமான நிகழ்ச்சிகளை சிறந்த வீடியோ கமராக்களில் பதிவுசெய்வதோடு, ஸ்டில் புகைப்படங்களையும் சிறந்த முறையில் எடுத்துத் தருவோம்.

மற்றும் மங்கள நிகழ்ச்சிகளுக்கு தேவையான அலங்காரப் பொருட்கள் (மேக்கப் செற்) வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

* T.V.—டெக் வாடகைக்கு
* 24 மணி நேரம் குளிரூட்டப்பட்ட எயர்போட்டிற்கான வான் சேவீஸ்.

வீணை, வயலின், ஆர்மோனியம், மென்ரலின், கிதார், மிருதங்கம், தபேலா, சுருதிப் பெட்டி ஆகிய இசைக்கருவிகளை தரமாகத் திருத்திக் கொள்ளவும். புதிய மிருதங்கங்களை தங்களுக்கு ஏற்றமுறையில் தயாரித்துப் பெற்றுக் கொள்ளவும்—

இன்றே நாடுங்கள்

எமது சேவையில் இனிய நாதம்

சங்கீத ரத்தின சாகரம்

இல.1, 10வது ஒழுங்கை

கொள்ளுப்பிட்டி

கொழும்பு-3

(சென்ற்.மைக்கேல் வைத்தியசாலைக்கு எதிரே கடற்கரைப்பக்க ஒழுங்கை)

பாடசாலை பான்ட் வாத்திய கருவிகளுக்கு விசேட கழிவு உண்டு.


### முகவர்கள் தேவை

அவிசாவெல, எஹலியகொட, எம்பிலிப்பிட்டிய, பெல்மடுல்ல, குருவிற்ற, றுவன்வெல்ல

மேற்காணும் ஊர்களில் தினமுரசு வாரமலர் விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். நியாயமான விற்பனைத் தரகு வழங்கப்படும்.

—தொடர்புகளுக்கு—

விநியோக மேலாளர்

இல.5, காவிந்த பிளேஸ்,

கிருலப்பனை, கொழும்பு-6.

CIRCULATION MANAGER

NO:5, Kavinda Place,

Kirulapone, Colombo-6.

### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | |
|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=

தங்க பஸ்பம் கலந்தது 975/=

வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை

*187, செட்டியார் தெரு, கொழும்பு 11, போன்: 421398*


## மழைவந்தால் பெரும் தொல்லை!

(மஸ்கெலியா நிருபர்)

மழை காலங்களில் மஸ்கெலியா நகர் மிக மோசமாக பாதிக்கப்படுகிறது. தெருக்கள் நீண்டகாலமாக செப்பனிடப்படா திருப்பதால் பெருமளவு சேதமடைந்துள்ளன. மழைநீர் தேங்கி குட்டைகள் போல் காட்சியளிப்பதை சர்வசாதாரணமாக காணலாம்.

தெருக்களை திருத்தும் வேலை எந்தத் திணைக்களத்துக்குரியது என்பது இப்பகுதி மக்களுக்கு புரியாத புதிராகவே இருந்து வருகிறது. பிரதேச சபை, தமக்கும் தெரு திருத்தும் வேலைக்கும் சம்பந்தமில்லையென கைவிரித்து விட்டது.

மஸ்கெலியா தனியார் பஸ் நிலைய சுற்றாடலில் பொருத்தமான வடிகாலமைப்பு இல்லாத காரணத்தால் மழைநீர் பிரதான சாலையில் கரைபுரண்டு ஓடும். இதனால் பாதசாரிகள் மிகுந்த அசௌகரியத்துக்கு உள்ளாகிறார்கள். இத் தெருவில் நடப்பது ஆறொன்றை கடக்கும் உணர்வை ஏற்படுத்துகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் தெருவைத் திருத்துவதுடன் மழைநீர் ஓடுவதற்கு வடிகால்களை ஏற்படுத்த வேண்டுமென நகர மக்கள் விரும்புகின்றனர்.

## மீளக்குடியேற்றம்! நேரில் பார்வையிட்டார்!

(நிந்தவூர் நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவிருக்கும் வளத்தாப்பிட்டி பகுதியை வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் . திரு.லயனல் பெர்னாண்டோ நேரில் விஜயம் செய்து பார்வையிட்டார். மீளக் குடியமர்த்தப்படுவோருக்கென ஏற்படுத்தப்பட்டு வரும் வசதிகள் குறித்து அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரும், புனர்வாழ்வு புனரமைப்பு பணிப்பாளருமான ஜனாப்.ஏ.ஏ.பாவா ஆளுநருக்கு விளக்குவதைப் படத்தில் காண்க. சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் ஜனாப்.ஏ. மன்சூரும் படத்தில் காணப்படுகின்றார்.

## மாகாண சபைக்கு நீண்ட விடுமுறை

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபையின் அடுத்த கூட்டம் ஆகஸ்ட் மாதம் 23ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பலர் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இதன் பொருட்டே மாகாண சபைக்கு மிக நீண்ட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. பத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இந்தப் பொதுத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளனர்.

### வாசகர் கவனிக்க

முரசுடன் சகல கடிதத் தொடர்புகளுக்கும்-

தினமுரசு வாரமலர்

த.பெ.இல. 1772

கொழும்பு.

என்ற முகவரியினையே குறிப்பிடுங்கள். பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ தரப்படும் ஆக்கங்கள் ஏற்கப்பட மாட்டா.

## விரைவுச்சேவை ஆரம்பம்

(திருகோணமலை நிருபர்)

திருமலை-கொழும்பு விரைவுச் சேவையொன்று திருகோணமலை மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்கு வரத்துச் சேவை அதிகாரிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருமலை-கொழும்பு பயணிகளுக்கு இச் சேவை பெரிதும் உதவிகரமாக இருக்கும் எனப் போக்குவரத்துச் சேவை அதிகாரி 'தினமுரசு'க்குத் தெரிவித்தார்.

தினமும் பிற்பகல் 2 மணிக்கு திருகோணமலையிலிருந்து கொழும்புக்கும், அதிகாலை 4.15க்கு கொழும்பிலிருந்து திருகோணமலைக்கும் இச்சேவை நடத்தப்பட்டு வருகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மாற்றம் வருமா மலையகத் தேர்தலில்?

நாரதர்

ஐ.தே.கட்சியை மீண்டும் ஆட்சியில் ஏற்றுவேன் என்று அமைச்சர் தொண்டமான் ஆணித்தரமாக அடித்துப்பேசியிருக்கிறார்.

அப்படி அடித்துப் பேசுவதற்கு முன்னர் ஐக்கியத் தேசியக் கட்சியோடு திரு.தொண்டா வெட்டொன்று துண்டு இரண்டாக சில விசயங்களை பேசியிருந்தார் என்று ஒரு தகவல்.

ஆளும் கட்சியின் தலைவரான ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா, திரு.தொண்டா முன்வைத்த கோரிக்கைகளில் பலவற்றை ஏற்றுக்கொண்டதாகவும், இரு கட்சிகளது தனித்துவத்தின் அடிப்படையில் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டதாகவும் மற்றொரு தகவல் சொல்லுகிறது.

அந்த ஒப்பந்தத்தை வெளியே தெரிவித்தால் எதிரணியினர் அதற்கு பல்வேறான அர்த்தங்களை கற்பித்து பிரசாரம் செய்வார்கள். எனவே தற்போதைக்கு இரகசியமாக வைத்திருப்பது என்று இரு தரப்பினரும் இணக்கம் கண்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

திரு.தொண்டா முன்வைத்த கோரிக்கைகளில் மிக முக்கியமானதாக திரு.செல்லச்சாமி குழுவினர் ஓரம் கட்டப்படவேண்டும் என்பதுவும் அடங்கியிருந்தது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் திரு.செல்லச்சாமிக்கு ஐ.தே.கட்சி பச்சைக்கொடி காட்டினால் இ.தொ.கா. முகத்தை திருப்பிக்கொண்டு போய்விடும் என்பதுபோல ஜனாதிபதிக்கு சொல்லப்பட்டது.

திரு.செல்லச்சாமியும் மறுபக்கத்தால் புகுந்து விளையாடிப்பார்த்தார்.

'பொறுமையாக இருங்கள். உங்களுக்கு ஒரு ஆசனம் உறுதி. தொண்டாவின், சம்மதத்தையும் பெற்றுவிடலாம். தொண்டாவை கண்டிக்காமல் அடக்கி வாசியுங்கள்' என்று ஆளும் கட்சி தரப்பில் இருந்து செல்லாவுக்கு ஆலோசனை சொல்லப்பட்டதாம்.

ஐ.தே.கட்சியில் ரிக்கற் கேட்டு விண்ணப்பத்தில் கையெழுத்திட்டு அனுப்பி விட்டு, தனது அரசியல் தலையெழுத்து எப்படி அமையப்போகிறதோ என்று செல்லாவும் பரபரப்பாகக் காத்திருந்தார்.

ஆனால், தொண்டா விடுவதாக இல்லை. இ.தொ.காங்கிரசுக்கு மட்டுமல்லாமல் தனது பழுத்த அரசியலுக்கும் வந்த சவாலாகவே செல்லா அணியினரது பிரச்சனையை அவர் கையில் எடுத்துக்கொண்டார்.

ஜனாதிபதியோ வேறு ஆளும் கட்சித் தலைவர்களோ செல்லா விடயமாக அவரோடு பேசிப் பயனில்லை என்று முடிவுக்கு வருமளவுக்கு செல்லாவை ஒரு வழி பண்ணும் முடிவில் தொண்டா உறுதியாக இருந்து வெற்றி பெற்றுவிட்டார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் செல்லா அணியினர் மலையகத்தில் கால்வைத்து நின்று பிரசாரம் செய்ய முடியாத நிலைதான் காணப்படுகிறது.

கொழும்பில் தனது வெற்றியை உறுதி செய்வதே செல்லாவுக்கு பெரும் சவாலாகிவிட்ட நிலையில் அவர் மலையகம் சென்று பிரசாரம் செய்யவோ, அங்கு பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு தேடவோ நேரமிருக்கப் போவதில்லை.

திரு.தொண்டமான் தன்னோடு மோதிய எவரையுமே தனித்து நின்று அரசியலில் முத்திரை பதிக்க விட்டதில்லை.

தொண்டாவை எதிர்த்து வெளியேறியவர்கள் தொடர்ந்து நின்று ஜெயித்ததில்லை என்பதுபோல இ.தொ.காங்கிரசின் பத்திரிகை எழுதியிருக்கிறது.

வி.கே.வெள்ளையன், சோமசுந்தரம், அசீஸ், கே.சுப்பையா, சி.வி.வேலுப்பிள்ளை, சந்தசாமி போன்றோர் தனித்துச் சாதிக்க முடியவில்லை என்று சொல்லி, செல்லாவின் கதையும் அதுதான் என்கிறார்கள்.

ஆனால், திரு.சந்திரசேகரனும் இ.தொ.காவில் இருந்து பிரிந்தவர்தான்.

சாதிக்க முடியாதவர்கள் பட்டியலில் தன்னையும் சேர்த்துவிட முடியாது என்பதை எதிர்வரும் தேர்தலில் தெளிவாக நிரூபிக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்திருக்கிறது.

சந்திரசேகரன் தொண்டாவுக்கு சம பலமுள்ள எதிராளியாக இப்போது இல்லையென்றாலும், தனக்குப் பின்னர் இ.தொ.காவுக்கு அவர் பெரிய சவாலாக உருவாகக்கூடும் என்றே தொண்டாவும் நினைக்கக்கூடும்.

நுவரெலியாவில் திரு.சந்திரசேகரன் சுயேச்சைக் குழுவாக போட்டியிடுகிறார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியோடு உடன்பாடு காண்பதற்கு அவர் பேச்சு நடத்தியிருந்தார்.

இறுதி நேரத்தில் உடன்பாடு கைகூடாமல் போய்விட்டதால் தனித்து போட்டியிடும் நிலை ஏற்பட்டுவிட்டது.

என்றாலும் பொதுஜன ஐக்கிய முன்னணி சந்திரசேகரனை பகைத்துக் கொள்ளும் பிரசாரத்தை நுவரெலியாவில் தவிர்த்துக் கொள்ளவே செய்யும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு திரு.தொண்டா கிடைத்தது போல, தனக்கும் ஒரு பிடி மலையகத் தமிழர் மத்தியில் இருப்பதற்கு திரு.சந்திரசேகரனையே பொதுஜன ஐக்கிய முன்னணி நம்பியிருக்க முடியும்.

தொண்டாவின் பலத்தை உடைக்கும் எதிரணியின் ஆயுதம் திரு.சந்திரசேகரன்தான். எனினும் இறுதிநேர அவசரத்தில் அந்த ஆயுதத்தை கைவிட்டுப்போக வைத்துவிட்டது பொதுஜன ஐக்கிய முன்னணி.

மலையக தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை ஆளும் கட்சியின் பிரதான நம்பிக்கை நட்சத்திரங்களாக திரு.தொண்டாவும், அமைச்சர் ஹமீடும் தேர்தல் அரங்கில் காணப்படுகின்றனர்.

ஆளும் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பது முதல், வேட்பாளர் பட்டியல் தயாரித்து முடிப்பதுவரை அமைச்சர் ஹமீட் இம்முறை முக்கிய பாத்திரம் ஒன்றை வகித்திருக்கிறார்.

கொழும்பில் உள்ள அமைச்சர் ஹமீட் அலுவலகத்தில் உள்ள சகல தொலைபேசிகளும் ஓயாமல் ஒலித்தபடியே இருக்கின்றன.

இடையே வெளிநாட்டுப் பயணம், மற்றும் அமைச்சகப் பொறுப்புக்கள் என்று காலில் சக்கரம் பூட்டியமாதிரி சுழன்றுகொண்டிருக்கிறார் அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீட்.

மிக நீண்டகாலத்திய நம்பகமான ஒரு தலைவர் என்ற ரீதியில் ஹமீடின் குரல் ஜனாதிபதியிடமும் எடுபடுகிறது.

வெளியுறவு அமைச்சகத்தின் அருகிலேயே ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமும் இருப்பதால் அடிக்கடி ஜனாதிபதியை சந்தித்து ஆலோசனை கலக்கவும் அவருக்கு வசதியாக இருக்கிறது.

தேர்தல் பிரசார செலவுக்கு தாராளமாக அள்ளி வழங்கக்கூடிய அமைச்சர் காதரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்துள்ள பலம் என்று சொல்ல முடியும்.

தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ளதால் ஆவேசமான மோதல்களும் அரங்கில் தோன்றுகின்றன.

மறுபுறம் திரு.காமினி திசாநாயக்கா தனது மலையக செல்வாக்கை தக்கவைத்துக் கொள்ள சகல சக்திகளையும் திரட்டிக் கொண்டு களத்தில் இறங்கியிருக்கிறார்.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிரான ஈவிரக்கமற்ற ஒரு பிரசாரத்தை நடத்திவிட்டு இம்முறை ஐ.தே.கட்சி வேட்பாளராக செல்வதில் அவருக்கு சங்கடங்கள் இல்லாமல் இல்லை.

இம்முறை தனது செல்வாக்கை அவர் நிரூபித்துக்காட்டினால்தான் ஆளும் கட்சிக்குள் தனது அந்தஸ்த்தை அவர் உயர்த்திக்கொள்ள முடியும்.

மீண்டும் ஐ.தே.கட்சி வெற்றி பெற்றால் மிக முக்கிய அமைச்சர் பொறுப்பு கிடைப்பது அவர் பெறப்போகும் வாக்குகளது எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தால்கூட, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மிக முக்கிய தலைவராக அவர் அங்கீகரிக்கப் படுவதற்கும் தனது செல்வாக்கை தெரியப் படுத்துவது அவசியமாகும்.

போட்டி கடுமையாக இருக்கிறது. அதனால் வெற்றியோ தோல்வியோ தமது தனிப்பட்ட செல்வாக்கையாவது நிரூபித்தால் தான், தோல்விக்கு தலைமை மீது காரணம் சொல்ல முடியும் என்ற நிலையில்தான் காமினி அணி களத்தில் இறங்கியிருக்கிறது.

தமிழ் வாக்காளர்களைப் பொறுத்தவரை இ.தொ.காவை கைவிடக்கூடிய பாரிய மாற்றங்கள் தெரியவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி என்பது புதிதாக இருந்தாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முகமே அவர்களுக்குத் தெரிகிறது.

அதே சமயம், தான் புதியவர் என்பது போலவும், கடந்தகாலத்தில் நடந்து முடிந்த கசப்பான நிகழ்வுகள் தன் காலத்தில் தலைதூக்காது என்றும் திருமதி சந்திரிக்கா பேசும்போது சிறிமாவோவின் முகம் மங்கலாகத் தெரியத் தொடங்குகிறது. அதனால் சந்திரிக்காவை நம்பலாம் என்று ஒரு எண்ணப்பாடு மலையக தமிழ் மக்களிடமும் மெல்லத் தலைகாட்டுவதையும் கவனிக்க முடிகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி பற்றிய பயத்தை சந்திரிக்காவின் புதிய முகம் புறம் தள்ளிவிடக்கூடும்.

மறுபுறம், என்னதான் இருந்தாலும் அந்த அம்மாவின் மகள்தானே இவரும் என்று சாதாரண வாக்காளர்கள் நினைப்பது சந்திரிக்காவின் புதிய முக ஈர்ப்பிற்கு பலவீனம் தரும் விடயமாக இருக்கிறது.

மலையக சிங்கள வாக்காளர் மத்தியில் கடந்த காலங்களைவிட பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இம்முறை ஆதரவு உயரக் கூடும். ஆயினும் அங்கொரு தீர்க்கமான சக்தியாக மாறி அதனால் யானையை விழுத்த முடியுமா என்பதே கேள்வியாகும்.

தற்போதைய நிலவரப்படி மலையகத்தில் யானைதான் முன்னே செல்கிறது.

யானைக்கு பலம் சேர்க்க இ.தொ.காவின் சேவலும் கூவிக்கொண்டிருக்கிறது. யானையும் சேவலும் இடைக்கிடையே பனிப்போரில் ஈடுபட்டாலும்கூட தேர்தல் என்ற சூரியன் வந்து பனி விலகிவிடும்.

தொடர்ந்து அப்படித்தான் நடந்து வருகிறது.

இந்தப் பனிப்போர் ஒரு அரசியல் தந்திரமா? அல்லது தனித்துவம் காக்கும் மோதலா? என்று மலையக தமிழ் வாக்காளர்கள் இன்னும் ஒரு தெளிவான முடிவுக்கு வரவில்லை.

தொண்டா எது செய்தாலும் எங்களுக்காகத்தான் செய்வார் என்று நம்புகிற இ.தொ.காவின் நிரந்தர வாக்காளர்கள் உள்ளவரை இ.தொ.காவுக்கு தேர்தல் முடிவு என்றுமே 'சுபம்'தான்.

அதனால்தான் தமது பொதுச் செயலாளரைகூடச் சிறு துரும்பாக நினைத்து தூக்கி எறிந்துவிடும் துணிச்சல் இ.தொ.காவுக்கு ஏற்பட்டது.

எதிர்வரும் தேர்தலில் இ.தொ.காவின் வாக்கு வங்கிகளில் மாற்றம் ஏற்பட்டால் ஐ.தே.கட்சியின் தலைமை மீது இ.தொ.கா குறைசொல்ல முடியும். மாற்றம் ஏற்படா விட்டால் தொண்டாவின் குரல் தொடர்ந்தும் தனித்துவமாக மாறாத தொனியில் ஒலிக்கும்.

■



## எக்ஸ்ரே ரிப்போர்ட்

## 'ஆடி அடங்கும் வாழ்க்கையடா' அழுது புலம்பும் தமிழ் கட்சி!

'ஆடி அடங்கும் வாழ்க்கையடா' என்பது அரசியல் கட்சிகளுக்கும் பொருந்தும்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு-கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்தான் நானே ராஜா- நானே மந்திரி.

வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்து விடுவார்கள் என்று அரச செயலகம் பக்கமாகச் செல்வோரையெல்லாம் தடுத்து நிறுத்தினார்கள்.

ஆயிரம் ரூபாவுக்கு மேல் பையில் வைத்திருந்த மீன் வியாபாரியைக்கூட அரச செயலகம் உள்ள வீதியால் செல்ல ஈ.பி.ஆர்.எல்.எஃப். தொண்டர்கள் அனுமதிக்க வில்லை. ஏன் என்றால் மீன் வியாபாரி போல வந்து புலிக்கு ஆதரவாளர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்து கட்டுப்பணம் செலுத்தி விடுவார்களாம்.

தேர்தலில் போட்டியிட்ட ஈரோஸ் சுயேச்சைக் குழுவை ஈ.பி.ஆர்.எல்.எஃப். துரத்தித் திரத்தி அடித்தது. ஆயினும் ஜனநாயகத் தேர்தலாக காட்டவேண்டும் என்று விரும்பிய இந்திய அமைதிப்படையாலும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். மீதான மக்களது அதிருப்தியாலும் ஈரோஸ் சுயேச்சைக் குழு அதிக இடங்களைப் பெற்றுக்கொண்டது.

இப்போது விதைத்ததை அறுக்கும் காலம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு-கிழக்கில் எப்படித்தான் முயன்றாலும் வன்னியில் ஒரு ஆசனம் மட்டும் சிலசமயம் கிடைக்கக்கூடும்.

அக் கட்சியின் செயலாளர் தேசியப் பட்டியல், வன்னியின் வேட்பாளர் பட்டியல் என்று இருக்கக்கூடிய பட்டியல்களில் எல்லாம் தனது பெயரை போட்டு வைத்துவிட்டு ஆகஸ்ட் 16ஐ நினைத்து கலங்கிக் கொண்டிருக்கிறார்.

யாழ் மாவட்ட தேர்தலில் 'ஈ.பி.டி.பி அடிக்கிறது, கிள்ளுகிறது, சாப்பாடு இல்லாமல் பட்டினிபோடுகிறது இது நியாயமா? நீதியா?' என்று தினம் ஒரு அறிக்கைவிட்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப் புலம்புவதைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது.

ஈ.பி.டி.பியும் பதில் அறிக்கை கொடுத்து, விட்டேனா பார் என்று மல்லுக்கட்டுகிறது.

நேற்று ஈ.பி.ஆர்.எல்.எஃப் மீது சக கட்சிகள் புகார் கூற ஈ.பி.ஆர்.எல்.எஃப் மறுத்துக்கொண்டே ஆயுதத்தோடு திரிந்தது. இன்று ஈ.பி.டி.பியிடம் உள்ள ஆயுதம் பறி என்கிறது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்போ ஈ.பி.டி.பியோ யாராக இருந்தாலும் ஆடி அடங்கும் வாழ்க்கையடா என்பதை நினைவில் வைத்திருப்பது நலம்.

ஏனென்றால் காலம் மாறும்போது பிறக்கும் ஞானங்களால் பொதுமக்கள் ஏமாறமாட்டார்கள்.



## அதிரடி அய்யாத்துரை

கூட்டான தமிழ் கட்சியில் நீலமான பெயர் கொண்ட செல்வர் எதிரணி தலைவியோடு அடிக்கடி பேசுறவராம். அந்த முன்னணிக்கு கொழும்பில் போட்டியிட 2 பேரை சிபாரிசு செய்ய தலைவியும் ரிக்கற் கொடுத்துப் போட்டாவாம். கொழும்பிலை குமாரருக்கு ஆதரவாக கூட்டான கட்சி அறிக்கைவிட, போட்டிக்கு மறுபக்கத்துக்கும் ஆள் எடுத்துக்கொடுத்த நீலமானவரின் தந்திரம் குமாரருக்கு தெரிந்துபோச்சு. உதுதான் குள்ளத்தனம் என்று கோபத்திலை கிழிச்சுப்போட்டாராம். அது சரி நீலமானவருக்கு ஏன் இந்த வேலை? நெல்சன் மண்டேலா எங்கையாவது உப்பிடியான வேலை சரியென்று சொன்னவரோ?

யாழ் பகுதியிலை கேட்க கூட்டான பழைய கட்சி பட்டியலும் போட்டதாம். கடைசி நேரத்திலை யாரோ வந்து இரண்டு எழுத்தாரை திருப்தி செய்ய ஏதாவது ஒரு பகுதியிலை எண்டாலும் கேட்காமல் இருங்கோ எண்டு சொல்ல 'குட் ஐடியா' எண்டு போட்டுத்தான் கோட்டுக்கு போனவையாம். ஆனாலும் ரெண்டு எழுத்தார் அனுதாபம் கொள்ளுறமாதிரி அசமாத்தம் தெரியேல்லைப் பாருங்கோ.

ஒரு தமிழ் அமைப்பொண்டு யாழ் தீவிலை போய் சாப்பாட்டுக் கடையிலை தோசை கேட்டதாம். தோசைதானே என்று கேட்டுக்கொண்டு நிமிர்ந்து பார்த்த கடைக்காரருக்கு கெட்ட கோபம் வந்திட்டுதாம். ஏன் தெரியுமோ? தோசை கேட்டவர்தான் முன்னொரு காலத்திலை அந்தக் கடைக்காராரின் உறவினர் சிலரை "தமிழ் உணர்ச்சியிலை- ஜனநாயக நோக்கத்திலை" சுட்டவராம். தோசை இல்லை எண்டு போட்டு வெளியிலை நிண்ட மாட்டுக்கு கொண்டுபோய் வைச்சாராம். சனத்துக்கும் ஒரு காலம் வருமதானே?

கிழக்கிலை யாருக்கு வேணுமெண்டாலும் வாக்குப் போடுங்கோ? கூட்டான பழைய கட்சிக்கு மட்டும் போடாதேயுங்கோ எண்டு கூட்டுச் சேர்ந்துள்ள மூன்று கட்சியளும் வேண்டி விரும்பி கேட்டுத் திரியினமாம்.

ரெண்டு எழுத்தார் கிழக்கிலை போட்டியிடும் ஆட்களுக்கு "உந்த வேலை வேண்டாம். எங்களுக்கு பிடிக்கேல்லை. விடமாட்டம்" எண்ட மாதிரி கடிதம் அனுப்பியிருக்கினமாம். விசயம் வெளியிலை தெரிஞ்சா அவை எதிர்க்கினம் எண்டு சனம் வாக்குப் போடாது எண்டு பயந்து, வந்த கடிதம் பற்றி கட்சிகள் மூச்சே விடேல்லையாம்.

முன்னாள் யாழ் பா.உ. யோகமானவரின் பாரியார் கொழும்பிலை குமாரர் பட்டியலில் கேட்கிறா. யாரோ 'அக்கா நீங்களும் வருவியள்' என்று ஜோக்விட, அதை நம்பி இரவு பதினொரு மணிக்கு ஒரு இடத்திற்கு போன் எடுத்துக்கேட்டாவாம், "தம்பி! எம்.பிமாருக்கு தாற பஜீரோ 38 இலட்சமாம். உண்மையோ?" அடிசக்கை எண்டாராம்.

கொழும்பிலை பகிரங்கக் கூட்டம் கிடையவே கிடையாது எண்டு குமாரர் உறுதியாகச் சொல்லிப்போட்டாராம். கூட்டம் நடத்த ஏதும் ஏடகூடமா நடக்க ஏன் பாருங்கோ வம்பை. ரெண்டு எழுத்தாரை பாராட்டினாலும் அவருக்கு அவையிலை உள்ளூர ஒரு சந்தேகம் இருக்குதாக்கும்.

எங்கடை தமிழ் கட்சியள் தேர்தல் வந்தவுடனை முந்திப் பேசினது, செய்தது எல்லாத்தையும் மறந்து போச்சினம்.

சில கட்சிகள் ரெண்டு எழுத்தாரை ஆதரிக்கிற மாதிரியும் பேசி வாக்குக் கேட்கினம். ரெண்டு எழுத்தார் செய்யிறது சரி எண்டால் இவை ஏன் எலக்சன் கேட்கினம்?

"மறச் செயல் செய்ய வாய்ப்பே இல்லை.
வெட்டுக் கத்தி வீசியதெல்லாம் போய்
அட்டைக் கத்தி வீச லாயினர்"

இது நான் சொல்லேல்லை. பாரதிதாசன் சொன்னது. என்னை ஒண்டும் வசைபாடிப் போடாதேயுங்கோ.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# திருமலையில் கூட்டணிக்கு மிரட்டல்!

(சஞ்ஜீவன்)

திருகோணமலையில் செல்வநாயக புரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கருத்தரங்கு ஒன்றை நடத்திக் கொண்டிருந்தனர்.

அப்போது கருத்தரங்கு நடைபெற்ற இடத்தை பார்வையிடுவதுபோல ஈ.பி.ஆர்.எல்.எஃப். வாகனம் ஒன்று ஓடித்திரிந்தது.

இது ஒரு மறைமுக மிரட்டல் நடவடிக்கை என்று கூட்டத்திலிருந்தவர்கள் பேசிக்கொண்டனர்.

திருமலையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அணிக்கு தலைமை வேட்பாளராக தில்லை முகிலன் என்பவர் போட்டியிடுகிறார்.

இவர் பல காலமாக அந்த அமைப்பை விட்டு ஒதுங்கியிருந்து விமர்சித்து வந்தவர்.

இப்போது ஏன் தேர்தலில் போட்டி யிடுகிறீர்கள் என்று கேட்டதற்கு, "இயக்கம் எனக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை கடனாகத்தர வேண்டி இருக்கிறது. அதனை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் அவர்கள் சொல்லும் விதமாக நடக்க வேண்டியுள்ளது" என்று கூறியிருக்கிறார்.

இதே சமயம் திருகோணமலையில் தற்போதைய நிலவரப்படி கூட்டணியின் அலையே மேலோங்கியுள்ளது.

தேர்தல் பிரசார வேலைகளுக்காக மாதர் அமைப்பொன்றையும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உருவாக்கி யுள்ளனர். சுமார் 200 பெண்கள் வரை மாதர் அமைப்புக் கூட்டத்தில் சமூகமளித்திருந்தனர்.

ரெலோ, புளொட், ஈரோஸ் கூட்டமைப் பினரின் பிரசார வேலைகள் இன்னமும் சூடுபிடிக்கத் தொடங்கவில்லை.

சுயேச்சைக் குழு ஒன்றுக்கு தலைமை தாங்கும் ராஜகாரியர் என்பவர் தமது வேட்பாளர் ஒருவருக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். வேட்பாளர் ஒருவர் வருத்தப்பட்டுள்ளார்.

திருமலையில் நடக்கும் தேர்தல் திருக்கூத்துக்களை அம்பலப்படுத்தும் 'முரசு' மீதும் சில பாதிக்கப்பட்ட வேட்பாளர்கள் படுகோபமாக உள்ளார்கள்.

அதனால் முரசுக்கு அவர்கள் இலவச விளம்பரம் செய்து உதவி வருகிறார்கள்.

முஸ்லிம் வாக்காளர்கள் மத்தியில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கே கூடுதலான ஆதரவு இருப்பதாக நம்பப்படுகிறது.

சிங்கள வாக்காளர்கள் மத்தியில் ஐ.தே.கட்சிக்கும் பொ.ஜ.ஐக்கிய முன்னணிக்கும் சம அளவிலான ஆதரவை காணமுடிகிறது.

முஸ்லிம் காங்கிரசைப் பொறுத்தவரை திருமலையில் வெற்றி வாய்ப்பு கேள்விக் குறியாக இருக்கிறது.

கிண்ணியா போன்ற பகுதிகளில் பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வரிசை யில் காணப்படுகிறது.

இது தற்போதைய நிலவரம். போகப் போக நிலைமையில் மாற்றங்கள் தெரிய லாம். தற்போது திருமலையில் கவனத் திற்குரிய கட்சிகள்- தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தேசிய ஐக்கிய முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ்.

# வன்னியில் புளொட்-கூட்டணி போட்டா போட்டி

## முஸ்லிம் வாக்காளர் மறக்காவிட்டால் இழப்பு!

வவுனியா மாவட்டத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், புளொட் அமைப்புக்கும் இடையே மேடையிலும், பத்திரிகைகளிலும் பிரசாரப் போர் நடந்து வருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.சிவசிதம்பரம் வன்னியில் போட்டியிடுவதால், எவ்வாறு என்றாலும் ஒரு ஆசனத்தை கைப்பற்றும் தீவிரத்தில் கூட்டணி குதித்திருக்கிறது.

பாராளுமன்றத்தில் ஆணித்தரமாக வாதிடக்கூடியவர்கள் தாங்கள்தான் என்பதே கூட்டணியினரின் பிரதான தேர்தல் கோசமாக இருக்கிறது.

அதற்கு ஓரளவு வரவேற்பும் இருக்கவே செய்கிறது.

முஸ்லிம் சுயேச்சைக் குழு ஒன்றும் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடுகிறது. முஸ்லிம் காங்கிரசுக்கு அக்குழு நிச்சயம் ஒரு சவாலாகவே கருதப்பட முடியும். இதனால் தனது வெற்றி வாய்ப்புக்காக மு.காங்கிரஸ் அங்கு கடுமையாகப் போராட வேண்டியுள்ளது.

சிங்கள வாக்காளர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பான சுயேச்சைக் குழுவுக்கே ஆதரவானவர்களாக உள்ளனர்.

திருமதி புலேந்திரனுக்கு சிங்கள வாக்காளர் மத்தியில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஆதரவு தென்படவில்லை.

கற்பிட்டியில் உள்ள முஸ்லிம் வாக்கு களுக்கு சகல அணிகளுமே குறி வைத்துள்ளன.

கடந்த மாகாணசபை ஆட்சியின் போது ஈ.பி.ஆர்.எல்.எஃப்பினரால் மேற் கொள்ளப்பட்ட காத்தான்குடிப் படு கொலைகள், முஸ்லிம் பொலிசாரை அடையாளப் படுத்திக் கொலை செய்தமை போன்ற நடவடிக்கைகளை முஸ்லிம் வேட்பாளர்கள் நினைவூட்டினால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பும் அன்று ஈ.பி.ஆர்.எல்.எஃப்பில் இருந்துவிட்டு இன்று தமிழ் தேசிய ஐக்கிய முன்னணியில் வேட்பாள ராக உள்ள அபூ யூசுப்பும் முஸ்லிம் வாக்குகளை இழக்கவேண்டி வரலாம்.

# களைப்புள்ள கட்சிகள் இளைப்பாற வேண்டும்

## மூன்று இயக்க கூட்டமைப்பு கூறுகிறது

புளொட், ரெலோ, ஈரோஸ் ஆகிய அமைப்புக்களது கூட்டமைப்பான தமிழ் தேசிய விடுதலை முன்னணி ஒரு பிரசுரம் வெளியிட்டுள்ளது. அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பிளவுபட்டு பிரிந்து நின்று அழிந்த கதைதான் அன்று முதல் இன்றுவரை தமிழ் இனத்தின் சோக வரலாறு.

ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு என்பதை மறந்ததுதான் இன்று நம்மினம் அனுபவித்துக்கொண்டிருக்கும் அத்தனை வேதனைகளுக்கும் சோதனைகளுக்கும் அடிப்படைக் காரணம்.

தொடர்ந்து கொண்டிருக்கும் கோர யுத்தத்தின் தினசரி நினைவுகளாக உயிர்ப் பலிகளும், உடல் ஊனங்களும், உடமை நாசங்களும் நிரந்தரமாகி விட்டிருக்கின்றன.

இந்த நிலைமை மேலும் ஒரு சில ஆண்டுகளுக்கு நீடிக்குமானால் சுடுகாட்டிலே தான் சுதந்திர கீதம் இசைக்க வேண்டிய நிலைமை எஞ்சப்போகும் தமிழ் மக்களுக்கு மிஞ்சும்.

இந்த நிலைமையிலாவது, இத்தனைக் கும் பிறகாவது பிரிந்து நிற்கும் தமிழ் அரசியல் அமைப்புகள் ஒன்றுபடாதா?

இதுதான் இன்று ஒவ்வொரு தமிழ் இதயத்தினதும் ஏக்கப் பெருமூச்சு.

இதனை உணர்ந்தே எமது இனத்துக்கு உரிமையுடனும் அமைதியுடனும் கூடிய நல்வாழ்வினை அமைத்துக்கொடுத்திட, அந்தக் கடமையின் வழியில் செயற்பட, அத்தனை தமிழ் அரசியல் இயக்கங்களையும் கட்சிகளையும் ஓரணியில்-ஒரே கொடியின் கீழ் திரட்டி 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பதை ஆளும் அதிகார-இனவாத சக்திகள் அனைத்திற்கும் உரிய முறையில் உணர்த்திட இதயசுத்தியுடன் கூடிய முயற்சிகள் எடுக்கப்பட்டன!

ஒற்றுமைக்காக நீட்டப்பட்ட நேசக் கரங்களை சில கட்சிகளும் இயக்கங்களும் தம் சொந்த சுயநலக் காரணங்களுக்காக உதறித் தள்ளிவிட்டபோதிலும் மூன்று அமைப்புகள் முனைப்போடு முயன்று உருவாக்கியுள்ள ஒற்றுமைப் பேரணியே "தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணி."

தொடர்ந்து கொண்டிருக்கும் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், தமிழ் மக்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஓர் அரசியல் தீர்வு கொண்டு வரப்பட வேண்டும் என்னும் தமிழ் மக்களின் உணர்வுகளை வலியுறுத்திட, தமிழ் இனத்தின் தாயகமாம் வட-கிழக்கு மாநிலத்தில் அமைதியுடன் கூடிய உரிமை வாழ்வினை நம்மினம் பெற்றிட,

இலங்கைத் தீவின் ஏனைய பகுதிகளிலும் எம்மினம் சம உரிமையுடன் தலை நிமிர்ந்து வாழ்ந்திட தமிழ் மக்கள் ஐக்கியம் அவசியம்-அவசரம் என்னும் இன்றியமையாத் தேவை யைப் பூர்த்தி செய்யப்புறப்பட்டுவிட்டது- "தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணி"

சுயநல நோக்குடன் தனிவழி செல்லும் கட்சிகளுக்கு இனிமேல் தமிழினத்தின் மத்தியில் இடமில்லை என்பதையும்,

ஒரு சில தனிநபர்களுக்கு பாராளு மன்றக் கதிரைகளைப் பெற்றுக்கொடுப்ப தற்காக மீண்டும் கடை பரப்ப முயலும் களைப்புற்ற கட்சிகள் இளைப்பாற வேண்டிய வேளை வந்துவிட்டது என்பதனையும் உலகறிய எடுத்துக்காட்டி "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்னும் தமிழ்ப் பழமொழிகளின் உண்மையை வலியுறுத்தி தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரும் ஆதரவைத் தரவேண்டும் என்று தாழ்மையுடன் "தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணி" வேண்டி நிற்கிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கிழக்கில்-திருமலை, மட்டக்களப்பு அம்பாறை ஆகிய மூன்று தேர்தல் மாவட்டங்களிலும் ரெலோ இயக்கத்தின் வெளிச்சவீட்டுச் சின்னத்திலும்,

வடக்கில்- வன்னித் தேர்தல் மாவட்டத்தில் புளொட் இயக்கத்தின் அரசியல் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் நங்கூரம் சின்னத்திலும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஈரோஸ் இயக்கத்தின் சின்னத்திலும்,

"தமிழ்த் தேசிய ஒற்றுமை முன்னணி" தமிழ் மக்களின் ஆதரவை வேண்டி நிற்கிறது.

# வானலையிலும் தேர்தல் சூடு

## "ஆட்டம் போட்டவர்களுக்கு பாடம் புகட்டுங்கள்"

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அரசியல் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்களது வேட்பாளர்களுக்கு பிரசார வாய்ப்பு வழங்கியுள்ளது.

தமிழ் கட்சி வேட்பாளர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்கிறார்கள். காரசார மான வார்த்தைப் பிரயோகங்களும் இடம் பெறுகின்றன.

வானொலியில் 'ரெலோ' அமைப்பின் சார்பில் உரையாற்றிய திரு.சிறிகாந்தா, தமிழர் விடுதலைக் கூட்டணி மீதும், ஈ.பி.ஆர்.எல்.எஃப் மீதும் சரமாரியான குற்றச் சாட்டுக்களை தெரிவித்தார்.

மலையக மக்களை காட்டிக்கொடுத்த தமிழ் காங்கிரசுடன் தமிழரசுக் கட்சியும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகியது என்றார் அவர்.

தமிழ் மக்களை பீடித்திருக்கும் நோய் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். பற்றி குறிப்பிட்ட திரு.சிறிகாந்தா "தமிழ்ப் ஈழப் பிரகடனத்தை தன்னிச்சையாக மேற்கொண்டுவிட்டு, நாட்டைவிட்டு ஓடியவர்கள் அவர்கள். ஆட்டம் போட்ட அந்த கூட்டத்திற்கு சரியான பாடம் புகட்டும் நேரம் வந்துவிட்டது" என்று கூறினார்.



றொமாறியோ
பிரேசில் அணி




# பிரேஸில் அணியின் கரங்களில் நான்காவது தடவையாக உலக கிண்ணம்

பிரட்மன்

உலகில் நான்காவது தடவை யாகவும் பிரேஸில் உலகக் கிண்ண உதைபந்தாட்ட சாம்பியனாகியுள்ளது.

1958, 1962, 1970ம் ஆண்டுகளின் பின்னர் இத்தடவை இடம்பெற்ற 15வது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பிரேஸில் உலகக் கிண்ணத்தை தன் வசமாக்கியுள்ளது.

பிரேஸில், இத்தாலி ஆகியன கடந்த 17ந் திகதி அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள ரோஸ்போல் விளையாட்டரங்கில் இறுதிப்போட்டியில் மோதிக்கொண்டன.

விறுவிறுப்பாகவும் இரு அணிகளும் ஒன்றையொன்று விட்டுக்கொடுக் காதவையாகவும் இறுதி நேரம்வரை ஆடியிருந்தன.

### கடும்போட்டி

இதனையடுத்து ஆட்டம் முடிவடைந்த பின்னரும் இரு அணிகளுக்கும் தலா 20 நிமிடங்கள் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. இத் தலா 20 மணி நேர ஆட்டத்திலும் இத்தாலி, பிரேஸில் ஆகியன விடாப் பிடியாக ஆடியிருந்தன.

தொடர்ந்து இரு அணிகளுக்கும் தலா ஐந்து பெனால்ட்டி (Penalty) முறையில் அடிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப் பட்டதையடுத்தே பிரேஸில் 3-2 என்ற ரீதியில் வெற்றியைத் தழுவி யிருந்தது.

பிரேஸில் அணியின் கோல் காப்பாளர் திறமையாகவும், அவதானத்துடனும் இரு தடவைகள் பந்துகளை தடுத்து நிறுத்தியதை யடுத்து பிரேஸில் அணி வெற்றியைத் தழுவிக்கொண்டது.

பிரேஸில் அணியை எதிர்த்து விளையாடிய இத்தாலிய அணியும் மூன்று தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்ற ஒரு நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

1934, 1938, 1982ம் ஆண்டுகளில் இத்தாலி உலகக்கிண்ணத்தை தன்வசப்படுத்தி யிருந்தது.

எனவே மூன்று தடவைகள் உலகக் கிண்ண சாம்பியன்களாக வந்த இத்தாலிக்கும், பிரேஸிலுக்குமிடையிலான இத்தடவை இறுதிப் போட்டியில், பிரேஸில் நான்காவது தடவையாக சாம்பியன் பட்டத்தை சுவீகரித்துள்ளது.

### சுவீடன் மூன்றாவது இடம்

பிரேஸில், இத்தாலி ஆகியனதவிர ஜெர்மனியும் மூன்று தடவைகள் உலகக் கிண்ணத்தைத் தன்வசமாக்கியுள்ளது. ஆனால் ஜெர்மன் அணி இத்தடவை கால் இறுதிப்போட்டியிலேயே பல்கேரிய அணியிடம் 2-1 என்ற ரீதியில் தோல்வி யடைந்திருந்தது.

24 நாடுகள் பங்குபற்றிய உலகக்கிண்ண சுற்றுப்போட்டிகளின், இரண்டாவது சுற்றில் 16 நாடுகள் மோதின. பின்னர் கால் இறுதிப்போட்டியில் 8 நாடுகள் மோதின. அரை இறுதிப்போட்டி நான்கு நாடுகளுக்கு இடையே இடம்பெற்றன.

இதனையடுத்து இறுதிப்போட்டியில் பிரேஸில் சாம்பியனாகியுள்ளது.



றொபேர்ட்டோ பாகியோ-இத்தாலி

இதேவேளை கடந்த 16ந் திகதி சுவீடன், பல்கேரியா ஆகியனவற்றுக்கிடையே இடம் பெற்ற மூன்றாவது இடத்துக்கான போட்டியில், சுவீடன் 4-0 என்ற ரீதியில் பல்கேரியாவைத் தோற்கடித்திருந்தது.

பிரேஸில் 1970ம் ஆண்டு உலக சாம்பியனானபோது அக்காலத்தில் வழங்கப் பட்டுவந்த உலகக்கிண்ணத்தை நிரந்தர மாகவே தன்வசப்படுத்தியிருந்தது.

எனவே இத்தடவை 1970ம் ஆண்டுக்குப் பின்னர் - புதிதாக அறிமுகப்படுத்திய உலகக் கிண்ணத்தை - முதல் தடவையாக- 24 வருடங்களுக்குப்பின்னர் பிரேஸில் வென்றுள்ளது.

### றொமாரியோ- பகியோ

இத்தடவை இறுதிப்போட்டியில் கலந்து கொண்ட பிரேஸில் அணியின் ஹீரோவாக றொமாரியோ (Romario)வும், இத்தாலி அணியின் ஹீரோவாக பகியோ (Baggio) வும் முன்னணி வகித்திருந்தனர்.

இந்த இருவரிலுமே, இரு நாட்டு அணிகளினதும் வெற்றி பெரிதும் தங்கியிருந்தது.

பிரேஸில், இத்தாலி ஆகியன இறுதி வரை விட்டுக்கொடுக்காதவாறு தீவிரமாக மோதிக்கொண்டபோதிலும், பிரேஸில் அணி பல தடவைகள் கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களைப் பெற்றிருந்தது. அத்துடன் பிரேஸில் அணி இத்தாலியின் எல்லைக்குள் அடிக்கடி ஊடுருவியதையும் காணக் கூடியதாக இருந்தது.

இத்தாலி அணியின் பிரபல வீரரான பகியோ (Baggio) பௌத்த மதத்தைச் சேர்ந்தவராவார்.

இத்தாலி,உலகின் கத்தோலிக்க மதத்தின் தலைமை நாடாக இருக்கின்றது. கத்தோலிக்க மதத்தவரின் உலகத் தலைவரான பரிசுத்த பாப்பரசரின் வத்திக்கான் நகரமும் இத்தாலியிலேயே உள்ளது.

இத்தாலியர்களில் பெரும்பாலான வர்கள் கத்தோலிக்க மதத்தவர்களாவர்.



இத்தாலி அணி

ஆனால் இத்தாலிய அணியைச் சேர்ந்த பிரபல வீரர் பகியோ பௌத்த மதத்தை தழுவியவராக இருக்கக் காணப்படுகின்றார்.

சில காலத்துக்கு முன்னர் இடம் பெற்ற விபத்தொன்றில் படுமோசமான முறையில் காயமடைந்த பகியோ, மனச் சாந்தி, மனத்தைரியம் ஆகியவற்றைப் பெறும் பொருட்டே கத்தோலிக்க மதத்திலிருந்தும் பௌத்த மதத்தைத் தாம் தழுவியதாக குறிப்பிட்டிருந்தார்.

தென் அமெரிக்காவில் காடுகளைப் பெருமளவு கொண்ட பிரேஸில் நாட்டில் உதைபந்தாட்டமே மக்களின் பெரும் விருப்புக்குரிய ஆட்டமாக இருந்து வருகின்றது.

எங்கும், எதிலும் உதைபந்தாட்டமே பிரேஸில் நாட்டை ஆக்கிரமித்து வருகின்றது. இந்நிலையில் பிரேஸிலின் வெற்றியை பிரேஸில் பிரஜைகள் ஒவ்வொருவரும் தமக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்த வெற்றியாகவே கருதிக்கொண்டாடி வருகின்றனர்.

அடுத்த உலகக் கிண்ண போட்டிகள் 1998ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் இடம்பெறும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது – இராஜதந்திரி

# புதிய அரசியல் தொனியில் பேசும் தமிழ்க் கட்சிகள்! கேலிக்கூத்து

தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்திருக்கின்றன. அரசியல் கட்சிகள் தமது நோக்கங்கள், கொள்கைகளை வெளியிட்டு வரும் அதே சமயம், பரஸ்பரம் ஒன்றையொன்று கடுமையாகத் தாக்கி வருபவையாகவும் இருக்கின்றன.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு அதிகளவு அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான வேட்பாளர்களும் இத்தடவை பாராளுமன்றத் தேர்தல் அரங்கில் குதித்திருக்கின்றனர்.

கடந்த பதினேழு வருடகாலமாக ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்து வருகின்றது. இப்பதினேழு வருடகாலத்தில் இலங்கையின் அரசியல் பல்வேறு பரிமாணங்களையும் பெற்றிருக்கக் காணப்படுகின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை பாராளுமன்ற நிர்வாக முறையைவிடப் பலம்மிக்கதாக இருக்கின்றது. கூடவே மாகாணசபை ஆட்சிமுறையும் கடந்த ஆறுவருட காலமாக அமுலில் இருந்து வருகின்றது.



மண்டேலா

இதுதவிர அமைச்சரவைப் பதவிகளும் அதிகரிக்கப்பட்டு விசேட அதிகாரங்களைக் கொண்டவர்களின் எண்ணிக்கை பெருமளவில் இருக்கக் காணப்படுகின்றது. கடந்த பதினேழு வருடகால ஐக்கியதேசியக் கட்சி

## நெல்சன் மண்டேலா, யாசீர் அரபாத் பற்றிப்பேச அருகதையற்ற அரசியலாளர்கள்!



ஆட்சியில் புதிய முகங்கள் தோன்றியும், அமைச்சரவைப் பொறுப்புக்கள் பல தடவை மாற்றப்பட்டிருக்கவும் காணப்படுகின்றது.

மூன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள், நான்கு பிரதமர்கள், மற்றும் மூன்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கடந்த 17 வருடகால ஐ.தே.கட்சி ஆட்சியில் இடம் பெற்றிருந்தனர்.

1977ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி படுதோல்வியைத் தழுவியிருந்தது.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் கணிசமானளவு வெற்றியைப் பெற்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, பாராளுமன்றில் பிரதான எதிர்க்கட்சியாக இடம் பிடித்திருந்தது.

இருந்தபோதிலும் ஐக்கியதேசியக் கட்சியினர் எதிர்க்கட்சிகளின் பலத்தைக் குறைப்பதில் முனைப்பாகவே இயங்கியிருந்தனர்.

ஐக்கியதேசியக் கட்சி 1977ம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றியதும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை நிலைதளரச் செய்வதில் தீவிரமாக இயங்கியிருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளை நீக்குவதில் அன்று ஐ.தே.கவினர் வெற்றி கண்டிருந்தனர்.

இதனையடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐ.தே.கவினர் பல்வேறு வழிகளிலும் பலவீனப்படுத்தியிருந்தனர்.

பிரதான எதிர்க்கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும் அரசியல் அமைப்பில் ஆறாவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து பாராளுமன்றிலிருந்தும் ஆட்சியாளர்கள் வெளியேற்றியிருந்தனர்.

தமிழீழம், தன்னாட்சி, என்ற கோஷங்களுடன் பாராளுமன்றத்தினுள் பிரவேசித்த தமிழர் விடுதலைக்கூட்டணியினர், அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின்கீழ் தமது சிறப்புரிமைகளை இழந்து இந்தியாவின் தயவை நாடியிருந்தனர்.

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் இந்த ஆறாவது திருத்தச் சட்டமே ஒரு முக்கிய திருப்புமுனையாக விளங்கியிருந்தது.

பாராளுமன்ற அரசியலில் வடக்கு-கிழக்கின் தமிழ் பேசும் மக்களை நம்பிக்கை இழக்கச் செய்திருந்ததுடன் வடக்கு-கிழக்கில் ஆயுதப் போராட்டம் விரிவடைவதற்கும் இந்த ஆறாவது திருத்தச் சட்டமே முக்கிய காரணமாக விளங்கியிருந்தது.

ஆறாவது திருத்தச் சட்டம், இலங்கையில் பிரிவினைவாதக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதைத் தடுப்பதாகவும், எத்தகைய ஒரு சூழ்நிலையிலும் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்குப் புறம்பான வகையில் செயல்படுவதை நிராகரிப்பதாகவும் இருக்கக் காணப்படுகின்றது.

இந்நிலையில் தமது நிலைப்பாட்டுக்குப் பாதகமான முறையில் ஆறாவது திருத்தச் சட்டம் விளங்கியிருந்ததையடுத்து பாராளுமன்றத்திலிருந்தும் வெளியேறிய தமிழர் விடுதலைக் கூட்டணியினர், இந்தியாவில் ஏறத்தாழ ஓர் 'அஞ்ஞாத வாச'த்தையே மேற்கொண்டிருந்தனர். இலங்கை சுதந்திரமடைந்தது முதற்கொண்டு, படிப்படியாக ஆரம்பித்த இனரீதியிலான சர்ச்சைகள் இன்று வடக்கு- கிழக்கில் ஒரு முடிவில்லாத ஆயுதப் போராட்டத்தையும்தேற்றிவித்துள்ளது.

1983ம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு-கிழக்கில் பல்வேறு தமிழ் அமைப்புக்கள் தீவிரவாதப் போராட்டத்தில் குதித்திருந்தன.

நேர்த்தியான ஜனநாயக அணுகுமுறைகள் மூலமாக வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்ப்பதில் தமிழ்த் தலைவர்கள் பலரும் காலத்துக்குக்காலம் பல்வேறு பிரயத்தனங்களையும் மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் இப் பிரயத்தனங்கள் பேரினவாத ஆட்சியாளர்களால் பலாத்காரங்கள், மற்றும் அடாவடித்தனங்கள் மூலமாக அவ்வப்போது முறியடிக்கப்பட்டு வந்தன.

சாத்வீகமான வழியில் தாம் மேற்கொண்ட போராட்டங்கள் தோல்வி கண்டதை தமிழ் அரசியலாளர்கள் 1977ம் ஆண்டு பொதுத் தேர்தல் பிரசாரங்களின்போது வெளிப்படையாகவே ஏற்றுக்கொண்டிருந்தனர்.

இன்று 17 வருடங்களின் பின்னர் தமிழ் அரசியலாளர்கள் மீண்டும் தேர்தல் களத்தில் குதித்திருக்கின்றனர். ஆயினும் ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் கொண்டிருந்த அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிராதவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர்.

தமிழ் அரசியல் கட்சிகளின் இன்றைய நிலைப்பாடு, அவர்களின் கடந்த பதினேழு வருடகால அனுபவங்களை மையமாகக் கொண்டிருக்கின்றதே தவிர, வடக்கு-கிழக்குவாழ் தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்னைகளை உறுதியான முறையில் அணுகாததாக இப்புதிய நிலைப்பாடு இருக்கக் காணப்படுகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர், தேர்தலில் குதித்துள்ள ஏனைய தமிழ் அமைப்புக்களுடன் கூட்டுச் சேர்வதைத் தவிர்த்துள்ளனர்.

ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் தனித்தும், கூட்டுச் சேர்ந்த நிலையிலும் தேர்தல் போட்டிகளுக்குத் தயாராகிவருகின்றன.

எனவே தமிழ் கட்சிகள் மத்தியிலேயே உடன்பாடுகள் ஏற்படாத நிலை காணப்படுவதுடன், அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் தமது அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டவையாக இருக்கக் காணப்படுகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டபோது தமிழீழக் கோரிக்கையை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால் இத்தடவை தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்ட நிலையில், வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு தம்மால் மட்டுமே ஓர் அரசியல் தீர்வைக் காணமுடியும்; சர்வதேச அரங்கிலும் அப்பிரச்னையை தம்மால் மட்டுமே பறைசாற்ற முடியும் எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் குறிப்பிட்டு வருகின்றனர்.

இலங்கைத் தமிழர் பிரச்னையை இன்று முழு உலகமுமே நன்கு அறிந்து வைத்துள்ளது. அத்துடன் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னை இலங்கையில் மட்டும் ஒரு பிரதான பிரச்னையாகக் காணப்படவில்லை.

பிராந்திய ரீதியாக தென்னாசியாவிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள விவகாரமாகவே இலங்கையின் இன்றைய வடக்கு-கிழக்குப் பிரச்னை விளங்குகின்றது.

மேற்குலக நாடுகளில் குடிபெயர்ந்துள்ள இலங்கையின் பல்லாயிரக் கணக்கான தமிழ் பேசும் மக்களின் துயரகரமான அனுபவங்கள் வாயிலாக மேற்கத்தேய நாடுகளும் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னையை நன்கு அறிந்திருக்கக் காணப்படுகின்றன.

சில வருடங்களுக்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரான திரு.மு.சிவசிதம்பரம் கூட அமெரிக்காவின் மசசூசெட்ஸ் மாநிலத்தில் தமிழீழக் கொடியை ஏற்றி வைத்து தமிழீழப் பிரகடனத்தை அங்கு மேற்கொண்டிருந்தார்.

ஆனால் இன்று அதே தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு.முருகேசு சிவசிதம்பரம், இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து புதிய தொனியில் பேச ஆரம்பித்துள்ளது வேடிக்கையாகவே இருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.மு.சிவசிதம்பரம் ஒரு சிரேஷ்ட தமிழ் அரசியல்வாதியாக இருப்பதுடன், முன்பு உப சபாநாயகராகவும் பொறுப்பு வகித்தவர். சட்டத்துறையிலும் திரு.சிவசிதம்பரம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தார்.

எனவே பாராளுமன்றத்தில் மட்டுமல்லாது, நீதிமன்றங்களிலும் வடக்கு-கிழக்கு சர்ச்சை சார்ந்த நடவடிக்கைகளில் திரு.சிவசிதம்பரம் தீவிர நாட்டம் காட்டியிருந்தார்.

இந்நிலையில் கடந்த காலங்களில் அரசியல், சட்டரீதியாக பேரினவாத ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்கு பிரச்னை குறித்து ஏற்படுத்திய நெருக்கடிகள் பற்றி தெட்டத் தெளிவாக அறிந்து வைத்துள்ளபோதிலும் அவர் மீண்டும் பாராளுமன்ற அரசியலில் ஆர்வம் காட்டுவது ஆச்சரியத்தையே அளிப்பதாக இருக்கின்றது.

சிறுபான்மையினத்தவர்களின் அடிப்படை உரிமைகள், மற்றும் தனித்துவம் என்பவற்றை உறுதி செய்கின்ற ஒரு நாட்டில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பதும், அத்தகைய ஒரு பாராளுமன்றில் அர்த்தமுள்ள அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் நிச்சயம் வரவேற்கப்படவேண்டியதே.

ஆனால் இலங்கையின் பாராளுமன்ற நடவடிக்கைகள் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளைக் குட்டிச் சுவராக்கிவிட்டுள்ளதுடன், தென்னிலங்கை அரசியலையும் கேலிக்கூத்தாக்கிவிட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் நம்பிக்கை வைத்துப் பாராளுமன்ற ஆசனங்களையும் கைப்பற்ற முயலும் தமிழ் அரசியல் கட்சிகளின் போக்கு விசனத்துக்குரியதாகவே இருக்கின்றது.

மட்டக்களப்பில் அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் நடத்தப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய டாக்டர் நீலன் திருச்செல்வம், தென்னாபிரிக்கா மற்றும் பாலஸ்தீனத்தில் அண்மைக்காலங்களில் அரசியல் ரீதியாகக் கிடைத்த வெற்றிகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் தென்னாபிரிக்க, பாலஸ்தீன தலைவர்கள் போன்று உறுதியான, நேர்த்தியான அரசியல் போராட்டங்களை மேற்கொள்ளக்கூடிய அப்பழுக்கற்ற பக்குவத்தை இலங்கைத் தமிழ் அரசியலாளர்கள் எவ்வளவுதூரம்



யாசிர் அரபாத்

கொண்டுள்ளார்கள் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் டாக்டர் நெல்சன் மண்டேலா ஆணித்தரமான போராட்டங்களை நடத்தியிருந்தார். 27 வருடங்கள் தமது வாழ்க்கையின் பெரும் பகுதியை அவர் சிறைவாசத்தில் தியாகஞ் செய்திருந்தார்.

பாலஸ்தீன தலைவர் யாசீர் அரபாத், இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக எதிர்த்து- எந்தவொரு கட்டத்திலும் தனது மக்களின் இறைமையை விட்டுக்கொடாதவராக விளங்கியிருந்தார்.

எனவே தென்னாபிரிக்க, பாலஸ்தீன வெற்றிகள் மாபெரும் தியாகங்கள், உறுதியான, மற்றும் அடிவருடித்தனமில்லாத போராட்டங்களின் விளைவாகவே கிடைத்திருந்தன என்பதனையும் டாக்டர் நீலன் திருச்செல்வம் நிச்சயம் அறிந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

இந்நிலையில் டாக்டர் நீலன் திருச்செல்வம் உள்ளிட்ட ஏனைய தமிழர் விடுதலைக்கூட்டணியினர், மற்றும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் ஆகியோர் எந்த வகையிலும் உலகின் உன்னதமான விடுதலைப் போராட்டங்கள் பற்றியோ அல்லது அப்போராட்டங்களைத் தலைமை தாங்கிய தலைவர்களைப் பற்றியோ பேச அருகதையற்றவர்களாகவே இருக்கின்றனர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இல்லத்தில் இருந்தே எழில் பெறும் முறைகள்!

## உபயோகமான அழகுக் கலை — அழகுக் குறிப்புகள்

ருக்கா-நாதன்



### வெள்ளரி லோஷன்


வெள்ளரிக் காயைத் தட்டி சாறு பிழிய வேண்டும். இந்தச் சாற்றில் இரண்டு தேக்கரண்டி எடுத்து அத்துடன் எலுமிச்சைச் சாறு, ரோஸ் வாட்டர், முள்தாங்கிமட்டி (ஒரு வகை களிமண்) இவற்றுடன் வைட் பவுடர், HYDROGEN PEROXIDE எல்லாவற்றையும் சேர்த்து பசைபோல் செய்து முகம், கழுத்து முழுவதும் பூசி 45 நிமிடங்களின் பின் கழுவவேண்டும்.

### ஆரஞ்சு லோஷன்

ஆரஞ்சப் பழத்தோலை நன்கு நிழலில் உலர்த்த வேண்டும். பின் நன்கு இடித்து பவுடராக்க வேண்டும். அதில் இரண்டு தேக்கரண்டி எடுத்து 2 தேக்கரண்டி பால் சேர்த்து அத்துடன்எலுமிச்சைச்சாறு,1 முட்டை வெள்ளைக் கருவும் சேர்த்து பசைபோல் குழைத்து முகத்தில் பூசி 15 நிமிடத்தின் பின் கழுவ வேண்டும். முகம் மிருதுவாகவும் பளபளப்பாகவும் மாறத் தொடங்கும்.

### லைம் லோஷன்

1 தேக்கரண்டி சுத்தமான தேனில் ஏழு கரண்டி எலுமிச்சச்சாறு பிழிந்துவிட வேண்டும். இரண்டையும் சேர்த்து பிசைந்து வைக்கவும். நீராவி முகத்தில் படும்படி கண்களை மூடிக்கொண்டு காட்டவும். பிறகு துடைத்துக் கொள்ளவும். முன்பு செய்த லோஷனை முகத்தில் பூசி அரை மணியின் பின் கழுவவும். முகம் கறுப்பாக உள்ளவர்கள் நிறம் மாறி வரும்.



### பாதாம் லோஷன்

குளிர் காலத்தில் உதடு வெடிப்பு, கால்வெடிப்பு, சருமம் சொரசொரப்பு தொல்லைகள் ஏற்படுகின்றன. இதற்கு பாதாம் லோஷம் (ALMOND LOTION) தயாரித்து பயன்படுத்தலாம். ஐம்பது கிராம் தேன் மெழுகு (BEES WAX) ஒரு பாத்திரத்தில் போட்டு அந்த பாத்திரத்தை நீர் உள்ள மற்றொரு அகன்ற பாத்திரத்தில் வைத்து (Water Bath) அடுப்பில் வைத்து உருக்க வேண்டும். உருகியவுடன் 20 கிராம் பாதாம் எண்ணெய் சேர்க்கவும். (பாதாம் எண்ணெய் கடைகளில் கிடைக்கும்) இந்த லோஷனை முகத்தில் பூசி 1 மணி நேரம் கழித்து துடைக்கவும். பின் நன்கு குளிர்ந்த நீரினால் கழுவவும்.

### ஆஸ்ட்ரிஜென்ட் லோஷன்

சருமத்தில் உள்ள துவாரங்கள் சிலருக்கு பெரிதாகி விகாரத் தோற்றம் தரும். இதற்கு (ASTRIGENT LOTION) பயன்படுத்த வேண்டும்.

பீச் (PEACH) என்ற ஒருவகை பழம் உண்டு. இதன் சதையை நன்கு தட்டிப் பிழிந்து சாறு எடுக்க வேண்டும். எலுமிச்சை, தக்காளி, வெள்ளரி சாறு இவற்றுடன் பீச் சாற்றையும் கலக்கவும். எல்லா சாறும் ஒரே கணக்காக இருக்கவேண்டும். இந்தச் சாறை முகம், கழுத்து மற்றும் தேவையான பகுதிகளில் நன்கு பூசவும். அரை மணி நேரம் விட்டு சோப்பு போட்டு கழுவவும். முகத்தில் உள்ள கறுப்பு அடையாளம் எல்லாம் மறைந்துவிடும்.



### பருவராமல் தடுக்க-

காலையில் எழுந்ததும் எண்ணெய் கசிவான சருமம் உடையவர்கள் முகத்தை வெந்நீரில் சோப் போட்டு கழுவ வேண்டும். பின் முகத்தில் ஐஸ் வைத்து ஒத்தடம் போல் செய்யவும். லக்டோகலமைனை முகத்தில் புள்ளிகள் மாதிரி வைத்து மசாஜ் செய்யவும். அடிக்கடி சோப்புப் போட்டு சுத்தம் செய்யவும். ஏனென்றால் எண்ணெய் கசிவான முகத்தில் அடிக்கடி அழுக்குகள் சேர வாய்ப்புண்டு. முகத்திற்கு அடிக்கடி நீராவி பிடிக்கவும். மசாஜ் செய்யக் கூடாது. ஆவி பிடிப்பதால் சருமத் துவாரங்கள் நன்றாகத் திறந்து ஆழாத்தில் உள்ள அழுக்குகள் வெளியே வந்துவிடும். ஆவி பிடித்தவுடன் மாஸ்க் தடவவும். ரோஸ் வாட்டர், பார்லி பவுடர், உருளைக் கிழங்கு இவை மூன்றும் கலந்து முகத்தில் பூசி 10 நிமிடங்களின் பின் கழுவ நல்ல பலன் கிடைக்கும். இரவு படுக்கபோகுமுன் புதினாச்சாறு 2 தேக்கரண்டி 1/2 முடி எலுமிச்சை இவற்றுடன் பயித்தம் மாவு கலந்து முகத்தில் தடவி 15 நிமிடத்தின் பின் கழுவவும். பின் ஐஸ் ஒத்தடம் கொடுக்கவும். முகம் சுத்தமாகும். பருவினால் ஏற்பட்ட தழும்பு மறையும். முகப்பரு அதிகம் உள்ளவர்களுக்கு சிறந்த மருந்து- கடலை மாவுடன் புளித்த தயிர் கலந்து முகத்தில் பருவுள்ள இடத்திற்கு பூசுவதாகும். கீரை சாப்பிடவும். நன்றாக மனம் விட்டு சிரிப்பதும் முகப் பருவிற்கு ஒரு மருந்தாகும். உள்ளமும் சுத்தமாக இருந்தால் முகப்பரு வருவது குறையும்.

## கைவேலைப் பகுதி – நீங்களும் செய்து பாருங்கள்

### ஒக்கிட் பூ — எஸ்-எஸ்

**தேவையான பொருட்கள்:**

நாவல் நிற ஸ்ரோக்கிநெற் 1
பச்சை நிற ஸ்ரோக்கிநெற் 1
தங்க நிறக்கம்பி 1 டசின்
மகரந்தம் 1 சிறுகட்டு
கட்டுக்கம்பி
நூல்
கம்ரேப்-(ஒட்டும் நாடா)


**அளவுகள்:**

**பெரிய பூ:**
7 அங்குல அளவிலான 5 துண்டுகள்
9 அங்குல அளவிலான 1 துண்டு.

**சிறிய பூ:**
6 அங்குல அளவிலான 5 துண்டுகள்
8 அங்குல அளவிலான 1 துண்டு

**மொட்டு:**
5 1/2 அங்குல அளவிலான 3 துண்டுகள்
6 1/2 அங்குல அளவிலான 1 துண்டு

**இலைகள்:**
6 1/2 அங்குல அளவிலான 3 துண்டுகள்
5 அங்குல அளவிலான 1 துண்டு.




**செய்முறை:**

பெரிய பூ- 7 அங்குல அளவிலான 5 துண்டு கம்பிகளையும் 9 அங்குல அளவிலான 1 துண்டு கம்பியையும் வெட்டி எடுக்குக. எடுத்த கம்பிகளை தனித்தனியாக இரு நுனிகளும் சேரும் வண்ணம் குறட்டினால் முறுக்கவும். முறுக்கிய கம்பிகளில் 7 அங்குல அளவான கம்பிகளில் 3 இதழை படம் 1ல் காட்டப்பட்டவாறு அமைக்குக.

அடுத்து 7 அங்குல அளவில் இரு துண்டுகளையும் படம் 2ல் காட்டப்பட்டவாறு அமைக்குக. அடுத்து ஒரு 9 அங்குல கம்பியை படம் 3ல் காட்டியவாறு அமைக்குக.

அவ்வாறு அமைத்த இதழ் கம்பிகளுக்கு நாவல் நிற ஸ்ரோக்கிநெற்றினால் கட்டிக் கொள்ளவும்.

அதனையடுத்து 5 மகரந்த நெட்டுக்களை எடுத்து இரண்டாக அவ் மகரந்தத்தை மடித்து கட்டுக்கம்பியினால் கட்டவும்.

கட்டியபின் 10 துணிக்கைகள் ஆகிவிடும். மகரந்தம் கட்டப்பட்ட கட்டுக்கம்பியில் படம் 1ல் காட்டிய இதழில் ஒன்றைமுதலில் வைத்துகட்டிக்கொண்டதும் அடுத்து படம் 2ல் காட்டிய இதழை வைத்துக் கட்டவும். இதனையும் கட்டிய பின் படம் 1ல் காட்டிய வடிவ இதழ்களை அருகருகே வைத்து நூலினால் கட்டவும்.

அதனையடுத்து படம் 3ல் காட்டிய அமைப்பு இதழைக் கட்டவும். இப்போது எஞ்சி இருக்கும். படம் 2ன் வடிவ இதழை 9 அங்குல இதழின் (படம் 3) கீழே வைத்துக் கட்டவும்.

அவ்வாறு அமைத்த பின் கம்ரேப்பினால் சுற்றிக் கொள்ளவும். இவ்வாறு அடுத்த சிறிய பூவையும் மொட்டையும் செய்து பூக்களின் இதழ்களை இலேசாக கீழ்நோக்கி வளைக்கவும். மொட்டின் இதழை வளைக்க வேண்டாம்.

**இலைகள்:** படம் 4ல் காட்டியவாறு அமைத்து பச்சைநிற ஸ்ரோக்கிநெற்றினால் அமைத்து கட்டுக்கம்பியினால் சுற்றிக்கட்டி கம்ரேப்பினால் சுற்றவும்.

**கொப்பாக கட்டும் முறை:** தடித்த கட்டுக்கம்பியில் சிறிய இலையையும் மொட்டையும் வைத்து கம்ரேப்பினால் சுற்றி அடுத்த இரண்டு இலையையும் சிறிய பூவையும் வைத்து மீண்டும் கம்ரேப்பினால் சுற்றவும்.

அவ்வாறு அடுத்த இலையையும், பெரிய பூவையையும் வைத்து மீண்டும் விடப்பட்ட கம்ரேப்பினால் சுற்றவும். தற்போது பூக்களை பார்வைக்கு அழகாக்கிக் கொள்ளுங்கள். இப்போது மலைநாட்டுச் செடியில் இருந்து பறிக்காத ஒக்கிட் மலர் உங்கள் இல்லங்களை அழகுபடுத்துவதற்கு தயாராகிவிட்டது.

## பெண்கள் கவனிக்கவும்

*தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுப் போட்டி கூப்பன்களை அனுப்பி விட்டீர்களா? அனுப்பாவிட்டால் உடனே அனுப்பி வையுங்கள். கடைசித் திகதி 30.7.94.*

முகவரி- லேடீஸ் ஸ்பெசல்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772, கொழும்பு.

### அடுத்த போட்டிக்கு தயாரா நீங்கள்?

பல்வேறு ரகமான- தரமான பரிசுகளை அள்ளித்தரப் போகும் அதிஷ்டப் போட்டி விபரங்கள் அடுத்த முரசில் வரும். பெண்கள் மட்டும் பங்குபற்றும் போட்டி இது.




## சிந்திக்கலாம் இங்கே...

தினமும் பலரைச் சந்திக்கிறோம். சிந்தித்துப்பார்த்தால் அதில் சிலரின் முகம்தான் நினைவில் நின்றுகொண்டிருக்கிறது.

சில சந்திப்புக்களை நினைத்தால் நெஞ்சு தித்திக்கிறது.

வேறு சில சந்திப்புக்களை நினைத்தால் கசப்பே முந்திக்கொள்கிறது.

சில சந்திப்புக்கள் தென்றல் மாதிரி சுகமானவையாக நெஞ்சின் ஆழம்வரை சென்று சுகம் தருகின்றன.

மீண்டும் அந்த சந்திப்புக்களை காண மன மண்டபத்தின் கதவுகள் திறந்து காத்திருக்கின்றன.

இன்னொருமுறை, இன்னொருமுறை என்று அந்தச் சந்திப்புக்காக மனம் விண்ணப்பம் போட்டபடி விடாமுயற்சியில் இறங்கிவிடுகிறது.

மீண்டும் ஒரு சந்திப்புக்கு இடமிருக்கிறதோ இல்லையோ எப்போது நினைத்தாலும் நெகிழக்கூடிய சந்திப்புக்கு மனம் என்றுமே மரியாதை கொடுக்கிறது.

சந்திப்புக்கள் இல்லாத வாழ்க்கையில்லை. அந்த சந்திப்புக்களை சாகாவரமுள்ளவையாக மாற்றுவதற்கு எல்லோராலும் முடிவதுமில்லை.

சிலர் இருக்கிறார்கள்- எதிரே இருப்பவரின் மனநிலை புரியாமல் தம் மனதில் உள்ளதையெல்லாம் கொட்டி முடித்துவிட்டுத்தான் நடையைக் கட்டுவேன் என்பதுபோல பிடிவாதமாகப் பேசிக்கொண்டிருப்பார்கள்.

கேட்டுக்கொண்டிருப்பவருக்கு இடையிலே எழுந்து ஓடிவிடலாமா என்பதுபோல இருக்கும்.

அதனால் 'அறுவை மன்னர்கள்' என்று அவர்களுக்கு பட்டம் வழங்கி எதிரேயிருப்பவர் பழிதீர்த்துக்கொள்ள வேண்டியதாகிவிடுகிறது.

ஒருமுறை அப்படியானவர்களை சந்தித்தால் போதும்.

மறுமுறை அவர் சந்திக்க வந்தாலே போதும் -அவரிடம் அனுபவப்பட்டவர்கள் ஒளித்து ஓடத் தொடங்கிவிடுவார்கள்.

எதிரேயிருப்பவருக்கும் பிரச்சனைகள் இருக்கலாம்.

பொறுமையாக இருந்து பேச நினைத்தாலும் வேலைச் சுமைகள் தடையாக இருக்கலாம். நேரமின்மை குறுக்கே நிற்கலாம்.

வெளிப்படையாக சொல்லச் சிலர் தயக்கம் காட்டுவார்கள்.

பந்தா காட்டுகிறான் என்று நினைப்பார்களோ என்று யோசித்து சந்திப்புக்கு உடனே சம்மதித்து விடுகிறார்கள்.

அப்படி சம்மதித்துவிடுகிறார்களே என்பதற்காக ஒரு சரித்திரத் தொடர் கதையோடு போய் அமர்ந்து அறுக்கத் தொடங்கிவிட்டால் எதிரேயிருப்பவர் சலிக்கத் தொடங்கிவிடுவார்.

நாகரிகம் கருதி அறுவையை பொறுத்துக்கொள்ளக்கூடும்.

ஆனால், அடுத்த முறை சந்திக்காமல் தொடர்பை அறுத்துவிடவேண்டும் என்று மனதில் ஒரு சபதமே வகுத்துவிட வேண்டிவரும்.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். ஒருவரோடு அப்போதுதான் அறிமுகமாகி இருப்பார்கள்.

அடுத்த நிமிடமே அவரது அந்தரங்க விசயங்களை அலசுவதுபோல கேள்வி கேட்டு அறுக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

"என்ன வேலையில் இருக்கிறீர்கள்? சம்பளம் எவ்வளவு? கட்டுப்படியாகிறதோ? கடன் இருக்கிறதா?"

அறிமுகமாகி அரை மணிகூட ஆவதற்குள் இத்தனை கேள்விகளா? எட்டி உதைக்கலாம் போல் இருக்கும்.

அப்படியானவர்களை மறுமுறை பார்க்கும்போது சிரிப்பதற்குகூட யோசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

சிரித்தால் எங்கே நெருங்கி வந்து தேவையில்லாத கேள்விகளை கேட்டுத் தொலைத்து விடுவார்களோ என்று பயம் வந்துவிடும்.

கண்டும் காணாதமாதிரி கடந்து போய்விடலாமோ என்று நினைக்கத் தொடங்கிவிடுவார்கள்.

கதைக்க ஆள் கிடைத்த திருப்தியில் இழுத்துவைத்து அறுப்பவர்களை இன்னொரு அறுவை மன்னரால்தான் நெருங்க முடியும்.

ஆயிரம் பிரச்சனையுள்ளவர்கள் 'ஆளைவிடு சாமி' என்று ஓடத்தான் செய்வார்கள்.

நியாயமான பிரச்சனைகளை எடுத்துச் சொல்லும்போதுகூட நாம் மட்டுமே விடாமல் பேசிக்கொண்டிருக்கக் கூடாது.

எதிரேயிருப்பவர் என்ன நினைக்கிறார்? சொல்லப்படுவதை புரிந்துகொள்ள விரும்புகிறாரா? சொல்லும் கருத்தோடு ஒத்துப்போகிறாரா இல்லையா? என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே அவரையும் பேச அனுமதிக்க வேண்டும்.

பேசுவதற்கு முன்னர் பேசப்போகும் விடயத்தை அறிய வேண்டியவர் அதற்கு தயாராக இருக்கிறாரா என்று அறிந்து கொள்ள வேண்டும்.

இவையெல்லாம் சந்திப்புக்கள் சலிப்பாக மாறாதிருக்க தேவையான விடயங்களில் சிலமட்டும்தான்.

அனுபவமே ஆசான். மாறுபட்ட சந்திப்புக்கள் தினம் நேருகின்றன.

அவற்றில் இருந்து கற்றுக்கொண்டால் நம்மைச் சந்திப்பதற்கு ஆர்வமுள்ளவர்கள் அதிகமாகி விடுவார்கள்.

அதுபோல் நினைத்தால் நெஞ்சு மகிழும் சந்திப்புக்களும் நமது- சிந்திப்புக்குக் கிடைக்கும்.

(மறுவாரமும் சிந்திக்கலாம்)

## சமைப்போம் சுவைப்போம் தொகுத்துத் தருவது—சுகந்தினி

### பால் தயிர் பேர்பி (Milk-Curd Burfi)

**தேவையான பொருட்கள்:**

கடலை மாவு ஒரு கோப்பை
கெட்டித் தயிர் இரண்டு கோப்பை
நெய் இரண்டு மேசைக்கரண்டி
கெட்டியான பால் ஒரு கோப்பை
சீனி மூன்று கோப்பை
ஏலக்காய் பொடி ஒரு தேக்கரண்டி

**செய்முறை:**

1. கடலை மாவை, நெய்யில் வாசனை வரும்வரை வறுத்துக்கொள்ளவும்.
2. அடி கனமான பாத்திரத்தில் சீனி, பால், தயிர், வறுத்த கடலை மாவு முதலிய பொருட்களை கலந்து அடுப்பில் வைக்கவும். ஏலக்காய்ப் பொடியையும் போடவும்.
3. விடாமல் கிளறிக்கொண்டே இருக்கவும். பேர்பி பாத்திரத்தில் ஒட்டாமல் திரண்டு வரும்போது, நெய் தடவிய தட்டில் கொட்டி சமமாகத் தட்டி விடவும்.
4. ஆறியவுடன் சதுரங்களாக வெட்டிக் கொள்ளவும்.

## வீட்டுக் குறிப்புக்கள்



வீட்டிற்குள் அழகுக்காக வைக்கப்படும் செடிகளைக் கூடுமானவரை நேரடியாகச் சூரிய ஒளி படும் இடத்தில் வைக்காதீர்கள். வீட்டிற்குள் வைக்கப்படும் செடிகளுக்குப் பொதுவாகக் குறைந்த அளவு சூரிய ஒளி, தண்ணீர் இருந்தாலே போதுமானது. அத்துடன் குரோட்டன் வகை செடிகள் வைத்தால் அழகாக இருக்கும்.



'டேபிள் மாட்ஸ்' எனப்படும் துணிகளை உபயோகப்படுத்திய பிறகு உடனே துவைத்துக் காய வைத்து விடுங்கள். மீண்டும் உபயோகப்படுத்த வசதியாக இருக்கும். இல்லாவிட்டால் துணி நாற்றமெடுத்து கசங்கி மீண்டும் உபயோகப்படுத்த முடியாத அளவுக்கு மாறிவிடும்.

உடைந்த பிளாஸ்டிக் டப்பாக்களின் மூடியை எடுத்து அதில் அழகான கலர் பேப்பரை ஒட்டி விடுங்கள். சிறு ட்றே ரெடி. குழந்தைகளுக்கு, பிஸ்கட் சிற்றுண்டி வகைகளை அதில் போட்டுக்கொடுக்கலாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பலே இரட்டையர்கள்



உழைப்பில் உயரும் உறுதியோடு இருவரும் ஒன்றாக



சிறுவயதில் இரட்டையர்

## உயரத்தில் குறைந்தாலும் உழைப்பாலே உயர்ந்தவர்கள்



மனைவியோடும் மகனோடும் தானும் ஒரு குழந்தைபோல்

**ஜோன் றைஸ் மற்றும் கிறேக் றைஸ் ஆகிய இரட்டையர்கள் 1951ல் பிறந்தவர்கள். இவர்கள் மிகக் குள்ளமாக இருப்பதைக் கண்ட-வறுமையில் வாடிய பெற்றோர், ஃபுளொரிடாவிலுள்ள ஒரு மருத்துவமனையில் இவர்களை அனாதரவாக விட்டுவிட்டு தலைமறைவாகி விட்டனர். ஆனால் இச்சிறுவர்களை அதிஷ்டம் புறக்கணிக்கவில்லை. இன்று இவர்கள் இலட்சாதிபதிகளாக 'றோல்ஸ் றொயிஸ்' வண்டிகளில் வலம் வருகின்றனர். பலதரப்பட்ட வர்த்தக நிறுவனங்களையும் நடத்தி வருகின்றனர்.**

அனாதைச் சிறுவர்களான ஜோனும் கிறேக்கும் பண்ணை உரிமையாளர்களான ஃபிராங்-மில்ரட் வின்ஸர் தம்பதியின் அரவணைப்பைப் பெற்றனர். குள்ளமான பிள்ளைகள் குடும்பத்துக்குக் கேடு என்று கருதப்பட்ட காலம் அது. இருப்பினும் ஜோனும் கிறேக்கும் பண்ணை உரிமையாளர்களின் அன்புக்குப் பாத்திரமானார்கள். பசுக்களில் பால் கறப்பது, கோழிகளிடும் முட்டைகளைச் சேகரிப்பது போன்ற வேலைகளை சிறுவர்கள் இருவரும் சுறுசுறுப்பாகச் செய்தனர். உரிமையாளர்களின் நன்மதிப்பையும் பெற்று பள்ளியில் சேர்ந்து படித்தும் வந்தனர்.

இவர்கள் வளர வளர இவர்களுடைய இலட்சியங்களும் வளரலாயிற்று. தாங்கள் சொந்தமாகவே ஏதாவது தொழில் புரிய வேண்டும், என்று ஆசைப்பட்டதால் அவர்களுடைய ஆர்வத்தை, வளர்ப்புப் பெற்றோர் மதித்து உதவ முன்வந்தனர். பெண்களுக்கான அலங்காரப் பொருட்களை வீடுவீடாகச் சென்று விற்கும் தொழிலை ஆரம்பித்தனர். குள்ளமானாலும் நாகரீக உடை அணிந்து மிகச் சுறுசுறுப்பாக இயங்கி, சாதுரியமாகப் பேசி பொருட்களை விற்கலானார்கள். இவர்களுடைய பாங்கு இளம் பெண்களுக்கு வேடிக்கையாகவும் இருந்தமையினால் வியாபாரம் களை கட்டியது.

இத்தகைய வியாபாரத்தில் கிடைத்த சேமிப்பினை வீடு வளவு, தோட்டம் துரவு வாங்கி விற்கும் துறையில் முதலீடு செய்தனர். மளமளவென்று வியாபாரம் பெருகியது. இன்று இலட்சக் கணக்கான டொலர் பணம் புரளும் பல வர்த்தக நிறுவனங்களுக்கு உரிமையாளர்களாகிவிட்டார்கள்.

இருவரும் 2 அடி 8 அங்குல உயரம் கொண்டவர்களாகவே உள்ளனர். இருப்பினும் பிரமாண்டமானதோர் மாளிகையிலேயே இருவரும் வசிக்கின்றனர்.

"சின்னவர்கள் என்பதனால் சிறிய வீடுகளில் வசித்தால், பலதரப்பட்ட தொழில் நிமித்தம் எங்களைத் தேடி வருவோரை எவ்வாறு உபசரிக்க முடியும்?" என்று கேட்கிறார் ஜோன்.

கிறேக், ஜான் என்னும் அழகியினை மணந்துகொண்டார். 5 வயதில் ஒரு மகன் இவர்களுக்கு உண்டு. ஆனால் ஜோன் மணம் முடிக்கவில்லை. அவரும் தன் சகோதரனை விட்டு விலகாமல் ஒரே குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர்.

# தகவல் பெட்டி

## எடை குறைந்த இரட்டையரை தினம் துரத்தும் மரணம்!



மைக்கீலா மற்றும் சமந்தா ஆகிய இருவரும் இரட்டைச் சகோதரிகள். பிறந்தது முதல் ஆனந்தமாக வளர்ந்து வந்தார்கள். வயதேற ஏற அவர்களுடைய உடலமைப்புகளும் வளர்ந்தன. ஆனால் இவ்வளர்ச்சி ஓரளவோடு நிற்கவில்லை. பருவ வயதில் இளைஞர்களைக் கவரவேண்டிய காலத்தில்-அளவுக்கு மிஞ்சி ஊதிப் பருத்து விட்டார்கள்.

உடல் பருப்பதனாலும் அபாயம் ஏற்படுகிறது. அதேபோல் பருமனான உடலைக் குறைப்பதற்கு உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தாலும் அபாயம் உண்டாகிறது என்பதற்கு இவ்விரு சகோதரிகளும் எடுத்துக்காட்டு.

தங்களை எந்த ஆடவனும் திரும்பிப் பாராமலிருப்பதற்கு தங்கள் உடற் பருமனே காலாகும் என்பதனால் தாங்களாகவே உணவுக் கட்டுப்பாட்டை வகுத்துக்கொண்டார்கள். சில மாதங்களில் எடை குறைந்து உடலும் கவர்ச்சியாகத் தென்பட்டது. அப்போது இவர்கள் 126 இறாத்தல் எடைகொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

உண்மையில் இவர்களைப் பார்த்து கண் வைத்த ஆடவர் தொகையும் அதிகரிக்க ஆரம்பித்துவிட்டதை இவர்களின் தாயாரே அவதானித்தார்.

ஆங்காங்கே ஊழல் சதை தொங்குவதையும் குறைத்துவிடலாம் என்றெண்ணி மேலும் உணவுக் கட்டுப்பாட்டைத் தொடர்ந்தனர். அத்துடன் தொடர்ந்து பேதி மருந்துகளையும் சாப்பிட்டு வந்தனர். இதனால் இவர்களுடைய உடம்பு மிக மோசமாக இளைக்க ஆரம்பித்துவிட்டது. எதை உண்டாலும் அது சமிபாடு அடையாமல் வெளியேற ஆரம்பித்துவிட்டது. காலம் கடந்து விட்டதால் மருத்துவர்களாலும் இவர்களுக்கு மருத்துவ உதவி அளிக்க முடியாமற் போய்விட்டது.

இருவரும் ஒரே கட்டிலில்தான் படுப்பார்கள். கடந்த ஏப்ரலில் இவர்களுக்கு 26 வயது பூர்த்தியானது. ஒருநாள் காலை சமந்தா கண் விழித்தபோது அருகில் படுத்திருந்த மைக்கீலாவின் விழிகள் திறக்கவேயில்லை. மைக்கீலா இறந்து விட்டாள். சமந்தா கண்ணீர்விட்டு கதறினாள். மைக்கீலா இறக்கும்போது அவள் எடை 63 இறாத்தல்.

சமந்தாவையாவது காப்பாற்றிவிடலாம் என்று இங்கிலாந்து பேர்மிங்ஹாமிலுள்ள மருத்துவர்கள் போராடி வருகின்றனர்.

மைக்கீலா சாவதற்கு முன்னர் சமந்தாவிடம் "நான் இறந்தாலும் நமது சபதத்திலிருந்து நீ விடுபட்டுத் தப்பிப் பிழைத்துக்கொள்" என்று கூறினாராம்.

சமந்தா 77 இறாத்தல் எடை கொண்டவளாகக் காணப்படுகிறாள். தன் சகோதரி தனக்காகவே தன்னைத் தியாகம் செய்திருப்பதால் தானாவது நிச்சயம் வாழ்ந்து காட்டவேண்டும் என்ற துணிவுடன் காணப்படுகிறார். இருப்பினும் அவருடைய நாட்களும் எண்ணப்படுகின்றன.

# பூனைதான் ஆனால்....?

## புத்தியுள்ள சின்ன மனிதன்!

'இளவரசி கிற்றி' அருமையான பெயர்தான். அதனை ஒரு பூனைக்கு வைத்திருக்கிறார்கள். அதுதான் இன்று உலகிலேயே அதி புத்திசாலிப் பூனையாகக் கருதப்படுகிறது. 75 விதமான விளையாட்டுகள் அந்த பூனைக்கு கைவந்த கலை.

பியானோவில் இசை மீட்டுகிறது; வளையங்களுக்குள் பாய்கிறது. கூடைப் பந்தாட்டமாடுகிறது. எத்தனை தடவை பாய்ந்தது, எத்தனை கோல் போட்டது என்று எண்ணவும் அறிந்து வைத்திருக்கிறது.



பேர்டியூ மிருகவியல் பல்கலைக் கழகப் பேராசிரியரான அலன் பெக் என்பவர், "இத்தகைய பூனைகள் மிக அபூர்வமாகவே கிடைக்கின்றன. இது ஒரு பூனை வடிவங்கொண்ட புத்தியுள்ள சின்ன மனிதன்" என்கிறார்.

ஃபுளொறிடாவில் மியாமியில் வசிக்கும் கரன் பைனே இப்பூனைக் குட்டியை 8 வருடங்களுக்கு முன்னர் கண்டெடுத்தார். கரன்பைனே பூனையாருக்கு பல பயிற்சிகளை வழங்கினார்.

இப்போது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் தோன்றி அசத்திவரும் பூனையாருக்கு பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிகிறது.

www.padippakam.com



## சேகரிப்பு

பழங்காலத்துப் பொருட்களை எல்லாம் வீட்டில் பத்திரமாகச் சேகரித்து வைத்துள்ளார் நாசர். விரைவில் ஒரு பொருட்காட்சி நடத்த வேண்டும் என்று திட்டமிட்டுள்ளாராம்.

★



ரவீனா ராண்டன்

உனக்கும் போர் நிறுத்தம் செய்ய பிரியமில்லையோ? ஏவும் கணைகளால் எரிகிறது பார் பொறுமை!

## சின்ன சின்ன ...

நன்றி - நூலகத்திட்டம்

### அப்படி பைத்தியம்

நடிகைகள் பலர் தங்கள் தாய்மார்கள் பற்றித்தான் ... தள்ளுவார்கள். ஆனால் டிஸ்கோ சாந்தி வித்தியாசமானவ... போதும் அங்கு குடிபுக மனமில்லாமல் இருக்கிறார். காரண... கடைசிவரை வாழ்ந்த வீட்டை விட்டுப் போகு...

### வள்ளி தள்ளி வரக்கூட...

'வள்ளி வரப்போறா' படத்தை பற்றி பத்திரிகையாளர் ... சொன்ன கருத்து, 'வள்ளி வரப்போறா' என்று பெயர ... வள்ளி, தள்ளி வரப்போறா என்பது மாதிரி பட...

### ஒதுங்கியது ஏன்?

முன்னர் திமுகவுக்கும் கலைஞருக்கும் ஆதரவாக ... ராதிகா பின்னர் ஒதுங்கிக்கொண்டார். இப்போது ... உள்துறை அமைச்சராக நடித்தும் கொண்டி... அப்பாத்திரத்தில் நடிக்க ...

### விளக்கம் தெரிய...

'சரிகமபதநி' படத்தில் புலமைப்பித்தன் எழுதி... 'சில்பான்ஸி கில்மா' என்று ஒரு வார்த்தை வரு... அதற்கு எனக்கு அர்த்தம் தெரியாது. பார... வார்த்தையை சேர்க்கச் சொன்னார். அ... கேளுங்கள்" என்று புலமைப்பித்தன் ந... பார்த்திபனோ, அது கல்லூரி மா... வார்த்தை என்கிறார். அப்படி... அந்த வார்த்தை வரு... அதுசரி 'சில்பான்சி கில்மா'...



### குள்ளமணிக்...

நடிகர் குள்ளமணி லேகப்பட்டவர... ஊரில் தனது பெய... அமைத்துள்ளார். உயரமானவா... வசதியாகத்தான் கட்டியிருக்கிறா...

### ஊர்வசிக்கு...

ஷோபனாவுக்கு ஊர்வசிப... கிடைத்தது நடிகை ஊர்... பட்டியலில் இருந்து வி... இருந்து இப்போது வெற்... நிற்கிறார். ஐந்து வ... ஊர்வசி...

### நெற்றியில்...

'கிழக்குச் சீ... அண்ணன் தங்கை... விருதுமாகும். ராத... யாக... பழைத் தொ... ராதிகாவுக்கு ... கொடுக்க...

### குஷ்பூவும் இருக்கிறார்

குஷ்பு புராணம் ஓய்ந்து விட்டது. ஆனால் குஷ்பு இன்னமும் ஓயவில்லை.

நெப்போலியனுக்கு ஜோடியாக குஷ்பு நடிக்கும் புதிய படம் 'என் பொண்டாட்டி நல்லவ' (கிராமத்து மக்களுக்காக பெயர் வைக்கிறார்கள் பாருங்கள்)

ஜனகராஜ், செந்தில், ஒய்.ஜி.மகேந்திரன் ஆகியோரும் 'என் பொண்டாட்டி நல்லவ' படத்தில் நடிக்கிறார்கள். இசை-தேவா. கதை-திரைக்கதை இயக்கம்-செந்தில்நாதன்.

### 'ஜாலி டைப்'

இந்தியில் இருந்து தமிழுக்கு வந்த நடிகைகள் பட்டியலில் ரவீனா ராண்டன் வித்தியாசமானவர். அதாகப்பட்டது, இந்தியில் முன்னணியில் உள்ளபோதே தமிழில் நடிக்க ஓ.கே சொல்லிவிட்டார். பி.வாசு அழைத்தவுடன் வந்து அர்ஜுனுடன் 'சாது' படத்தில் நடித்திருக்கிறார். ஸ்ரீதேவியோடு நட்பாக உள்ள ரவீனா ராண்டன் 'ஜாலிடைப்' என்று பட்டம் வாங்கி வைத்திருக்கிறார்.

கோடம்பாக்கத்திலும் 'ஜாலிடைப்' தனமாக அவர் நடந்து கொண்டதால் கிசு.கிசுக்கள் பரவிவருகின்றன.

### சரத் சந்தோசம்

மகாபிரபு படத்தில் சரத்குமாருக்கு வினிதா, கஸ்தூரி, ஜோடிகள். ... சண்டைக்காட்சி ... படத்தின் பலம்.

இசை-தேவா. வித்தியாசமான சண்டைக்காட்சிகளை அமைப்பதற்காக திருப்பதிக்குப் போய் மூன்று நாள் ... சுவாமி செலுத்தினாராம். ... திறமையை வெளிப்படுத்தும் ... பாத்திரம் மகாபிரபு படத்தில் கிடைத்திருப்பதாகச் சொல்கிறார் சரத்குமார்.

### ஒய்வாக இருக்க ஆசை!

ஒய்வாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார் விசித்ரா. மனதை வாட்டும் பிரச்சனைகள் வரும்போது படுக்கையறையைத் தான் மனம் நாடுகிறதாம். நிம்மதியாகத் தூங்கி விடலாமே அதுதான்.



பிரபு
படம்-வியட்நாம் காலனி

பிரபு
படம்-ஜல்லிக்கட்டுக்காளை

## சூடாக ரெடியாகும் படங்கள்

### புது முகங்களோடு வளருகிறது


ஏற்கனவே பிரபு நடித்து வெளியான படம் 'மறவன்'. இப்போது தயாராகும் படம் 'மறவன் மகன்'. கதாநாயகன் புதுமுகம். கதாநாயகியும் அப்படியே. பழைய முகங்களும் உண்டு. ராதாரவி, சந்திரசேகர், ராஜீவ், எஸ்.எஸ்.சந்திரன், சார்லி, குமரிமுத்து மற்றும் பலர்.

### தேவியின் சிங்கம்

இந்தியில் ஸ்ரீதேவிக்கு போட்டிகள் அதிகம். இளம் கதாநாயகிகள் வந்து புகுந்து ஒரு கலக்கு கலக்குகிறார்கள். அதனால் தெலுங்கில் கவனம் செலுத்துகிறார் தேவி. நாகார்ஜுன் ஸ்ரீதேவி ஜோடி சேர்ந்த படம் ஒன்று அங்கு வெற்றிகரமாக ஓடியிருக்கிறது. உடனடியாக அதனை தமிழில் மொழிமாற்றுகிறார்கள். தமிழில் படத்தின் பெயர் 'கொங்குநாட்டுச் சிங்கம்'.

### ராசி நல்ல ராசி!

'திருடா திருடா' படத்தை பெரிதும் நம்பியிருந்தவர் ஆனந்த். ஆனால் திருடா கைவிட்டுவிட்டது. ஆனாலும் மணிரத்னம் படத்தில் நடித்தவர் என்ற பெருமை மிஞ்சியிருக்கிறது. அதனால் இப்போது ஒரு படத்தில் கதாநாயகன் வாய்ப்பு. படத்தின் பெயர் 'முதல் பயணம்.' ஆனந்த் ராசியுள்ளவர். ஒன்றுக்கு மூன்று ஜோடிகள். அஸ்வினி, சரித்திரா, மீரா அவர்கள்தான் மூன்று நாயகிகள்.



ஸ்ரீதேவி

பாவையிவள்
பால் முகம்
பார்த்த பின்னாலே
பவுர்ணமிச் சந்திரனை
பார்க்க விருப்பமில்லை

### மாபெரும் தயாரிப்பு மாஸ்டர்

சத்யராஜ் நடிக்க ஜோசி இயக்கிய 'ஏர்போர்ட்' படத்தை தயாரித்து புகழ்பெற்றவர் எஸ்.மது. இப்போது மற்றொரு பிரமாண்டமான படத்தை தயாரிக்கப் போகிறார். மம்முட்டி-நெப்போலியன் ஆகியோர் கதாநாயகர்களாக நடிக்கிறார்கள். மம்முட்டிக்கு ஆசிரியர் பாத்திரம். நெப்போலியனுக்கு துப்பறியும் போலீஸ் அதிகாரி வேசம். மதுபாலாவுக்கு மம்முட்டி, நெப்போலியனுக்கு ரஞ்சிதா ஜோடிகள். படத்திற்கு 'மாஸ்டர்' என்று பெயர் சூட்டியுள்ளார்கள். ஆர்.வி.உதயகுமாரின் உதவியாளர் வி.சி.ரமணி இயக்குகிறார். படப்பிடிப்புகள் ஆரம்பமாகி ஒருவாரமாகிவிட்டது.

### பிய்த்து உதறுகிறார் சில்க் சுமிதா

அன்று பெய்த மழைக்குப் பிறகு சில்க் சுமிதா கதாநாயகியாக நடிக்கும் படம் 'ப்ளே கேர்ள்ஸ்'. தாம்பத்திய வாழ்வுக்கு கணவனை தயார்படுத்தும் யோகாசன ஆசிரியை வேசம்.

கவர்ச்சியை நம்பி எடுக்கப்படும் படம். சில்க் உள்ள போது கவர்ச்சிக்கா பஞ்சம்?

### நம்மவரில் பேராசிரியை

நம்மவர் பட விசயங்களை மர்மமாகவே வைத்திருக்கிறார் கமல். கமலுக்கு ஜோடியாக நடிக்கும் கௌதமிக்கு பேராசிரியை வேசம் என்று தகவல்.

### ஆட்டமே பயிற்சியாக!

அஹானா காலையில் உடற்பயிற்சி செய்யும்போது அருகில் பாடல் ஒலித்தபடி இருக்கும். பாட்டுக்கு ஏற்றபடி ஆடுவதே அவரது பயிற்சியாம்.

இந்தி இசை, மேலைத்தேச இசை இரண்டும் அஹானாவுக்கும் பிடிக்குமாம். சிவப்பான இந்தக்கலைகளை வெளியிட்டுள்ளது.

நடிகர் சில்வெஸ்டர் ஸ்டாலோன் என்றால அஹானாவுக்கு பிரியம். ஹொலிவூட் நடிகர் ஸ்டாலோன் கோடம்பாக்கம் வந்தால் அவரை கொத்திப்போக சுகன்யாவும் அஹானாவும் போட்டி போடுவார்கள் போல் இருக்கிறது. ஆனால் அவர்தான் வரமாட்டார்.

### காளை வளருகிறது

'சின்னத்தம்பி' வெற்றிப்பட தயாரிப்பாளர் கே.பாலு தயாரிக்க சத்யராஜ் நடிக்கும் 'தோழர் பாண்டியன்' திரைக்கு வருகிறது. அடுத்து கே.பாலு தயாரிக்கும் பிரபு நடிக்கும் 'ஜல்லிக்கட்டு காளை' வேகமாக வளர்ந்துவருகிறது. பிரபுவுக்கு கனகா, செண்பகா என்று இரு ஜோடிகள்.

ஒன்று... 'குஷ்பூவுக்கு ...

இருந்...

பல க...

www.padippakam.com

# மினி சினி

★ எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கத்தில் விஜயகாந்த் நடித்த 'ராஜதுரை' எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. ஆனால் 'ராஜதுரை' தெலுங்கில் 'ராஜசிம்மா' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வெளியிட்டபோது, அங்கு வெற்றிபெற்றுள்ளது.

★ பாரதிராஜாவின் 'கருத்தம்மா' படத்தில் கதாநாயகியாக நடிக்கும் ராஜஸ்ரீ ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர் முதலில் 'கந்ததகுடி' என்ற கன்னடப் படத்தில் நடித்துள்ளார். இப்படம் வெள்ளிவிழாக் கொண்டாடியதை அடுத்து ராஜஸ்ரீ பாரதிராஜாவின் கண்ணில் பட்டே, 'கருத்தம்மா'வில் கதாநாயகியானார்.

★ மன்சூர் அலிகான் கதாநாயகனாக நடித்துவரும் 'வாழ்க ஜனநாயகம்' படத்திற்காக பாடல்களை அவரே எழுதி, இசையமைத்துள்ளார். இதில் மேற்கத்திய பாணியில் வரும் பாடலொன்றை மன்சூர் அலிகான் சொந்தக்குரலில் பாடியுள்ளார்.

★ மலையாளத்தில் பெரு வெற்றிபெற்ற 'காஷ்மீரம்' படத்தைத் தமிழில் 'நாட்டுக்காக...' என்ற பெயரில் மொழிமாற்றம் செய்திருக்கிறார்கள். கறுப்புப் பூனைப் படையைப்பற்றிய கதையைக் கொண்ட இப்படத்தில் மலையாள முன்னணி நடிகர் சுரேஷ் கோபி கதாநாயகனாக நடித்துள்ளார். இதில் இவருக்கு ஜோடியாக நடித்திருப்பவர் பிரியாராமன்.

★ பாலுமகேந்திராவின் 'வண்ண வண்ணப்பூக்கள்' படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடித்தவர் ஆதித்யன். அப்படத்திற்குப் பின்னர் மூன்று தெலுங்குப் படங்களில் நடித்தார் ஆதித்யன். இவர் மீண்டும் பாலுமகேந்திராவின் இயக்கத்தில் தமிழ்ப் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

★ தொலைக்காட்சிக்காக 'இரவில் ஒரு பகல்' என்ற தொடரில் சுரேஷ் மேனன்-ரேவதி இணைந்து நடித்திருந்தனர். தற்போது இந்த ஜோடி மீண்டும் தொலைக்காட்சித் தொடர் ஒன்றில் இணைகிறார்கள். இந்த தொலைக்காட்சித் தொடரை சுரேஷ்மேனனே தயாரிக்கவுள்ளார்.

★ ஆர்.வி.உதயகுமார், ஆர்.கே.செல்வமணி ஆகிய திரைப்படக் கல்லூரி மாணவர்களை அடுத்து 'அதர்மம்' புகழ் ரமேஷ் கிருஷ்ணன் வெற்றிப்பட இயக்குநர் என்ற பெயரைப் பெற்றுள்ளார். இப்போது ரமேஷ் கிருஷ்ணன் முன்னணி நடிகர்கள் நடிக்கும் நான்கு புதிய படங்களை இயக்கவுள்ளார்.

★ 'காதல்வா' என்ற இந்திப் படத்தில் திவ்யபாரதியின் மாமியாராக நடிக்கச் சம்மதித்தார் பிரபல இந்தி நடிகை டிம்பிள் கபாடியா. திவ்யபாரதி இறந்த பின்னர் திவ்யபாரதியின் வேடத்தில் நடிக்கும் ஜூஹி சாவ்லாவிற்கு மாமியாராக நடிக்க முடியாது என மறுத்துவிட்டார் டிம்பிள் கபாடியா.

★ 'இதுதான்டா போலீஸ்' புகழ் டாக்டர் ராஜசேகர் தமிழில் நடிக்கும் 'தமிழா தமிழா' படத்தில் இவருக்கு ஜோடியாக சுகன்யா நடிக்கவுள்ளார்.

## ராஜாவின் மனதைக் கிள்ளியபாடல்

குயில்தோப்பு படத்தில் வரும் பாடல்கள் பாரதிராஜாவின் மனதை அள்ளிவிட பாராட்டுக்களை குவித்துவிட்டார் பாரதிராஜா. குயில் தோப்பு படத்தின் இசையமைப்பாளர் விஜயசேகருக்கு இருப்புக்கொள்ளவில்லை. வசிட்டர் வாயால் பாராட்டியது போலத்தான் பாரதிராஜாவால பாராட்டப்பட்டதும் என்கிறார். இளையராஜாவின் 'சிம்பொனி' இசை மாபெரும் சாதனை என்று சொல்லும் விஜயசேகர் தன்னாலும் சிம்பொனி இசை படைக்க முடியும் என்கிறார். ஆனாலும் இளையராஜா போல குறைந்த நாளில் படைப்பது முடியாதகாரியம் என்றும் ஒப்புக் கொள்கிறார். ★




## கிசு-கிசு-நியூஸ்

### திரும்பி வந்து விரும்பி

பானுப்பிரியா விரைவில் ஜாலியான இலண்டன் பயணம்போகப் போகிறார். போய் வந்ததும் திருமணம் பற்றிய பரிசீலனையில் இறங்குவாராம். மாப்பிள்ளை தேடும் படலத்தை அவரது சகோதரர் ஆரம்பித்துவிட்டார்.

### பச்சை மண்ணு

முன்னாள் நடிகை தேவிகாவின் மகள்தான் கனகா. கனகா நடிக்கும் படங்களில் தேவிகா இராச்சியம்தான். ஏகப்பட்ட நிபந்தனைகள். "என் மகள் பச்சை மண்ணு அது கட்டிப்புடிச்ச நடிக்கமாட்டா" என்று தேவிகா சொன்ன வாசகம் கோடம்பாக்கத்தில் பிரபலம்.



### மீண்டும் மோதல்

சித்தாராவுக்கும் காதலுக்கும் வெகுதூரம். காதலில் வெறுத்து காவியுடை கட்டிப்போன சித்தாரா மீண்டும் திரையுலகுக்கு திரும்பி வந்தார். மீண்டும் காதலைத் தொடர்ந்தார். இப்போது மீண்டும் காதலில் மோதல்.

### இடையிலே விலகுவார்

நடிகை காவேரிக்கு பட வாய்ப்புக்கள் வருவதே குறைவு. இந்த நேரத்தில் வரும் வாய்ப்புக்களையும் கெடுத்துக்கொள்கிறார். படப்பிடிப்புக்கு நேராகவே வந்து தொட்டுப்பேசி காதலை அரங்கேற்றுகிறார் காவேரியின் காதலன். சில நேரங்களில் உணர்ச்சிவசப்பட்டு படப்பிடிப்பை பாதியில் நிறுத்திவிட்டு காவேரி காதலனுடன் புறப்பட்டுப்போய் விடுவதாக தமிழக சஞ்சிகை ஒன்றும் செய்தி போட்டிருக்கிறது.



நெப்போலியன்
படம்-தாமரை

### மறக்க முடியுமா?

'வள்ளி' பட நாயகி பிரியாராமன் தமிழில் பிரகாசிக்காமல் போனாலும் ஏனைய மொழிப் படங்களில் நன் கு ப் ... வருகிறார். என்றாலும் தன்னை நடிகையாக்கி வளர்த்து விட்ட தமிழை மறக்க முடியாது என்று கூறுகிறார். தெலுங்கில் பிரியாராமன் நடித்துள்ள படங்கள் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. 'வள்ளி' தெலுங்கில் 'விஜயா' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டதால் தெலுங்கு இரசிகர்கள் பிரியாராமனை விஜயா என்று கூப்பிடுகிறார்களாம். ★



ராதிகா

### சில்க் மறுப்பு

மன்சூரலிகானோடு தன்னை தொடர்பு படுத்தி வரும் கிசு-கிசுக்களை சில்க் மறுத்துள்ளார். "என்னைப் போய் அவரோடு..." என்று சொல்லிச் சிரிக்கிறாராம்.

### போச்சுடா!

பவித்திரனின் 'பொள்ளாச்சி சந்தையிலே...' படத்தில் கதாநாயகியாக நடிக்க இருந்தார் செண்பகா. இப்போது அந்தப் படம் நிறுத்தப்பட்டு விட்டதால் மிகவும் கவலையாக இருக்கிறார். ★



அஸ்வினி
படம்-சீதத்துரை

முகப்பில்
பிரசாந்த்-பிரசாந்த் ★

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## எமக்கு உதவுவோர்

அ ஆ எழுதித் தந்திடுவார்
ஒன்று இரண்டு சொல்லிடுவார்
அறிவு ஒழுக்கம் பண்பு என்னும்
நெறிகளை ஆசிரியர் கற்பிப்பார்.

*

நோயாளியை அன்பாய் வரவேற்பார்
நோய் பிணிகளை அறிந்திடுவார்
ஊசி மருந்துகளை தந்திடுவார்
சுத்தங்களை வைத்தியர் பேணிடுவார்.

*

டிங்....டிங்.... மணியோசை எழுப்பிடுவார்
உற்றார் உறவினர் சுகத்தை கூறுகின்ற
உள்ளூர் வெளியூர் கடிதங்களை
வாசலில் தபால்காரன் தந்திடுவார்.

*

கூவிக் கொண்டு வந்திடுவார்
காய் கறிகளை கொண்டு தந்திடுவார்
இருந்த இடத்திலேயே விற்றுவிடுவார்
நேர்மையாய் நிறுத்து கொடுத்திடுவார்.

அன்னூன் எம்.இஸ்மாயில்
அரசினர் மு. ஆ. பாடசாலை-கிண்ணியா.

"மனதி லுறுதி வேண்டும்.
வாக்கினி லேயினிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள்கைப்பட வேண்டும்."
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

## தியாகச் செல்வி

ஓர் ஊரில் ஓர் ஏழைக் குடும்பம் இருந்தது. செல்வமில்லாத காரணத்தால் செருக்கில்லாது வாழ்ந்து வந்தது அந்த ஏழைக் குடும்பம். அவர்கள் ஏழைகளானாலும் இரக்க குணம் அதிகமிருந்தது.

அந்த ஏழைக் குடும்பத்தில் ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் செல்வி. அவளை அவள் பெற்றோர்கள் செல்லமாக வளர்த்திருந்தாலும் நல்ல அறிவுடனும், நல்ல பண்புகளோடும் அவளை அவள் பெற்றோர்கள் வளர்த்திருந்தார்கள். அவள் வயிறு நிறைய உண்ண உணவு கிடைக்காது. ஆனாலும் தான் சாப்பிடுகிற உணவிலிருந்து ஒரு கவளம் எடுத்துச் சென்று காக்கைகளுக்குப் போடுவாள். தின்பதற்காக ஏதாவது தின்பண்டங்கள் கிடைத்தால் அதில் சிறிது எடுத்து எறும்புகளுக்குப் போடுவாள். அவைகள் உண்பதைப் பார்த்துச் சந்தோசமடைவாள்.

அப்போது கோடைக்காலம் வந்தது. கோடைக்காலம் என்றால் கேட்க வேண்டாம். வெய்யிலின் உக்கிரம் அதிகமாக இருக்கும். ஆறு, குளம், குட்டை எல்லாம் வற்றி விடும். பூமி பாளம் பாளமாக வெடிக்கும். மனிதர்கள், விலங்குகள், மரஞ்செடிகள் எல்லாம் மடியும். தண்ணீர் பஞ்சம் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடும்.

அப்படி ஒரு காலம் செல்வி இருந்த ஊருக்கு வந்தது. நீர் நிலைகள் எல்லாம் வற்றி தண்ணீருக்காக மக்களும், கால் நடைகளும் தவியாய்த் தவித்தன. பல மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு கேணியில் தண்ணீர் கொஞ்சம் இருந்தது. அவ்வளவு தூரம் பெரியவர்கள் சென்று தண்ணீர் பிடித்து வருவதே கஷ்டம். சின்னஞ் சிறிய பெண்ணான செல்வி எப்படி அவ்வளவு தூரம் செல்ல முடியும்?

ஆனால், செல்வி ஒரு சின்னப் பானையை எடுத்துக்கொண்டு தண்ணீர் எடுத்து வரப் புறப்பட்டாள். கால்களுக்குச் செருப்பில்லை. தலைமீது போட்டுக்கொள்ள ஒரு சின்னத் துணிகூட இல்லை. கால்கள் தகிக்க, தலையில் சூடேற கிணறு இருக்கும் இடம் நோக்கி வயிற்றில் பசியோடு நடந்த செல்வி, சிறிது தூரம் செல்வதற்குள்ளேயே மிகவும் களைத்துப் போனாள். மனச் சோர்வும், உடல் சோர்வும் அவளைத் தாக்கிற்று. அப்படியே ஒரு மரத்தடியில் படுத்தவள் தூங்கிப்போனாள்.

அப்போது வானில் இருந்து கருணைக்கு அதிபதியான ஒரு தேவதை இறங்கி வந்தது. அது செல்வியின் நற்குணங்களை அறிந்திருந்தது. அவள் பிற உயிர்களிடத்தில் இரக்கமானவள் என்றும் அதற்குத் தெரியும். அதனால் அவளுக்கு உதவி செய்ய எண்ணிற்று.

தனது சக்தியால் செல்வி கொண்டு வந்த பானையில் தண்ணீரை நிரப்பிற்று தேவதை. செல்விக்கு இப்போதைய தேவை பொன்னும், பொருளும் அல்ல. தண்ணீர் தான். அதைக்கொண்டு வருவதில் அவள் கஷ்டப்படக்கூடாது. எனவே பானையில் தண்ணீரை நிரப்பிவிட்டுத் தேவதை சென்று மறைந்துவிட்டது.

சிறிது நேரத்தில் கண் விழித்த செல்வி தன்னருகில் உள்ள பானை நிறைய தண்ணீர் இருப்பதைக் கண்டாள். கடவுள் தான் தண்ணீர் கொடுத்திருக்கிறார் என்று எண்ணிச் சந்தோஷப்பட்டுக் கடவுளுக்கு நன்றி செலுத்தினாள். பிறகு பானையை எடுத்துக்கொண்டு தன் குடிசையை நோக்கிப் புறப்பட்டாள்.

அப்போது தண்ணீர் தாகமெடுத்த நாயொன்று நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு குடிக்க ஒருவாய் தண்ணீர் கிடைக்காதா என்று அங்குமிங்கும் பார்த்தபடி வந்தது. தண்ணீர்ப் பானையுடன் நிற்கும் செல்வியை அந்த நாய் சுற்றிச் சுற்றி வந்தது. 'எனக்கு ஒருவாய் தண்ணீர் குடிக்கக் கொடுக்க மாட்டாயா?' என்பது போல் செல்வியைப் பரிதாபமாகப் பார்த்தது.



செல்விக்கு நாயிடம் இரக்கம் உண்டாயிற்று. பாவம் வாயில்லா ஜீவன் என்று கருணை கொண்டு, அதற்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்தாள்.

நாய் தண்ணீரைக் குடித்துவிட்டுக் கண்களில் நன்றி மின்ன செல்வியைச் சுற்றிச் சுற்றி வந்து வாலை ஆட்டிற்று.

வானத்திலிருந்த கருணை தேவதை அக்காட்சியைப் பார்த்து அகமகிழ்ந்து சிரித்தது. அடுத்த கணமே செல்வியின் கையிலிருந்த மண்பானை வெள்ளிப் பானையாக மாறிற்று. அத்தோடு வெள்ளிப்பானை நிறைய மீண்டும் தண்ணீர் நிரம்பிற்று.

செல்வி வெள்ளிப்பானை நிறைய தண்ணீரோடு நடக்கத் தொடங்கினாள். அப்போது அவள் பின்னால், 'மியாவ்.. மியாவ்...' என்று முனகிக் கொண்டு ஒரு பூனை வந்தது. நன்றாகக் கத்தக் கூடச் சக்தியில்லாமல் இருந்தது அந்தப்பூனை. அது தண்ணீருக்குத் தவித்து செல்வியைப் பரிதாபமாகப் பார்த்தது.

செல்விக்குப் பூனையிடம் இரக்கம் உண்டாயிற்று. வெள்ளிப் பானையிலிருந்து தண்ணீர் எடுத்து பூனைக்குக் குடிக்கக் கொடுத்தாள். அது நா வறட்சி தீரத் தண்ணீர் பருகிற்று.

வானத்திலிருந்து கருணை தேவதை அக்காட்சியைப் பார்த்துச் சிரித்தது. அடுத்த கணமே, செல்வியின் கையிலிருந்த வெள்ளிப்பானை தங்கப் பானை ஆயிற்று. தங்கப்பானை நிறைய மீண்டும் தண்ணீர் நிரம்பிற்று.

செல்வி தங்கப்பானை நிறைய தண்ணீரோடு நடக்கத் தொடங்கினாள். அப்போது, ஒரு பிச்சைக்காரன் வந்து அவளிடம் குடிக்கத் தண்ணீரை, பேசச் சக்தி இல்லாமல் கைகளாலேயே கேட்டான். செல்வி ஐயோ பாவம், என்று இரக்கப்பட்டு அவனுக்குக் குடிக்க நிறைய தண்ணீர் கொடுத்தாள்.

இப்போது தங்கப்பானை வைரக் கற்கள் பதித்த பானையாயிற்று. அதிலிருந்து வைரக் கற்கள் பல வண்ணங்களை வாரி இளைத்தன. வைரப்பானையில் தண்ணீரும் நிறைந்திருந்தது.

"வானமே! இந்த வைரப் பானையையும், தண்ணீரையும் எடுத்துக்கொண்டு புல், பூண்டு வளரவும், கால் நடைகள் செழிக்கவும் மனிதர்கள் கஷ்டமின்றி வாழவும் மழையைக் கொடு," என்று பிரார்த்தித்தபடி வைரப் பானையை வானில் வீசினாள் செல்வி.

உடனே மழை பெய்யத் தொடங்கியது. வைரப்பானையை வீசியதால் வானில் ஏழு வண்ணங்கள் தோன்றின. இதுதான் மழை பெய்த பின்னர் அழகாக வளைந்து பல வண்ணங்களில் காணப்படும் வானவில் ஆகும்.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஒரு வீட்டுக்குள் இரண்டு இனத்தவர்கள். அது என்ன?
2. கிட்ட உள்ளதைப் பார்க்க முடியாது. அது என்ன?
3. உயிர் இல்லாதவன் உயிர் வாழ வைப்பான். அது என்ன?
4. பள்ளத்தில் இருப்பான். பல பேருக்கு உதவுவான். அவன் யார்?
5. பறிக்க பறிக்க பெரிதாகிறது. அது என்ன?
6. பற்கள் உண்டு. ஆனால் கடிக்காது. அது என்ன?
7. வருவான் போவான் நிற்க மாட்டான். அவன் யார்?
8. இருட்டு வீட்டுக்குள் முட்டுப்பலகை. அது என்ன?
9. வெள்ளை ரோட்டில் கருப்பு கார் ஓடுது. அது என்ன?
10. உருவமில்லாதவன். ஊரெல்லாம் சுற்றுவான். அவன் யார்?

விடைகள்

1. முட்டை 2. முதுகு
3. வளி 4. நீர்
5. குழி 6. சீப்பு
7. நாள் 8. நாக்கு
9. கண் 10. காற்று

ஆர். ஜொஸ்வா ரட்ணகுமார்
மகாஜன கல்லூரி-மட்டக்களப்பு.

1. வெய்யிலில் மலருவான். காற்றில் உலருவான். அவன் யார்?
2. காய்க்கும் கலகலக்கும். கொக்கு நிற்கக் கொப்பில்லை. அது என்ன?
3. நெல்லுக்கும் புல்லுக்கும், நின்றாடும் குருவி எது?
4. வாழ்நாள் முழுவதும் வாழ்வான். ஒரு நேரம் வந்தவுடன் விழுந்துவிடுவான். அவன் யார்?

விடைகள்

1. வியர்வை 2. வேளாண்மை
3. வெட்டுக்கிளி 4. உயிர்

அ.ம. முகமது இன்ஷாப்
தி/அல்-அக்ஸா மகாவித்தியாலயம்
கிண்ணியா-06.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30.07.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 50
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 47

பரிசுக்குரியவர்
அ.முஹம்மத் அஸாம்
அஹதியா சன்மார்க்க போதனாபீடம்
புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்

யூ.எல்.எம்.ஹநீஸ்
அந்-நூர் ம.வி-வாழைச்சேனை.

வடிவேல் சுகிர்தரன்
சரஸ்வதி வித்தியாலயம்
கிண்ணையடி

தீ.சாஸினி
வவுனியா மகளிர் மகாவித்தியாலயம்
வவுனியா.

பவுல்.ஜெயகணேஸ்
விபுலானந்தா மகா வித்தியாலயம்
காரைதீவு-02.

ஏ.எல்.சித்தி ஜனூபா
சாய்ந்தமருது-11.

நவரத்தினம் ரஞ்சனா
வின்சன் மகளிர் கல்லூரி
மட்டக்களப்பு.

ஏ.சி.பைறூஸா
மத்திய கல்லூரி-புதிய காத்தான்குடி-03.

என்.லதர்ஷனன்
கல்முனை-02.


எம்.எஸ்.எம்.ஷாஹிர்
ஹெட்டிபொல.

## நடக்கத் தெரியாத பறவை

சிவப்பு மூக்கு பறவைகள் வெப்ப நாடுகளில் அதிகம் வாழ்கின்றன. பசிபிக், இந்திய கடல் பகுதிகளில் இவை வாழும். நீரின்மீது பறந்து செங்குத்தாகப் பாய்ந்து மீன்களைப் பிடிக்கும். நன்றாகப் பறக்கும். சிறப்பாக 'டைவ்' அடிக்கும். ஆனால் அதற்கு நடக்கத் தெரியாது. அதன் கால்கள் மிகவும் குட்டையாக இருக்கும். அதனால் இதன் வயிற்றுப் பகுதியைத் தரையில் தேய்த்தபடி தத்தித் தத்தி மெதுவாக அரக்கும். இந்தப் பறவைகளில் சிலவற்றிற்கு வெள்ளை வால் இறகுகளும், சிலவற்றிற்கு சிவப்பு வால் இறகுகளும் உண்டு.



## முட்டைகள்



- **பறவைகள் மட்டும்தான் முட்டை இடுமா?**
  இல்லை. சில குளிர் இரத்தப் பிராணிகளும், பூச்சிகளும், ஊர்வனவும் முட்டையிடும். உதாரணமாக: மீன்கள், நத்தைகள், பாம்புகள்கூட முட்டையிடும்.
- **எல்லா முட்டைகளுக்கும் கடினமான மேல் தோல் உண்டா?**
  இல்லை. குளிர் இரத்தப் பிராணிகளும், மீன்களும் (சுறா மீனைத் தவிர) நத்தைகளும் மென்மையான, வழவழப்பான மேல் தோலுடைய முட்டைகளை இடும்.
- **பறவை முட்டைகளில் மிகவும் சிறிய முட்டை எதனுடையது?**
  வெர்வெயின் என்ற பாடும் பறவையின் முட்டைதான் மிகவும் சிறியது. அந்த முட்டயின் எடை 0.37கிராம். நெருப்புக்கோழி முட்டையின் எடை மிகவும் அதிகம். அதன் எடை 1 கிலோ.
- **கோழி ஒரு வருடத்தில் எத்தனை முட்டை இடும்?**
  சராசரியாக ஒரு நாளைக்கு ஒன்று வீதம் ஒரு ஆண்டில் விட்டு விட்டு 200 முட்டைகள்வரை இடும்.
- **சைவ முட்டை என்றால் என்ன?**
  இரசாயன முறைப்படி கோழிக்குஞ்சு பொரிக்காத முட்டைகளை கோழிகளை இட வைக்கின்றனர். இவை சைவ முட்டைகள் எனப்படும்.




பரசூட் மூலம் குதிப்பது ஒரு வீர விளையாட்டாகக் கருதப்படுகின்றது. இதற்கான சட்டதிட்டங்கள் 1951ம் ஆண்டு உருவாக்கப்பட்டு இதற்கென ஒரு விளையாட்டு மையம் நிறுவப்பட்டது. 1954ம் ஆண்டு அணி அணியாக இவ்விளையாட்டு சர்வதேச அளவில் விளையாடப்பட்டது.

## அறிவோம் மனதில் பதிவோம்



மின்மினிப் பூச்சிகளின் வால் பகுதிதான் ஒளிரும். இந்த ஒளியை வைத்துத்தான் மற்ற மின்மினிப் பூச்சிகள் தங்கள் சகாக்களை அடையாளம் கண்டு கொள்ளும். இரவு நேரங்களில் கூட்டமாக இவை மரங்களை மொய்க்கும்போது அந்த மரங்களில் எல்லாம் வண்ண விளக்குகள் போல இந்தப் பூச்சிகள் ஒளிரும். தூரத்தில் இருந்து பார்த்தால்கூட இந்த மரங்கள் வெளிச்சமாகத் தெரியும்.



### சஹாராவில் நான்....

கனவுப் பாலைவனத்தில்
நான்....
கதியிழந்து
கிடக்கின்றேன்.
□□
இன்னும்
தூங்கவில்லை
என் இரவுகள்!
கனவின் பாய்விரிப்பில்
உன்
கண்ணின்
குறட்டைச் சத்தம்......
□□
சஹாராவின்
சுடு மணல் கும்பம்
உன் நினைவு....!
□□
ஊனக் கால்கள்
புதையப் புதைய
நடக்கின்றேன்
நான்...
நம் காதல் பிரிவின்
ஏகாந்தப் பெருமூச்சுக்களை
சேமித்து சுவாசித்தவாறு—!

பொத்துவில்
பௌர்ணமிநிலா.



# தேன் கிண்ணம்

### தேர்தல் காற்று

காற்றதனைக் கிழித்துவரும் ரெயிலைப்போல
காலடியில் வருகிறது தேர்தல்காலம்....
நாற்ற(ம்) நிறை கருத்துகளை எங்கள் முன்னால்
நாவினிக்கச் சொல்லிவிட்டு வாக்குதன்னை,
நோட்டுகளாய் பெற்றபின்னே இங்கிருந்து
நோகாமல் போயிடுவர்! அடுத்த தேர்தல்
காற்றடிக்க மீண்டுமிந்த மக்கள்தன்னை
காணுதற்கு வந்திடுவர் பாவம் மக்கள்!

வருடங்கள் ஐந்தாறு சென்றிருக்கும்
வாசலுக்கும் வந்திராத பஜீரோவெல்லாம்,
ஒருமுறைக்கு மூணுதரம் வந்து நின்று-
உடம்பு சுகம், குடும்பநிலை கேட்டுநிற்கும்!
வருகின்ற தேர்தலுக்கு வேலை செய்ய
வாருங்கள் என்பின்னால் என்பதற்காய்;
ஒருவர்பின் ஒருவரென வருவர்! வென்று
ஓடிடுவர்! கேட்டபின்னே 'யார்நீ' என்பர்!

மக்களினை மட்டுமில்லை! போட்டியிட்ட
மாவட்டம் தன்னையுமே மறந்துபோயி,
அக்கரையில் நட்சத்திர ஒட்டல் தன்னில்-
அழகாகத் துயில்கொண்டு பின்னர் வந்து மக்களினை
வார்த்தைகளால் ஜாலம்காட்டி
மன்னர்களாய் ஆகிடுவர்! இதற்கு நீங்கள்
எக்காலும் இடம்கொடுக்க கூடாதிங்கு
இடங்கொடுப்பின் நாமெல்லாம் மாக்களன்றோ!

திருமதி பாத்திமா ஜவ்பர்கான்
காத்தான்குடி



### இருக்காமல் போனவர்கள்...

எங்கள் ஊரிலும் இருக்கிறது
வானம்.

சூரியனும்
சந்திரனும்
நட்சத்திரங்களும்
எங்கள் ஊரில்
இல்லாமல் இல்லை!

கடல் இருக்கிறது.
அலைகள் இருக்கின்றன,
ஆறும், குளமும், நீரோடைகளும்
நிறையவே இருக்கின்றன.
விளைச்சலுக்கு குறைவில்லை வயலுக்கு!

மரங்களும்,செடிகளும்
கொடிகளும் இருக்கின்றன.
பூக்கள் இருக்கின்றன,
வண்டுகள் இருக்கின்றன.
குறைவில்லை தேனுக்கு.

பசுக்கள் இருக்கின்றன,
பால் இருக்கிறது.
எருமைகள் இருக்கின்றன.
தயிர் இருக்கிறது.
குயில்கள் இருக்கின்றன,
'கூ கூ' சப்தமும் இருக்கிறது.
மயில்களும் மான்களும் இருக்கின்றன!

கறுப்பு நிறத்தில்தான்
எங்களூரிலும்
காகம் இருக்கிறது.
ஆந்தைகளின் அலறல்
எங்கள் ஊரிலும்
கேட்காமல் இல்லை.
ஆடுகள், கோழிகள்
எல்லாமே இருக்கின்றன!

நாய் வளர்ந்த வீடுகளும்
பூனைகள்
வாழ்ந்த வீடுகளும் இருக்கின்றன.
எலிகள் இல்லாத வீடுகள்
இல்லை எங்களூரில்.

இவைகள் எல்லாமே
இருக்கின்ற ஊரில்....
இருக்காமல் போனவர்கள்
யார் தெரியுமா?
மனிதர்கள்....
அவர்கள் இன்று அகதிகள்....
எங்கோ சொந்தம் இல்லாத
வானத்தின் கீழே,
நகரத்தில் அல்ல....
நரகத்தில் வாழுகிறார்கள் அவர்கள்!

-அன்புடீன்-


### யாழ்குடா(க்) காதலிக்கு......

கவிதைமுடுக்குது
எனக்கு....
இதய புரத்தில்
உறைந்த-உன்
தரிசிப்புகளை
எண்ணும்போது.....!
•
உன் வாசல்
வாகை மர நிழலையும்
நம்-செத்தைவீட்டு
சேர்க்கையையும்
எப்படி மறப்பது–?
•
இப்போதெல்லாம்
எவ்வளவுதூரம்
நமக்குள்...!
•
எனக்குத்தெரியும்!
முள் முருக்கின்
மலர்வு போல
சிவப்பாய் சிரிக்கும்
நீ-இப்போது
கார்கால மழைபோல்
அழுவது...
•
கண்மணி...
உன் வானிலும்
நிலவு வருவதை எண்ணி
சிரித்துக்கொள்!!
ஏனென்றால்
அதுவே உனக்கு
நானாக...
•
இங்கு யார் சொல்லி?
யார் அழ....?
நம்-
வாழ்தலின் கஷ்டத்தை....
•
ஆனாலும்
ஒன்றை உணர்ந்துகொள்!
புலம் பெயர்ந்தாலும்
நான் பூஜிப்பது
உன்னையும்
அந்த மண்ணையுமே...!
•
புது வித்தகன்-பொத்துவில்.



# தினமுரசு

## தேர்தல் கணிப்புப் போட்டி



'தினமுரசு தேர்தல் கணிப்புப் போட்டி' வாசகர்களின் கணிப்பு ஆற்றலுக்கு களமாக அமைகிறது.

இதில் நீங்கள் செய்யவேண்டிய தெல்லாம் மிகச் சுலபமானதே!

3 கேள்விகளும் அவற்றுக்கான உத்தேச விடைகளும் இங்கு தரப் பட்டுள்ளன. உங்கள் கணிப்புப்படி எந்த விடை சரியானதோ அதற்கு நேரே புள்ளடியினை இட்டு, இக்கட்டத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர், முகவரி ஆகிய விபரங்களை தெளிவாக எழுதி கீழ் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

1. உங்கள் மாவட்டத்தில் வெற்றி யாருக்கு?
   1. ஐ.தே.க. ☐ 2. இ.தொ.க. ☐ 3. த.வி.கூ. ☐
   4. மு.கா. ☐ 5. பொ.ஐ.மு. ☐ 6. ரெலோ ☐
   7. புளொட் ☐ 8. ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப் ☐ 9. சுயே.கு- (இலக்கம் மட்டும்) ☐
2. நாடு தழுவிய ரீதியில் யார் வெற்றிபெற்று வந்தால் நல்லது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?
   1. ஐ.தே.க. ☐ 2. பொ.ம.கூ. ☐ 3. பிறிதோர் கட்சி ☐
3. தற்போதைய அரசியல் உங்களுக்குப் பிடித்தமானதாக இருக்கிறதா?
   1. ஆம் ☐ 2. இல்லை ☐


பெயர்: ..........................................
முவரி: ..........................................
..........................................
மாவட்டம்: ____________

*சரியான கணிப்பினை வெளியிடும் வாசகர்களில் அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு ரு 1000/- பரிசாக வழங்கப்படும்.*
*உங்கள் விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித்திகதி 30-7-94.*

தேர்தல் கணிப்புப்போட்டி
தினமுரசு வாரமலர்
த.பெ.இல: 1772
கொழும்பு–06.

குறிப்பு:ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். விடைகள் இங்கு இடம்பெற்றுள்ள கூப்பனில் மட்டுமே இருத்தல் வேண்டும்.

### ஏன் இந்த ஊடல்



பெண்ணே!
நான்
எத்தனை கவிதை மடல்கள்
நெசவு செய்தனுப்பியிருப்பேன்
நினைவிருக்கிறதா உனக்கு?

நீ
படித்துவிட்டு பதில்
எழுதியனுப்பியது
ஏனோ
எனக்கின்னும் நினைவிருக்கிறது!

அதனால்தான்
இன்னும்
உனை
நான் நேசிக்கின்றேன்!

உயிர் ஒன்று
உடல் இரண்டு
என்று சொல்லியே
என்
இதயத்தில் மூட்டி விட்டாயல்லவா
தீயை!

அது
இன்று
எரிகிறது
என்
இதழ்களிலே சிகரட்டாய்!

ஏன்?
உன் விரல்கள்
வருடிய
என்
கன்னங்கள்
தாடியினுள் மறைந்தும்கூட
மங்கையே!
உன்னை
மறுபடியும்–மறுபடியும்
நினைக்கின்றேன்!

சி.சபேசன்-கோட்டைக்கல்லாறு-01.

### தோட்டத் தொழிலாளிகள்!

அன்று-
நிக்ரோக்களின்
சோதரன்!
••
இன்று-
பொருளாதாரச்
சிலுவையின்
இயேசுக்கள்!
••
என்றும்-
இருட்டு பெட்டியில்
விழுந்து கிடக்கும்
ஒட்டுக்கள்!

பொகவந்தலாவ
மா.மகேந்திரன்.

### ஈதோர் நாடோ?

ஈதோர் நாடோ?
இங்கோர் தர்மமோ?
சூதோர் வேதமோ?
கடலைக்கோர் ஆட்சியோ?

ஏடோ! எழுத்தோ?-இங்(கு)
அறிவொரு சூனியமோ?
என்னென்றிருப்பதெல்லாம்-வெறும்
என்புகளின் கணக்கெடுப்போ?

கொலைதானிங் குயர் தொழிலோ?
கொல்வோரே வாழ்வரோ?

விலையற்ற இழிபொருளாய்
உயிர் இங்கு மலிந்து போச்சோ?

யாதோர் மொழியும் இம்
மூடர்க்குப் புரியாதோ-சுடும்
துப்பாக்கி ஓசை அதன்
வார்த்தை ஒன்றே புரிவாரோ?

நாடேறி வந்தனரோ
நெறி காக்கும் மனிதர் என்று
காடேறி வாழ்கின்ற
விலங்கினங்கள் மேலன்றோ?

-மதுரகவி-

## இந்த வாரம் உங்கள் பலன்

(24.07.94 முதல் 30.07.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்:

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் மந்தம், பொருள் நஷ்டம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | பயனற்ற செயல், தொழில் நிலை மாற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தனலாபம், தொழில் சிறப்பு. | பி.ப 3 மணி |
| புதன்- | மனப்பயம், வெளியிட பயணம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | துன்பம் மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, முயற்சி மேன்மை. | பி.ப 2 மணி |
| சனி- | உறவினர் உதவி, தொழில் விருத்தி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், இலக்கம்- 1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பொருள் வரவு. | பி.ப 3 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, அதிகார விருத்தி.. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | காரியானுகூலம், செய்தொழில் விருத்தி. | பி.ப 4 மணி |
| புதன்- | உறவினர் பழி, மனக்கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- | தெய்வ நம்பிக்கை, முயற்சி மேன்மை. | காலை 9 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- | கடன் படல், பணத் தட்டுப்பாடு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 2

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மேன்மை, பொருள் விருத்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நோக்கம், வெளியிட பயணம். | காலை 9 மணி |
| புதன்- | புதிய முயற்சி, பணக்கஷ்டம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | இடமாற்றம், உறவினரால் தொல்லை. | காலை 8 மணி |
| வெள்ளி- | நண்பர்கள் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- | திடீர் பயணம், தெய்வானுகூலம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 4

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, முன்னேற்றம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | கொடுக்கல் வாங்கல் பிரச்சினை, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், உறவினர் உதவி. | பகல் 11 மணி |
| புதன்- | தனலாபம், பெரியோர் உதவி. | காலை 10 மணி |
| வியாழன்- | அந்நியரின் நட்பு, அகால போசனம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | தெய்வ நம்பிக்கை, செய்தொழில் உயர்வு. | காலை 6 மணி |
| சனி- | காரியசித்தி, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | பொருள் நட்டம், கடன் படல். | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | அந்நியரால் தொல்லை, மனக் கஷ்டம். | பகல் 12 மணி |
| புதன்- | இடமாற்றம், பொருள் விரயம். | காலை 8 மணி |
| வியாழன்- | எதிர்பார்த்த காரியம் வெற்றி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தெய்வானுகூலம், புதிய முயற்சி. | பி.ப 4 மணி |
| சனி- | கடன் தொல்லை, பணத்தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன், புதன் |
| சிம்மம் | - வெள்ளி |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| இடபம் | - செவ்வாய் |

★ சந்திரன்-மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார் ★

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | துன்பம் மிகுதி, பணக்கஷ்டம். | பி.ப 2 மணி |
| திங்கள- | முயற்சி பலிதம், பொருள் வரவு. | காலை 9 மணி |
| செவ்வாய்- | புதிய தொழில், உறவினர் கலகம். | பகல் 12 மணி |
| புதன்- | அந்நியர் தொல்லை, பணவிரயம். | காலை 8 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | உயர்ந்த எண்ணம், முன்னேற்றம். | பி.ப 1 மணி |
| சனி- | விண் செலவு, ஆடம்பர வாழ்க்கை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 7

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | இடமாற்றம், முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியரால் தொல்லை, கடன் பயம். | பி.ப 1 மணி |
| புதன்- | தொழில் நிலை மாற்றம், மனக் கஷ்டம். | பி.ப 4 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, மனக் கவலை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வீண் தொல்லை, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| சனி- | காணிபூமி பிரச்சினை, செலவு மிகுதி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, பொருள்வரவு. | பி.ப 3 மணி |
| திங்கள்- | துன்ப மிகுதி, வைத்தியச் செலவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | தேகசுகம் பாதிப்பு, மனக் கவலை. | பகல் 12 மணி |
| புதன்- | உயர்ந்த நிலை, இடமாற்றம். | காலை 7 மணி |
| வியாழன்- | கடன்படல், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | இடமாற்றம், பதவிநிலை உயர்வு. | காலை 6 மணி |
| சனி- | இனசன விரோதம், மனக் கவலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், உயர்ச்சிநிலை. | பி.ப 1 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 7 மணி |
| புதன்- | தொழில் பிரச்சினை, பணவரவுத்தடை. | பகல் 12 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், பொருள் விரயம். | காலை 8 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, மன ஆறுதல். | பி.ப 1 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், பணச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -3

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, இடமாற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தொல்லைகள் தீரும், பெரியோர் உதவி. | காலை 7 மணி |
| புதன்- | தெய்வானுகூலம், முயற்சிகளில் வெற்றி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | பொருள் தட்டுப்பாடு, கடன் படல். | காலை 8 மணி |
| வெள்ளி- | இடமாற்றம், உயர்ச்சிநிலை. | காலை 7 மணி |
| சனி- | மனப்பயம் நீங்கும், குறைகேட்டல். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகாயம், கடன் தொல்லை. | காலை 7 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், உயர்ந்த எண்ணம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | பொருள் நட்டம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- | வீண் தொல்லை நீங்கும், தேகசுக நன்மை. | பி.ப 1 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 1

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரியசித்தி, பொருள்வரவு. | பி.ப 3 மணி |
| திங்கள்- | அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், ஆடம்பரவாழ்வு. | காலை 7 மணி |
| புதன்- | உறவினர் உதவி, தொழில் சித்தி. | பி.ப 2 மணி |
| வியாழன்- | பொருள் விரயம், முதியோர் நட்பு. | காலை 9 மணி |
| வெள்ளி- | மனக்கவலை, துக்க செய்தி. | பகல் 12 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், வீண் தொல்லை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 6

அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ ✝ விந்தைகள்



# பாருக்கு வருவதற்கு பத்துமாதம் போதாது!

## 13 மாதங்கள் கருவறையில் தூங்கிய குழந்தை



உலகிலேயே அதிக காலம் கருவினை ஏந்திய தாய் பேரக் குழந்தைகளுடன் தொலைக்காட்சி பார்க்கும்போது அதிக நாட்கள் கருவறையில் தூங்கிய ரினா தூங்கிவிட்டார். ரினாவின் கணவர் ஹெரன் எடுத்த படம் இது.

இங்கிலாந்தில் சிசெஸ்ரர் என்ற இடத்தில் வாழும் ரினா ஹெரைன் நவீன 'கும்பகர்ணி' என்ற பட்டத்துக்கு அருகதையுடையவர் என்று கூறப்படுகிறது. 23 வயதான இவர் மணமாகி இரட்டைப் பெண் குழந்தைகளுக்கும் தாயாகிவிட்டார். ஆனால் திடீர் திடீரென தூங்கிவிடுகிறார். நேரம் காலம், இடம் தடம் எதுவுமே அவருக்கு ஒரு பொருட்டல்ல. திடீரென வரும் தூக்கத்தை அடக்கமுடியாமல் வசதியான இடத்தில் தூங்கிவிடுவார்.

ரினாவின் இந்தத் தூக்க வியாதியினை அகற்ற எந்த மருத்துவராலும் முடியவில்லை. இதற்குக் காரணம் அவர் கருவறையில் கனகாலம் தூங்கிவிட்டமையேயாகும். இவர் தன் தாயின் வயிற்றில் 13 மாதங்கள் தூங்கிவிட்டார். சாதாரண கர்ப்பத்தைவிட மேலதிகமாக 101 நாட்கள் கருவறையில் தங்கிவிட்டார். ரினாவின் நீண்ட நேரத் தூக்கத்துக்குக் காரணம் இதுவேதான் என்று மருத்துவ நிபுணர்கள் முடிவுக்கு வந்துள்ளனர்.

காலம்-சூழ்நிலை எதையும் கவனியாது தூங்கும் இவருக்கு இவரை ஒத்த ஏனைய பெண்கள் அனுபவிக்கும் உரிமைகளை அனுபவிப்பதற்கு அனுமதியில்லை. மோட்டார் காரோட்டுவதற்கு இவரை அனுமதிக்க மாட்டார்கள். தனியாக எங்கும் போக விடுவதுமில்லை. இதனால் ரினா சுதந்திரம் அற்ற கூட்டுப் பறவையாகவே காலம் கழிக்கிறார்.

ரினாவின் தாய் கிறிஸ்ரீனா 1970 மே மாதம் கர்ப்பமுற்றார். அதே வருடம் நவம்பர் மாதம் -கருவுற்று 6 மாதங்களான போது- மருத்துவ பரிசோதனையின் பின்னர் மருத்துவர்கள் கூறிய கருத்துக்கள் கிறிஸ்ரீனாவுக்கு வேதனை அளித்தன. "குழந்தையின் இருதயத் துடிப்பினை அறிய முடிகிறது. ஆனால் குழந்தை வளர்ச்சியடைவதாகத் தெரியவில்லையே" என்றனர். தொடர்ந்து வாரம் தோறும் நடத்தப்பட்ட பரிசோதனைகளிலும் குழந்தை வளர்ச்சி ஏதோ ஒரு காரணத்தினால் தடைபட்டுவிட்டதாக அவர்கள் கூறினார்கள்.

1971 ஃபெப்ரவரி 2ல் குழந்தை பிரசவிக்கப்படவேண்டிய நாள். ஆனால் நடைபெறவில்லை. சத்திரசிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுக்கலாமா என்று, ஆலோசிக்கப்பட்டது. அதேகால கட்டத்தில் தான் குழந்தை வளர ஆரம்பித்திருக்கிறதென்றும் அசைகிறது என்றும் பரிசோதனைகள் மூலம் காணப்பட்டது. சில நாட்கள் பொறுத்திருக்கலாம் என்று மருத்துவர்கள் தீர்மானித்தனர். இறுதியாக 1971 மே 22ல் குழந்தை பிறந்தது. 7 1/2 இறாத்தல் எடைகொண்டதாகக் காணப்பட்டு சாதாரண குழந்தை போன்றே இருந்தது.

13 மாதங்கள் கர்ப்பத்தை வயிற்றில் தாங்கிய தாய் என்று சாதனைப் புத்தகமான கின்னஸ் சான்று பகர்ந்தது. ரினா சிறுமியாக இருக்கும்போதே ஏனைய-அவளை ஒத்த பிள்ளைகளைவிட அதிக நேரம் தூங்குவதைத் தவிர வேறு எக்குறையும் காணப்படவில்லை. ஆனால் வளர வளர அதிக தூக்கம் ஒரு பிரச்சனையாகவே கணிக்கப்படலாயிற்று. பள்ளியில் படிக்கும் காலத்தில் வகுப்பறையில், முக்கியமான பாடங்கள் நடைபெறும்போதும் தூங்கி விடுவாள். இதனால் பலதடவை ஆசிரியர்களிடம் தண்டனையும் பெற்றிருக்கிறாள்.

சௌத்லண்ட்ஸ் மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் கிறிஸ்ரோபர் றூவோஸ் என்பவர், ரினாவின் அதிக நேரத் தூக்கத்தை நீக்குவது கடினம் என்று கூறிவிட்டார். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது போல் ரினாவின் தூக்கப்பழக்கமும் 'கருவறைப் பழக்கம் காடேகும்வரை' என்று கருத வைக்கிறது.



## கவர்ச்சிப் படமும் கொரில்லாக் குரங்கும்!

மிருகக் காட்சிச்சாலைகளில் தனிமையில் அடைக்கப்பட்டுக் கிடக்கும் மிருகங்களின் முரட்டுச் சுபாவம், சோம்பல், அசதிபோன்ற தன்மைகளை அகற்ற புதிய உபாயமொன்றைச் செய்து வெற்றிகண்டுள்ளனர். ஜேர்மன் நாட்டிலுள்ள முனிச் நகர மிருகக் காட்சிச்சாலை மிருக வைத்தியர்களும் அதிகாரிகளும் இணைந்து நடத்திய பரீட்சை வெற்றி அளித்திருக்கிறது.

ஏப்ஸ், சிம்பான்சி, கொரில்லா எனப்படும் குரங்கு வகைப்பிராணிகள் மற்றும் புலி, நீர்யானை போன்ற மிருகங்களின் போக்கினை மாற்ற இப்புதிய முறை பெரும் உதவியாக இருக்கிறது என்று மிருக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

கூண்டுக்குள் அடைபட்டுக் கிடப்பதால் சில மிருகங்கள் அமைதியிழந்து அட்டகாசம் புரிகின்றன. சில மிருகங்கள் உணவருந்துவதில்லை. ஏப்ஸ், சிம்பான்சி போன்ற மிருகங்கள் பொதுவாக மனிதர்களுடன் சினேகமாகப் பழகி சொற்கேட்டு நடப்பவை. இவை கூடச் சில சந்தர்ப்பங்களில் கோபமுற்று சொற் கேட்டு நடக்காமல் போவதுமுண்டு. இத்தகைய நிலை மாற்றமடையும் மிருகங்களின் போக்குகளை அவதானித்த மிருக மருத்துவர்கள் அதே இனத்தைச் சேர்ந்த பெண் பிராணிகளின் 'கவர்ச்சி'ப் படங்களை ஆண் பிராணிகளின் கூடுகளுக்குள் வைத்தனர். இதன் பயனாக அந்தப் பிராணிகளின் போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை அவதானிக்க முடிந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு பெண் பிராணிகளின் கவர்ச்சிப் படங்கள் ஆண் பிராணிகளின் கூடுகளில் வைக்கப்பட்டபோது அப்பிராணிகளில் நோய்த்தன்மை 17 விகிதமாக வீழ்ச்சி அடைந்ததாம். கடந்த நொவம்பர் மாதம் நடத்தப்பட்ட பரிசோதனைகளில், இம்மிருகங்களின் முரட்டுத்தனமான நடவடிக்கைகள் 23 சதவிகிதம் குறைந்திருப்பது காணப்பட்டது.

இத்தகைய பரீட்சைக்கு வித்திட்டவர் இம் மிருகக் காட்சிச் சாலையின் தலைமை மிருக வைத்தியரான கஸ்ரவ் வெடெர்மென் ஆவார். மிருகங்களின் குணாதிசயம் எவ்வாறு மாற்றமடைகிறது என்பதனை அறிய ஒரு தமாஷாகக் கருதியே கவர்ச்சிப் படங்கள் வைக்கப்பட்டதாம். படங்களை அடிக்கடி பார்த்து தங்களுக்குள் ஒரு வகையான கிளர்ச்சியை இப்பிராணிகள் ஏற்படுத்துகின்றனவாம். சாதாரணமாக பிரச்சினை கொடுக்கும் வேங்கைகள் கூட பூனைக் குட்டிகள் போல் அடங்கிப்போவதை இவர்கள் அவதானித்துள்ளனர்.

"இத்தகைய படங்களைப் பார்த்துக் கொண்டே பல மிருகங்கள் தங்களுக்குள் விசித்திரமான ஒலிகளை எழுப்புகின்றன. கோபத்தை அடக்குகின்றன. வழமையை விட உணவில் நாட்டம் செலுத்துகின்றன. நோய் வருவதும் குறைந்து விடுகிறது.

"இரு ஆண் கொரில்லாக் குரங்குகள் வைக்கப்பட்டிருந்த ஒரு கூண்டுக்குள் ஒரேயொரு பெண் கொரில்லாவின் படம் வைக்கப்பட்டபோது புதியதோர் பிரச்சனையை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. இரண்டும் அப்படம் தனக்கு மட்டுமே உடமையாக இருக்க வேண்டுமென்று உரிமைப் பிரச்சனை கிளப்பத் தொடங்கி விட்டன. இரு பிராணிகளும் மோதுவதைத் தவிர்க்க இரண்டையும் தனியாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கவர்ச்சிப் படம் அளிக்கப்பட்டதும் நிலமை கட்டுப் படுத்தப்பட்டது" என்று டாக்டர் வெடெர்மென் கூறுகிறார்.

ஆண் மிருகங்கள் பெண் மிருகங்களின் கவர்ச்சிப் படங்களைக் கண்டு மயங்குவது போன்று பெண் மிருகங்களின் கூடுகளில் வைக்கப்பட்ட ஆண் மிருகங்களின் கவர்ச்சிப் படங்கள் போதிய பலனைத் தரவில்லை என்றும் அவர் சொன்னார். முனிச் மாநகர சபை மிருகக் காட்சிச் சாலையில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சை ஏனைய உலக நாடுகளிலுள்ள மிருகக் காட்சிச்சாலைகளுக்கும் பரவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## கொல்லச் சொன்னால் கொல்லும் காளை

## கொலையில் ஒரு புதுக்கலை!

தான் வளர்த்த ஒரு காளை மாட்டை வைத்து கொலைகளைப் புரிந்துள்ளான் றுடோல்ஃப் பெக்கர் என்ற ஒரு பண்ணை உரிமையாளன். தனது மனைவி வில்ஹெமினா என்பவளையும் இந்த முரட்டுக்காளையினை ஏவியே கொன்றிருக்கிறான்.

ஜெர்மனியில் வீஸ்பாடன் என்ற இடத்தில் ஒரு பண்ணையினை நடத்தும் பெக்கர், கொலையை, தான் இரசிக்கும் ஒரு கலையாகவே கருதினான். தன் கொலை வெறிக்கு ஏற்றதாக 1,250 இறாத்தல் எடையுள்ள ஒரு காளையை இவன் பயிற்சி அளித்து வளர்த்து வந்தான். இதற்கு 'புரூனோ' என்று பெயர் சூட்டினான்.

புரூனோ எப்போதும் அதற்குரிய கூட்டுக்குள் தனியாகவே அடைத்து வைக்கப்பட்டிருக்கும். அதற்கு சில சைகை முறைகளைப் பயிற்றுவித்தான். இப்பிராணியின் முன் தென்படும் எவரையும்-இவனுடைய சைகைகளின்படி குத்திக்குதறி உருத்தெரியாமல் ஆக்கிவிடும். இதற்கான பயிற்சிகளின்போது பண்ணையில் பணிபுரிந்த மூவரை இலக்காக்கியிருக்கிறான். சின்னாபின்னமான இவர்களின் உடல்களை எவருக்கும் தெரியாமல் பண்ணையின் ஒரு பகுதியில் குழி தோண்டிப் புதைத்திருக்கிறான்.

இத்தகைய முறையில் காளைக்கு கொலை வெறியூட்டக் காரணம் இவனுடைய மனைவி வில்ஹெமினாவின் பெயரிலிருந்த காப்புறுதித் தொகை 500,000 அமெரிக்க டொலரே என்ற உண்மையினை பொலிசார் கண்டு பிடித்துவிட்டனர்.



புரூனோவினால் குத்திக்குதறப்பட்டு சின்னாபின்னமாகிக் கிடந்த வில்ஹெமினாவின் சடலத்தைக் கண்டெடுத்த பொலிசார் பெக்கரை வினவியபோது தனக்கு எதுவுமே தெரியாது என்று கூறியதுடன் அழுது புலம்பி அனைவரையுமே ஏமாற்றியிருக்கிறான். மனைவி பெயரிலிருந்த காப்புறுதிப்பணம் எடுப்பதற்கு பெக்கர் காட்டிய அவசரம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சீக்ஃபிரீட் கிளௌஸ் என்பவரின் சந்தேகத்தைத் தூண்டியது.

பண்ணையில் வேலைக்கிருந்த மூவரைப் பற்றி விசாரித்தபோது, அவர்கள் எப்போதோ வேலையிலிருந்து விலகி எங்கோ சென்று விட்டதாகக் கூறியிருக்கிறான். பொலிசாரின் 'உண்மை வரவழைக்கும் தந்திரோபாயங்க'ளினால், உண்மை வெளிப்பட்டது. வேலையாட்கள் மூவரின் சடலங்களை தோண்டி எடுக்கும்போது அக்குழிகளுள் மேலும் 7 சடலங்கள் புதைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

தான் கொலை செய்யும் முறையினை ஒழிவு மறைவின்றி பெக்கர் பொலிசாரிடம் கூறினான். மாடுகளை ஓட வைப்பதற்காக வளைவான அடைப்பு ஒன்று பண்ணையில் அமைக்கப்பட்டிருந்தது. தான் கொலை செய்யத் திட்டமிட்ட நபரை அந்த அமைப்புக்குள் வரச் செய்துவிட்டு புரூனோவின் கூண்டுக் கதவைத் திறந்து ஒரு வகை ஒலியை எழுப்பி அதன் பெயரை உச்சரித்ததும், அதிவேகமாகப் பாய்ந்து செல்லும் அப்பிராணி அந்நபரைத் துரத்திச்சென்று தன் கொம்புகளால் குத்திக்குதறி உடலைச் சின்னாபின்னமாக்கி விடுமாம்.

இக்கதையினை தனது இரசனையை வெளிப்படுத்தி-நடித்துக்காட்டி, பெக்கர் மகிழ்ச்சியாகவே கூறியுள்ளான். பச்சாதாபமோ பரிவோ துளிகூட அவனிடம்காணப் படவில்லை என்று பொலிசார் கூறினர்.

புரூனோ ஏற்கனவே பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டது. 11 பேரை (தன் மனைவி உட்பட) கொலை செய்த குற்றத்துக்கான தண்டனையை எதிர் பார்த்திருக்கிறான் றுடோல்ஃப் பெக்கர்.

## கனவுகளே-கனவுகளே கை கொடுங்கள்

### கனவுகள் பற்றி புதிய தகவல்



'கனவு காணும் பழக்கம் எல்லோருக்கும் உண்டு. ஆனால் அந்தக் கனவுகளில் பிரச்சனைகளைத் தீர்க்கும் விசயமும் இருக்கிறது என்று சொல்கிறார் டாக்டர் சுசான் சிங்கர். அமெரிக்காவில் கனவு காண்போர் கூட்டமைப்பை உருவாக்கியுள்ள சிங்கர் சொல்வதைக் கேட்டுப்பாருங்கள்;

"உங்களைக் குடையும் பிரச்சனையை-நீங்கள் படுக்கைக்குச் செல்லுமுன் ஒரு தாளில் எழுதிக் கொள்ளுங்கள். அதனைத் திரும்பத் திரும்பப்படித்து உள் மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். அதே சிந்தனையை மனதில் திரும்பத் திரும்ப ஊட்டிக் கொண்டிருக்கும்போதே தூக்கம் உங்களை அணைத்துக்கொள்ளும். அதே பிரச்சனை தொடர்பான கனவு உங்களுக்கு நிச்சயம் தோன்றும். அப்போது அந்தப் பிரச்சனைக்கான தீர்வும் கிடைக்கும்.

"காலையில் எழுந்ததும் கண்ட கனவை அப்படியே எழுதிக்கொள்ளுங்கள். உடனடியாக எழுதாவிட்டால் கனவு மறந்து போய்விடும்.

"கனவில் கண்ட காட்சிகளை வரிசைப் படுத்தி ஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள். ஆரம்பத்தில் சம்பந்தமில்லாமல்- புரிந்தும் புரியாமலும் தோன்றும் கனவுக் காட்சிகளை முழுமையாகத் தொகுத்து ஆராய்ந்தீர்களானால் நிச்சயம் தீர்வு கிடைத்துவிடும்."

இவ்வாறு கூறும் டாக்டர் சுசான் சிங்கர், தன்னிடம் பயிற்சிபெற்ற ஒரு பெண்மணிக்கு ஏற்பட்ட கனவுக் காட்சி பற்றிய உதாரணத்தையும் தருகிறார்.

அந்தப் பெண்மணிக்கு தனது சொந்த ஊரிலிருந்து பல மைல் தொலைவிலுள்ள வேறோர் ஊரில் அதிக வருவாயுடன் நல்ல வேலை ஒன்று கிடைத்தது. அவ்வேலையினை ஏற்பதா அல்லது இருக்கும் வேலையிலேயே தொடர்வதா என்ற பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியவில்லை.

டாக்டர் சிங்கர் கூறிய முறைப்படி ஒரு கனவு கண்டார். அவர் ஒரு ரயிலில் பயணம் செய்கிறார். ஆனால் வண்டி மிகவும் மெதுவாகவே அசைகிறது. ரயில் தண்டவாளங்களையும் அவர் பார்க்கிறார். அவை ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் வெகு தூரம்வரை பிரிந்தே செல்கின்றன.

"இக்கனவுக்கான அர்த்தம் வெகு சுலபமாகப் புரிந்து கொள்ளக்கூடியது. உண்மையில் அந்தப் பெண்மணிக்கு தனது சொந்த ஊர்த் தொடர்புகளை- குடும்ப உறுப்பினர்கள், சினேகிதிகள் போன்றோரை விட்டுச் செல்வதில் உள் மனத்தளவில் நாட்டமிருக்கவில்லை. தனது சொந்த ஊரின். தொடர்புகளை விட்டுத் தனியே சென்றால் தொடர்புகள் தொடர முடியாமற் போய்விடும் என்பதுதான் கனவின் அர்த்தமாகும்."

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ரசிகன்

"பழைய பழைய கதையென்றாலும்
சலிப்பு வராது- அதைப்
படிக்கப் படிக்க மனசு துடிக்கும்
களைப்பு வராது"

**கவியரசு கண்ணதாசன்**



# கொலை விழும் நேரம் 23



**அ**வன் கவனித்தபடியே இருந்தான். கண்கொத்திப் பாம்பு மாதிரி இமைகள் அசைக்காமல் சூர்யாவின் அசைவுகளை அணு அணுவாக விழிக் கமராவால் கிளிக் செய்தபடி இருந்தான்.

தொடை மறைவில் பிஸ்டல் இருப்பதை துருவிப் பார்த்துவிட்டான்.

இவன் பார்வையில் இருந்து எதுவுமே தப்புதல் கடினம்.

எந்தவொரு மோதலிலும் ஆயுதங்களை விட ஆயிரம் மடங்கு வலிவு தருபவை விழிகளும், செவிகளும்தான்.

கராத்தே பயிற்சியில் விழியின் பார்வைக்குள்ள முக்கியத்துவம் சொல்லித் தருவார்கள்.

எதிரியைக் கவனி. விழிகளின் முன் நிறுத்து! ஒவ்வோர் அசைவையும் கணக்கிட்டு உன் தாக்குதலை நிகழ்த்து!

தாக்குவதானாலும், தற்பாதுகாப்பு என்றாலும் எதிரியின் நகர்வுகள் துல்லியமாய் அறிதல் அவசியம்.

கண்மூடிக் கண் திறப்பதற்கிடையில் சாதக நிலை கைமாறிப்போகலாம்.

எங்கிருந்தும் அடி வந்து விழலாம். பின்புறமிருந்தோ, பக்கவாட்டிலிருந்தோ யாரும் நெருங்குதல் நேரலாம்.

ஒரு உதை, ஒரு கிக், பலம் முறித்து குப்புறக் கவிழ்க்கலாம். எனவே விழிக்குறி தவறாதே. சிறு சப்தம் கூட கவனத்தில் வாங்கி எதிர் தாக்குதலோ, தற்பாதுகாப்போ செய்ய சகல புலன்களையும் தயாராக வை.

விழி ஒரு வாசல். செவி இன்னொரு வாசல். இரு வாசலிலும் எது மூடினாலும் புலன்கள் வாங்கும் உணர்வுகள் தடைபடும்.

வித்தை தெரிந்தவன் வீழ்வது கடினம். வீழ்ந்தால்கூட எழுவது முடியும்.

எதிரேயிருப்பவன் வித்தை தெரிந்தவன். எனினும் கொஞ்சம் அலட்சியம் உள்ளவன்.

இவள் ஒரு பெண்தானே? பெண்ணை அடக்குதல் பெரிய காரியமல்ல என்னும் நினைப்பால் வந்த அலட்சியமாகவும் இருக்கலாம்.

அந்த அலட்சியமே இவன் பலவீனம். சண்டைக்களத்திலோ, சரச காமத்திலோ பெண்ணை ஒரு பொருட்டாய் மதிக்காமல் தன் உணர்ச்சிகளை மட்டுமே நம்பி இறங்குபவன் அநேகமாக வெல்வது கிடையாது.

சூர்யா தன் எதிரியின் பலம், பலவீனம் இரண்டும் துரிதகதியில் மனதில் வாங்கி மதிப்பிட்டாள்.

மதிப்பிட்டுக்கொண்டே தொடை மறைவில் இருந்த பிஸ்டல் தொட்டாள்.

தொடும்போதே பிஸ்டல் விசையில் விரல் வைத்தாள்.

மின்னல் வேகத்தில் பிஸ்டல் திருப்பிய சூர்யா,

மறுநொடியே,

'ஐயோ..அம்...அம்மா' அலறியபடி அதிர்ந்து பிஸ்டல் நழுவவிட்டாள்.

சூர்யாவின் மணிக்கட்டை தன் வாயால் கவ்விக்கொண்டிருந்தது அந்த 'ஜெர்மன் ஷெப்பேட்' அல்சேஷன் நாய்.

சூர்யாவின் மணிக்கட்டை பற்றியிருந்த போதும், பற்களை பதிக்காமல் எஜமானின் உத்தரவுக்காக அது காத்திருந்தது.

சூர்யா எதிர்பார்க்கவேயில்லை. உடம்பெங்கும் பயத்தால் புல்லரித்தது.

கச்சிதமாக பயிற்சி கொடுக்கப்பட்டிருந்த டைனோ என்னும் அந்த அல்சேஷன் அவன் உத்தரவில்லாமல் அவள் மணிக்கட்டை விடாதுபோல் இருந்தது.

அதன் உயரமும், மணிக்கட்டை வாயால் கவ்வியபடி அது தன்னையே முறைத்துப் பார்த்துக்கொண்டிருப்பதும் சூர்யாவுக்கும் உயிரே போய்விடுவது போன்ற பயம் கொடுத்தது.

இவன் அலட்சியமானவன் என்று நினைத்து அந்த அலட்சியம் கைகொடுக்கும் என்று நினைத்தது தப்போ என்று நினைத்தாள்.

உடல் நடுக்கத்தில் உதறல் எடுத்தது. சூர்யா இருந்துகொண்டிருந்ததால் அந்த டைனோவால் அவள் கழுத்தைச் சுலபமாக ஒரே கவ்வாகக் கவ்விக்கொள்ள முடியும்.

தரையில் விழுந்து பரிதாபமாகக் கிடந்தது பிஸ்டல். இனி அது உபயோக மாகாது. அவன் இப்போது உரத்துச் சிரித்தான்.

அந்தச் சூழ்நிலையில் அவன் சிரித்தது அச்சத்தை மேலும் அதிகப்படுத்தியது.

எங்கோ நரகத்தில் அசுரர்கள் மத்தியில் தன்னந் தனியே அகப்பட்டு தவிப்பது போல உணர்ந்தாள்.

நாற்காலியில் கம்பீரமாய் இருந்தவள் இப்போது ஒடுங்கிப்போய் பயத்தில் முகம் வெளிறிப்போக, நாவரண்டு தண்ணீர்தேட,

அல்சேஷன் இப்போது அவள் மணிக்கட்டை பற்களால் குதறுவதா அல்லது இதுபோதும் விட்டுவிடவா என்பதாய் விரிந்த செவிகளோடு உத்தரவுக்காகக் காத்திருக்க,

பாதி முகத்தை கறுப்புத் துணி மறைத்திருக்க, தன்னையே பார்த்தபடி இருக்கும் அவனை சூர்யா பயத்தோடு பார்த்தாள்.

முன்பைவிட இப்போது அவன் பயங்கர மானவனாக தெரிந்தான்.

எதிரே ஒரு பிசாசு அமர்ந்திருப்பது போலவே அவனது இருப்பு நெஞ்சுக்குள் கிலி ஏற்படுத்தியது.

என்றாலும், உயிர்ப்பிச்சை கேட்டு அவனிடம் மன்றாட மனம் மறுத்தது.

ஆபத்திற்கு பாபம் இல்லை. எதிரியின் கைமேலோங்கும்போது தப்பிக்கொள்ள தந்திரம் செய்வது தவறில்லை.

'பணிந்துநடி.. மறுபடி ஒரு சந்தர்ப்பம் பெற்று அவனை பணியவைப்பதற்காக பணிந்து போ! தவறே கிடையாது.'

மனம் இரு கூறாகியது. சூர்யா ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தவித்தாள்.

ஒரே நிசப்தமாக இருந்தது. மேலே மின் விசிறி சுழலும் சப்தம் மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது.

அந்த நிசப்தத்தை கலைப்பது போல அவன் தன் தொண்டையைச் செருமிக் கொண்டான்.

"சூர்யா!"

என்றழைத்தான். சூர்யா விழிகள் படபடக்க அவனைப் பார்த்தாள்.

"புத்திசாலித்தனம் பொசுக்கென்று போய்விட்டது பார்த்தாயா? ஐ.மீன் காற்றுப் போன ரயர் மாதிரி."

தனது உதாரணத்தை தானே மெச்சிக் கொள்வதுபோல கதிரையில் இருந்து சற்று முன்னே முதுகு வளைத்து, தன் தொடையில் கையால் தட்டி, மகாதேவி படத்தில் வீரப்பா சிரித்தது போல உரத்துச் சிரித்தான்.

சூர்யா பதில் சொல்லாமல் அல்சேஷனைப் பார்த்தாள். அதன் செவிகள் மின் விசிறிக் காற்றில் படபடத்தன. உயர்ந்து விரிந்த செவிகள் அதன் வீரியம் சொல்லிக் கொண்டிருந்தன.

அதன் மூச்சுக்காற்று சூர்யாவின் முகத்தில் பட்டுக்கொண்டிருந்தது.

"சூர்யா! டைனோவை என்ன செய்யட்டும்? உன் மணிக்கட்டை தனியாக எடுத்துத்தர சொல்லவா? சொல்லலாம். ஆனால்பார் அதிலே ஒரு க...கவலை. அணைப்புத்தர வேண்டிய கரங்களில் ஒன்றை வேஸ்ட் பண்ண வேண்டாமே என்று யோசிக்கிறேன். பரஸ்பர அணைப்பு இல்லாவிட்டால் ஒரு ப...பரம சுகம் இருக்காது என்று நான் நினைக்கிறேன். நீ என்ன நினைக்கிறாய் சூர்...சூர்யா?"

'இவன் திக்குவாய்க்காரன்தானா? அல்லது அப்படி ஒரு தந்திர நடிப்பா?' சூர்யா யோசித்தாள்.

அவன் மீண்டும் அதே வீரப்பா ரக சிரிப்பைக் கொட்டினான்.

"சூர்யா எனக்கு வேண்டியதை நீ தந்தால் உனக்கு தேவையானதை நான் தருவேன். தலையிடலும் தவிர்ப்பேன். நேரம் ஓடுகிறது. உடனே தேவை ஒரு முடிவு!"

அவன் தன் மணிக்கட்டில் உள்ள கடிகாரத்தில் நேரம் பார்த்துக்கொண்டான்.

என்ன கேட்கிறான் என்று புரியாமல் சூர்யா அவனை கேள்வியாய் பார்த்தாள்.

அவன் இப்போது தன் முகம் மறைத்திருந்த கறுப்புத் துணி விலக்கினான்.

■

**உ**லுக்கினாள். வினோவின் தோள்களின் இருபுறமும் தன் கரம் வைத்து காயத்திரி உலுக்கினாள்.

மூச்சு வந்துகொண்டிருந்தது. ஆனால் விழிகள் திறக்கவில்லை.

காதருகே உதடு கொண்டுபோய் காயத்திரி,

"வினோ... கண்ணைத் திறந்து பார் வினோ....ஓ..வினோ"

கூவுவதுபோல குரல்கொடுத்து அவன் விழிகள் அசையவேண்டும், தன்னைப் பார்க்க வேண்டும் என்று விரும்பி வருந்தினாள்.

வினோ விழிகள் மூடியிருக்க அவன் தேவதை நினைவில் வந்து பால்போல வெள்ளையாய் புன்னகைத்தாள்.

எங்கோ ஒரு மணல்வெளி. காற்று பலம் கொண்டு வீசுகிறது.

அவள் கூந்தல் அந்தக் காற்றுப்பட்டு விரிந்து பரந்து கறுத்த மேகம்போல அசைகிறது.

காற்று மணலை முத்தமிட்ட வேகத்தில் புழுதி எழுந்து அவள் ஆடைகளிலும் படிகிறது.

புழுதிப் படலம் நடுவே அவள் நடந்துகொண்டிருக்கிறாள்.

இரைச்சல்களின் மத்தியிலே எப்போதாவது கேட்கமுடிகிற இனிய மெல்லிய இசை மாதிரி,

அந்த வறண்ட மண்வெளியில் அபூர்வமாகப் பூத்த ரோஜா மாதிரி,

அவள்-வினோவின் ராஜகுமாரி நடந்து கொண்டிருந்தாள்.

"போகாதே. என் பிரிய வீணையே என் கைவிட்டுப் போகாதே. உன் பெறுமதி அறிந்தவன் நான் மட்டுமே. மீட்ட என் விரல்கள் இருக்கையில் நீ ஏன் புழுதியில் போகிறாய்?"

வினோவுக்கு உரத்துக் கத்தி தடுக்க வேண்டும் போல இருந்தது.

முடியவில்லை. வாசகங்கள் மட்டுமே தட்டச்சில் ரைப் செய்யப்பட்டது மாதிரி மனதில் நின்றன. வெளியே வர மட்டுமே மறுத்துக்கொண்டிருந்தன.

அவள் இப்போது மணல் வெளிப் புழுதியில் மங்கலாய் தெரிந்தாள்.

கைக்கெட்டும் தூரத்தில் காதருகே வந்து 'ஐ லவ் யூ' சொன்னவள்,

கண்ணுக்கெட்டாத தூரத்தில் தொலை தூர வானத்து நட்சத்திரம் போல, சிறுத்து சிறுத்து ஒரு சிறு புள்ளிபோல,

அந்தப் புள்ளியையும் ஒரு புழுதிப்படலம் எழுந்து, மறைக்க,

வினோ உடைந்துபோனான். உயிர் கரைந்து போனது போல் உணர்ந்து கலங்கிப் போனான்.

"போகாதே! போகாதே!"

என்று மனது துடிக்க உதடுகள் அதனை எதிரொலி செய்தன.

அவன் உதடுகள் போட்ட சத்தம் செவிகள் வழியே அவன் உள்ளேயே மறுபடி நுழைய-

திகைத்துப்போன வினோ கண்கள் திறந்து ஒரு குழந்தையைப் போலத் தெரிந்தான்.

"காயத்திரி."

ஆதரவாய், இதமாய் புன்னகைத்து அவன் சோக காயம் வருடிக்கொடுக்க முயன்றாள்.

வினோ சூழல்புரிந்து வெட்கப்பட்டான். தன்னிலை மறந்துபோய் வாய்விட்டு அலறியது நினைத்து சங்கடப்பட்டான்.

தலை கனத்து வலித்தது. விண், விண் என்று நெற்றியின் இருபுறமும் வலித்தது.

நெற்றியின் இரு புறங்களிலும் இரு கரங்களையும் வைத்துப் பிடித்துக் கொண்டான்.

"என்ன வினோ."

"தலை வலியாக இருக்கிறது காயத்திரி."

காயத்திரி நகர்ந்துபோய் தன் இருக்கையில் இருந்த கைப்பை திறந்து உள்ளே இருந்த 'பாம்' டப்பா எடுத்துக்கொண்டாள்.

வினோவின் அருகில் வந்து டப்பா திறந்து, விரல் தொட்டு 'பாம்' எடுத்து நெற்றியின் வலது புறத்தில் இதமாய் வருடித் தேய்த்தாள்.

சுகமாக இருந்தது. விரல்பட்ட இடம் குளிராய் தெரிந்தது.

இடதுபுற நெற்றிக்கும் 'பாம்' தேய்த்து, பின் இரு கரங்களையும் நெற்றியின் இருபுறமும் வைத்து ஆட்காட்டி வில்களால் தேய்த்துவிட்டபடி,

"சுகமா இருக்கிறதா வினோ?"

என்று கேட்டதில் நூறுவீதமான அக்கறை ஒட்டியிருந்தது.

வினோ கண்களை மூடித் திறந்து கொண்டு பார்க்க,

தலைப் பாரத்தில் பாதி குறைந்தது போல ஒரு சுகம் உணர முடிந்தது.

காயத்திரிக்கு தன்னை யாரோ பின்புறமிருந்து பார்ப்பதுபோல பின் கழுத்தின் மையத்தில் ஏதோ உறுத்தல் தெரிய;

உடனே திரும்பிப் பார்த்தாள்.

ஜவாஹர் வீசிய கத்தியை நெஞ்சில் வாங்கி குப்புற விழுந்த உருவம் கண்டு, நிர்மலாவுக்கு தன் கண்களையே நம்ப முடியாமல் இருந்தது.

எனினும் அது அவரேதான் என்று உறுதியாகத் தெரிந்தது.

"யார் என்று தெரியுமா நிர்மலா?"

என்று குலாம்ஷா கேட்க,

நிர்மலா தயங்காமல் உடனே,

"தெரியும்!"

"சித்தப்பாவை எப்படி தெரியாமல் போகும்? பசுபதி! உன் கூட்டாளி பிரசாத் ஏன் அங்கே ஒளித்திருக்க வேண்டும்? உனக்கும், மிஸ்டர் பிரசாத்திற்கும் உள்ள தொடர்பு, ஐ.மீன் வியாபாரத்திற்கும் வெளியே..... அது என்ன?"

பசுபதி கோழி திருடிக் கையும் களவுமாகப் பிடிபட்ட திருடன்போல முழித்தார். குலாம்ஷா தன் சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்தார்.

"இங்கே பார் பசு..பதி! முதல் கேள்விக்கும் இன்னும் நீ பதில் சொல்லி முடிக்கவில்லை. இப்போது இரண்டாவது கேள்வி, இரண்டு கேள்விக்கும் டாண் டாண் என்று பதில் சொல்லு."

பசுபதி ஜவாஹரைப் பார்த்தார். அவன் இரத்தம் நிறைய விரயமாகி கிட்டத்தட்ட இறந்து கொண்டிருந்தான்.

பிரசாத் குப்புற விழுந்து கிடந்து முனகிக்கொண்டிருந்தார்.

நிர்மலாவுக்கு பரிதாபமாக இருந்தது.

சிறுவயதில் தோளில் தூக்கி வைத்திருந்தவர். அன்பு மழை பொழிந்து சீராட்டியவர் என்றெல்லாம் ஒன்றும் கிடையாது.

சித்தப்பா என்ற உறவோடு சரி. சின்ன வயதில் ஒருநாள்கூட அவர் அவளைத் தூக்கி கொஞ்சியது கூட கிடையாது.

சின்னம்மா மட்டும் அதுவும் அபூர்வமாக "நிர்மலாக்குட்டி எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டது மட்டும் நினைவில் இருக்கிறது.

என்றாலும் உள்ளே ஒரு இரக்கம் வந்தது. அவர் இரத்தம் தரையில் பரவ இதயம் அனுதாபப்பட்டது.

என்றாலும் அருகில் ஓடி காயம் அறிய, இரத்தம் தடுக்க அந்த இரக்கமும், அனுதாபமும் போதுமானதாக இல்லை.

ஏதோ ஒன்று தடுத்தது. அது என்ன...?

ஓ... அந்தக் காட்சி மனக் கண்ணில் விரிந்தது.

■

**அ**ருகில் வந்தவள் டென்சில் தன்னையே கூர்ந்து கவனிப்பதை பார்த்து விட்டு முகம் திருப்பிக்கொண்டாள்.

அவரைக் கடந்து போனாள்.

"இவள் அவள் இல்லை."

டி.ஐ.ஜி.டென்சிலுக்கு தர்ம சங்கடமாகிவிட்டது.

நல்லவேளை "என்னடா முறைப்பு?" என்று கேட்காமல் போனாளே.

"நன்றி பெண்ணே!"

மனதுக்குள் நிம்மதியாகச் சொல்லிக் கொண்டார்.

தொலைபேசி கூண்டை நோக்கிப் போனவர், தற்செயலாக ரெலிபோன் பூத் விளம்பரம் மேலே ஒட்டப்பட்டிருந்த சிறு தாளின் மீது பார்வை செலுத்தினார்.

அதில் ஏதோ எழுதப்பட்டிருந்தது.

அருகில் சென்று பார்க்க அதில் உள்ள வாசகம் தனக்காக எழுதப்பட்டிருந்தது என்று புரிந்தது.

**"அன்புள்ள டென்! ஏமாற்றத்திற்கு மன்னிக்கவும். பிறிதொரு நாள் பார்க்கலாம். இன்று ஒரு மிக முக்கிய தகவல். உங்களுக்கு வேண்டப்படுபவரின் முதல் எழுத்து ஆங்கில 'எஸ்'. முயலுங்கள். மீண்டும் தொடர்பு கொள்வேன்."**

டி.ஐ.ஜி. அந்த தாளை தொட்டு கிழித்தெடுத்தபடி, 'யார் அந்த **'எஸ்'**! யார்' என்று யோசிக்கத் தொடங்கினார்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர்



பெயர்: எஸ். நவகாந்தன்
வயது: 17
முகவரி: 127, கட்டுகொடல்ல வீதி, கண்டி.
பொழுதுபோக்கு: கவிதை எழுதுதல், கிரிக்கெட், பேனாநட்பு.




பெயர்: எம்.எம். ஃபைஸல்
வயது: 18
முகவரி: 'பார்மில் ஹொட்டல், இஸ்மாயில் புரம், புத்தளம்.
பொழுதுபோக்கு: பேனா நண்பர் தொடர்பு, பத்திரிகை வாசித்தல்.




பெயர்: கோமதி
வயது: 18
முகவரி: மெத்த கந்த, பலாங்கொட
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



பெயர்: பாத்திமா நபவியா
வயது: 16
முகவரி: 151, பழைய வீதி, பேருவளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.



பெயர்: கே. விஜயகரன்
வயது: 22
முகவரி: R.A.F. 91/91, T.C.C. P.O.BOX-2630 DOHA-QATAR
பொழுதுபோக்கு: நாவல்கள், பத்திரிகை.



பெயர்: எம்.ஜே.எம். ஷஹீர்
வயது: 26
முகவரி: DALLAH HOSPITAL P.O.BOX-87833 RIYADH, 11652, K.S.A.
பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், கலையான செய்திகள் சேகரித்தல்.

பெயர்: எம்.ஜே. டொனி
வயது: 25
முகவரி: HAUSMATTRAIN-22, 4600 OLTEN, SWITZRLAND.
பொ.போக்கு: பத்திரிகை வாசித்தல், புத்தகம் படித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: ஏ. றஊப்கான்
வயது: 23
முகவரி: 6, பதுளை வீதி, வெலிமடை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட் விளையாடுதல்.

பெயர்: ஜெ. கரன்
வயது: 22
முகவரி: 75, லோரன்ஸ் ரோட், கொழும்பு-4.
பொ.போ: பத்திரிகை, வானொலி, ரீ.வி.

பெயர்: ஐ.எஸ். தஸ்லிம்
வயது: 20
முகவரி: கெக்கிராவ றோட், கனேவல்பொல.
பொ.போ: பத்திரிகை, வானொலி, ரீ.வி., பேனா நட்பு.

பெயர்: பி. இராமச்சந்திரன்
வயது: 19
முகவரி: 6, லாகோஸ் டிவிசன், களுத்துறை தெற்கு.
பொ.போ: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: எம்.எம். பஹீஜ் அஹ்மட்
வயது: 17
முகவரி: ஆலிம் வீதி, மூதூர்-06.
பொழுதுபோக்கு: வழமையானவை.

அரங்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# தனிமை

-ஹரீரா அனஸ்-

"பெண்கள் எல்லோருக்கும் பொறாமை. அவனுக்கு இப்படி ஒரு மனைவியா என்று"

படுக்கை விரிப்பைச் சுற்றிவைத்தான். பின்னர் பிறஷை எடுத்துக் கொண்டு சாரம், துவாய் சகிதம் பாத்ரூம் போனான். பல்விளக்கி உடல் அலுப்புத் தீருமட்டும் குளித்தான். குளிர்ந்த நீர் ஜில்லென உடலிலும் உள்ளத்திலும் குளிர்ச்சியை ஏற்படுத்தின. தலைதுவட்டி உடுப்புக்கழுவி உலரவைத்து ஏற்கனவே வாங்கிவைத்திருந்த பாண் துண்டை வெட்டி பட்டர்பூசி ப்றேமில் வைத்துவிட்டு சேட்டும் அதற்கு மேட்ச் பண்ணக்கூடிய ரவுசரும் எடுத்து அயன் பண்ணினான். ஷூவை எடுத்துவைத்து பொலிஷ் பண்ணி மேசை உதறிக் காலில் போட்டான். நேரத்தைப் பார்க்க மனம் பதறினான். 'இன்னும் ஐஞ்ச நிமிசத்துக்குள்ளை போயிட வேணும்' எண்ணியபடி கராஜுக்குப் போய் கதவு திறந்து தனது மோட்டார் சைக்கிளை எடுத்து ஸ்ராட் செய்தான்.

'மனைவி என்பவள் குடும்ப விளக்கு. அந்த விளக்கு அணைந்துவிட்டால் ஒரு கணவன் படுகின்ற கஷ்டம் கொஞ்ச நஞ்சமா?' மனம் எண்ணிக் கொண்டது. மோட்டார் சைக்கிளின் வேகத்தோடு மனமும் பாய்ந்து போகிறது.

வால் வெள்ளி வந்துவிட்ட அதிசயம். அவன் வாழ்வில் அப்படி நடக்குமென்று எதிர்பார்க்கவே இல்லை. முதல்மனைவி உலக வாழ்க்கை போதுமென்று போய்விட, குழந்தைகுட்டி இல்லாத அவன் தனிமையை மட்டும் சோகத்தோடு விரும்பினான். இனிமேல் அவளின் நினைவுகள் போதும். ஆண்டனுபவிச்சுப் போட்டுவிட்டவள் மாதிரி ஐந்து வருடத்திலேயே கண் மூடிவிட்டாள் முதல்த்தாரம்.

தாய்க்குப் பின் தாரம். அவனுக்கு இப்போது இரண்டுமில்லாத நிலைமை. அலுவலகம் நிறையப் பெண்கள். அவனின் வீட்டிற்கும் அவனின் உடற்கட்டிற்கும், மோட்டார் சைக்கிளுக்கும், இருக்கும் பணத்திற்கும் ஆசைப்பட்டவர்கள் எத்தனை பேர்?

அவனுக்கு இரண்டாம் தாரமாய் வர முயன்ற முதலாம் தாரங்கள் பல. ஏனோ தெரியாது இப்பொழுதெல்லாம் தனிமை மட்டுமே அவனுக்குப் பிடித்துப் போய் விட்டது. பலவேலைகள், பல விடயங்கள் தனிமையில் செய்வது இலகுவாகப் படுகிறது. ஜோடி அல்லது பெண்பற்றிய விருப்பில் அவன் இப்போதைக்கு இல்லை. நெடுந் தூரத்தில் இருந்து அவனது வயதான அம்மாவும் அப்பாவும் மாதமொரு தடவை இரயில் ஏறி வருவார்கள். அவன் அவர்களிடம் தனிமை பற்றிப் பிரஸ்தாபிக்க மாட்டான்.

ஆனால் அந்த இரண்டு கிழங்களுக்கும் இவனின் தனிமைபற்றி ஒரே மன உளைச்சல். சில வேளைகளில் மகன் மனச்சந்தோஷமாய் இருக்கும் சந்தர்ப்பத்தில் பேசிப் பார்ப்பார்கள். வரும்போதெல்லாம் சந்தர்ப்பம் அறிந்துபேசுவதில் அவர்களுக்கு எந்தச் சிரமமும் ஏற்படுவதில்லை.

பல சந்தர்ப்பங்களில் அவன் வேண்டா வெறுப்பாகவே இருந்தான். இவர்களின் உபதேசத்தையே அடிக்கடி அலுவலக நண்பர்களும் கூறுவார்கள். அவனுக்கு அப்பா, அம்மா, அலுவலக நண்பர்கள் எல்லோரும் ஒன்றுதான். ஆனால் இன்றைக்கு மதியம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது பக்கத்தால் கன்ரீனுக்குப் போன அழகான ரைப்பிஸ்ட் கோமதி சொன்னாள், "அடியே ரிபாஸா இந்த மனிசனுக்கு ஒருவேளை ஆண்மையிலை ஏதாச்சும் குறையோ".

"சுரீர்" என்று உள்ளத்தில் முள்தைத்தது. வேகம் பிறந்தது. பின்னர் வேதனை வந்தது. 'ஒரு பெண். அதுவும் ஒரு ரைப்பிஸ்ட், அழகான கோமதி என் ஆண்மையைப் பற்றிச் சொன்னாளே!' மனம் வேகிப் போனான்.

எப்போது மாலையாகிறது என்று அடிக்கடி கடிகாரம் பார்த்தான். லீவு எழுதிக் கொடுத்தான். பத்து நாள் விடுமுறையில் ஊருக்குப் போனான். அடுத்த நாள் அவன் அலுவலகம் வரவில்லை.

"என்னடி ரிபாஸா எங்கடை பிரமச்சாரி வரவில்லை!" -கோமதி.

"எனக்கென்ன தெரியும்? நீதான் அவரை முந்தானையிலை முடிஞ்சு வைச்சிருப்பியே" -ரிபாஸா.

"ஓமடி முடியத்தான் பாக்கிறன். முடியாதாமே" -கோமதி.

சூட்டோடு சூடாக அம்மா, அப்பா என்ற இரண்டு கிழங்களும் ஆச்சரியப்பட "அம்மா நான் அவசரமாய் கலியாணம் செய்ய வேணும்" சொன்னான்.

அதுகளுக்கு ஏககாலத்தில் இரண்டு உணர்வுகள். ஒன்று மகிழ்ச்சி. மற்றையது அதிர்ச்சி. அவனுக்கு உணர்வு ஒன்றுதான். ஆண்மையுள்ளவன் என்ற நிரூபணம்.

பதினோராம் நாள் வேலைக்கு வரும் போது அவனைப்பார்த்து எல்லோருமே ஆச்சரியப்பட்டுப் போனார்கள். மனேஜரில் இருந்து கோமதி, ரிபாஸா வரை ஆச்சரியம். கோமதிக்கு கோபம் வேறு. இவ்வளவு ட்றை பண்ணியும் தனக்குக் கிடைக்க வில்லையே அவன் என்ற ஆதங்கம் வேறு.

அழகான மனைவி விஜி. நல்ல உடற்கட்டு. தேகாரோக்கியம். பெண்கள் எல்லோருக்கும் பொறாமை. அவனுக்கு இப்படி ஒரு மனைவியா? அவனும் அழகானவன்தான்.



வீட்டுப் பொறுப்புகளும், வீட்டு வேலைகளும் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக விஜியின் பொறுப்பிற்கு மாறின. அவன் நல்ல கணவன். மனம் கோணாமல் மனைவியைக் கவனிக்கக் கூடியவன். அடிக்கடி மோட்டார் சைக்கிள் பயணம். சிரிப்பு சந்தோஷம் என்பதாக வாழ்க்கை ஓடியது. கோமதிக்காக வேண்டி அவளின் வீறாப்புக்காக வேண்டி அவசர அவசரமாக ஒரு மொழு மொழுவென்று அழகான ஆண் குழந்தைக்கு தந்தையானான்.

"விஜி. இங்கை வாம்மா?"

"விஜி அந்த ஷூவைப் பொலிஷ் செய்யம்மா!"

"விஜி சேட்டை அயண் பண்ணியாச்சா?"

தனிமை போய்விட்டது.

எல்லாம் ரெடி. குடும்பஸ்தனான அவனுக்கு அலுவலகத்திலும் மரியாதை. மனைவி பற்றிய மதிப்பு இன்னும் பன்மடங்காகிறது. மனைவி என்பவள் ஒரு மனிதனைப் பூரணப்படுத்துகின்றவளாக இருப்பவள். ஆண், குடும்பம் என்று வந்துவிட்டால் அவனுக்கு ஒரு அந்தஸ்த்தை சமூகம் கொடுக்கிறது. அதுவும் அவன் பிள்ளைப் பேறுள்ளவனாக இருந்துவிட்டால் அந்தஸ்த்தும் கூட. அழகான ஒழுக்கமுள்ள இலட்சணமான மனைவியை அடைந்து விட்டாலோ புகழும் அரவணைப்பும் அதிகம்.

இப்பொழுது அவனது வீடு தேடி ஊரில் முக்கியமானவர்கள் வருவார்கள். அடிக்கடி அம்மாவும் அப்பாவும் பேரப் பிள்ளையைப் பார்க்க வருவார்கள். வந்தவர்கள் முன்பைப்போல உடனே புறப்பட்டுப்போகமாட்டார்கள். மருமகள், பேரன் என்று அன்பாக இருந்துவிட்டுப் போவார்கள். போகும்போது அவன் பணம் ஏதாவது கொடுத்தனுப்புவான். ஆனால் அவர்கள் ஊரில் இருந்து வரும்போது அவன் கொடுத்ததற்கும் இரட்டிப்பாக சாமான்களைக் கொண்டுவந்து நிரப்பி விடுவார்கள். பேரனுக்கு விளையாட்டுச் சாமான்கள், மருமகளுக்கு உடுதுணிகள் காரமான, இனிப்பான பட்ஷணங்கள் என்று அமர்க்களப்படுத்திவிடுவார்கள்.

மருமகளுக்கும் மகிழ்ச்சி. இப்படி ஒரு மாமா, மாமி பற்றி. அவர்களுக்கும் பெரு மகிழ்ச்சி, இப்படி ஒரு மருமகள் கிடைத்தது பற்றி. சில தனிமைகள், நிரந்தரமாக்கப்பட்டவை. மனிதனோடு பின்னிப் பிணைந்து போனவை. அனுபவிக்க முடியாத கலகலப்புகள். அவன் சந்தோஷித்த நாட்கள் கொஞ்சமே. தனிமைப்பட்ட நாட்களே அதிகம். விஜிக்கு இரண்டாவது பிள்ளை வயிற்றில், அவன் தனிமை பற்றிய பயங்களை இழந்த நாட்கள் இப்போது. இடையில் சிரமம் மத்தியில் ஒரு அமைதி இருந்தாலும் அவனே தனக்கான எல்லா வேலைகளையும் செய்ய வேண்டுமே! இது எவ்வளவு பெரிய சிரமம்! இப்போது மனைவி என்ற அந்த உத்தமியால் எவ்வளவு உதவி. விஜியில் என்ன குறை? மார்க்க அறிவா அல்லது பேணுதலா... அல்லது புத்தியா? அவனுக்கு அவள் எவ்வளவு ஆறுதல்!

விதி பற்றிய சிந்தனையும் பயமும் யாருக்குத்தான் இல்லை. அவன் பயப்படும் படியாய் ஆனதே.

செவ்விளனி பிடுங்கப் போய் கொக்கைத் தடியில் கட்டியிருந்த 'கொக்கைச் சத்தகம்' (கொக்கைக் கத்தி) கழன்று உச்சந்தலையில் விழ, அறிவு நினைவில்லாமல் விஜி விழுந்து கிடக்க, அவன் ஓடிவந்து தூக்கும்போது இருந்த மிச்ச சொக்கம் உயிரும் அவனது மடியில் போய்விட்டதே? எல்லோரும் வந்து அனுதாபம் தெரிவித்துவிட்டுப் போக- கடைசியில் -இன்னும் கலியாணம் முடிக்காமலும் உயிரோடு இருக்கும் ரைப்பிஸ்ட் கோமதியும் வந்து மிகவும் துக்கமான குரலில் அழுத கண்ணீருடன் அனுதாபம் தெரிவிக்க...

இப்படியே மூன்று கிழமைகள் போய் விட்டன.

மனைவி என்ற ஸ்தானத்தை நிரப்ப யாரால் முடியும்? ஒரு புரிந்துணர்வுள்ளவளால்தான் முடியும்? அப்படி எத்தனை பேர் கிடைப்பார்கள்? மனம்போல மணம் என்பது எவ்வளவு பொருத்தமான வார்த்தை. நினைவுகள் வாட்டி எடுத்தன.

இப்போது அவன் மீண்டும் தனிமையாகிறான். குழந்தையை நேற்றுத்தான் அம்மாவும் அப்பாவும் வந்து எடுத்துக் கொண்டு போனார்கள்.

மீண்டும் அவனே படுக்கை விரிப்பைச் சுற்றி வைத்தான். பிறஷை எடுத்துக்கொண்டு பாத்ரூம் போனான். பல் விளக்கினான். தண்ணீர் சுட வைத்து தானாக டீ ஊத்திக் குடித்தான். ஷேட்டை அயண் பண்ணினான். காலையில் கடைக்குப்போய் பாண் வாங்கி வந்து பட்டர் பூசிச் சாப்பிட்டான். கரேஜுக்குப் போய் மோட்டார் சைக்கிளை எடுத்து ஸ்ராட் செய்தான்.

மாலையின் வேலைகளை எண்ணியபடி மோட்டார் சைக்கிளை அலுவலகத்தை நோக்கிச் செலுத்தினான்.

மனம் தாங்க முடியாத அந்தரமாய்க் கிடந்தது அவனுக்கு.

---

## அவள் பார்த்தாள் அவன் குடித்தான் இது நியாயமா? படித்துத்தான் பாருங்களேன்.

'குட்டி'க்கதை

# வா....ரெண்டு பேரும் இதைக் குடிச்சிடலாம்....

எம். சுரேஷ்

வியர்த்துக்கொட்டியது. கையில் வைத்திருந்த அந்த போத்தலை விரக்தியோடு பார்த்தான் விக்ரம். சிந்துவுக்கு பயமாக இருந்தது.

"வேண்டாம் விக்ரம்."

"அப்போ நீ மாட்டேங்கிறியா?"

"இல்லை."

"அப்போ?"

"இதைத் தவிர வேற ஏதாவது வழி இருக்கான்னு....."

"சும்மா பைத்தியக்காரத்தனமா பேசாத சிந்து, நம்ம காதலை ரெண்டு வீட்டுக் காரங்களும் ஏத்துக்கவே மாட்டாங்க."

"அதுக்காக கோழைங்க மாதிரி இதைக் குடிக்கணுமா?..... நாம இதைக் குடிச் சோம்னா யாருக்கு என்ன இலாபம் கிடைக்கப் போவுது? இங்க பாரு விக்ரம் நானும், நீயும் உறுதியா இருந்தா நிச்சயம் நம்ம காதல் வெற்றி பெறும்...."

"எப்போ?"

"எப்பவாவது...."

விக்ரம் முகம் கவிழ்த்து மௌனம் சாதித்தான். அவன் மனதிற்குள் எத்தனையோ சடுதியான மாற்றங்கள். தாழ்ந்த குரலில் பேசினான்....

"சிந்து! யோசிச்சுப்பாரு. இப்போ எல்லாம் உன்னோட பேசாம, உன்னைப் பார்க்காம நான் எவ்வளவு கஷ்டப்படுறேன்னு எனக்குத்தான் தெரியும்... எனக்கு இப்பிடிக் கொஞ்சம் கொஞ்சமா சாகமுடியாது சிந்து."

விக்ரமின் கண்கள் கலங்கிச் செந்நிறமாக சிந்து மேலும் குழம்பினாள்.

"சிந்து! நான் இவ்வளவு நாளும் உங்கிட்ட பேசின வார்த்தைகளும், எழுதின கடிதங்களும் பொய்யின்னு நினைக்கிறியா?"

"இல்லை."

"அப்போ ஏன் தயங்கிற?"

"நாம எதுக்கு அவசரப்படணும்?"

"எனக்குப் புரியல்ல..."

"எனக்குப் புரியுது...ஒனக்குப் பயம்... நான் கெடைக்காமப் போயிடுவனோன்னு பயம் விக்ரம்...எங்கே நீ இல்லைன்னு சொல்லு பார்க்கலாம்?"

அவன் தவித்தான். என்ன சொல்வதென்று தெரியாமல் தடுமாறினான்.

"சிந்து! நான் உன்மேல் உயிரையே வைச்சிருக்கேன்."

"தெரியும்."

"நீ எனக்கு மனைவியா கிடைக்கல்லேன்னா நான் கல்யாணமே கட்டிக்க மாட்டேன்னு சொன்னேனே நினைவிருக்கா?"

"இருக்கு."



"ஒன்னா வாழக் கிடைக்காட்டி ஒன்னா செத்துப் போவோம்ன்னு நீ சொன்னியே அது நினைவிருக்கா?"

"நல்லா நினைவிருக்கு."

"அப்போ வா. ரெண்டு பேரும் இதைக் குடிச்சிடலாம்."

"........."

"இங்க பாரு சிந்து, நம்ம கவலைகளை மறக்கிறதுக்கு எனக்கு இதைத் தவிர வேற வழியே தெரியல்ல." (அவன் அழ சிந்து பதறிப்போனாள்)

"ஏய்! இப்போ எதுக்கு அழுகிற?"

"ஒன்னுமில்ல....."

(அவன் தலையை அன்பாக வருடிக் கொடுத்து, தன் மார்போடு இறுக அணைத்து முத்தமிட்டாள் சிந்து!)

"எனக்கு நீ வேணும்டா" அவள் காதுக்குள் மெதுவாகக்கூற அவனுக்குள் ஏதேதோ.....

"எனக்கும்தான்...இந்த ஜென்மத்தில இல்லாட்டிலும் அடுத்த ஜென்மத்திலயாவது நாம ஒன்னா இருப்போம் சிந்து. (அவள் பட்டுக் கன்னத்தை வருடிய படியே அவள் இதழ்களில் அழுத்தமாக ஒரு முத்தம் பதித்தான் விக்ரம்.)

சிந்து சிணுங்கினாள்.

"அடுத்த ஜென்மம்ன்னு எதுக்குச் சொல்ற?"

"ஏன் ஒனக்கு நம்பிக்கை இல்லையா?"

"கொஞ்சமா இருக்கு."

"அப்போ இதை...."

"என்னால முடியாது விக்ரம்! என்னைத் தயவு செஞ்சு தொந்தரவு செய்யாத."

"அப்போ நான் மட்டும் குடிக்கவா?"

"வேணாம் விக்ரம்...வா, வீட்டுக்குப் போயிடலாம்."

"இல்லை சிந்து எனக்கு நிம்மதி வேணும்." (விக்ரம் அந்த போத்தலை உறுதியோடு கையில் எடுக்க, சிந்து அழுதபடியே அவன் கைகளைப் பற்றினாள்)

"ப்ளீஸ் வேணாம் விக்ரம்."

"இல்லை சிந்து என்னை மன்னிச்சிடு" உறுதியாகக் கூறியவன் கொஞ்சம் கூடத் தாமதிக்காமல் மடக் மடக்கென்று கையில் வைத்திருந்த அதிவிஷேச சாராயத்தைக் குடிக்க ஆரம்பித்தான். ஹி...ஹி...ஹி!

---

# பொய்யும் நிஜமும்

-மருதமுனை முகர்றப்-

தலைநகரிலே அமைந்துள்ள அந்த தனியார் அலுவலகத்தில் இலிகிதர் வேலை சிவாவுக்கு. வயது இன்னும் இருபத்தி மூன்றைத் தாண்டவில்லை. வறுமையின் பிடியிலுள்ள குடும்பம்.

இலிகிதர் என்ற முத்திரைதான் குத்தப் பட்டிருந்தாலும் அவனது வயதுக்கேற்ற கேளிக்கைப் போக்குகளும் இளமைத் துடிப்பான நடவடிக்கைகளுமே சிவாவிடமும் காணப்பட்டன.

பெற்றார்களின் பணத்திலே சுகபோகம் அனுபவிக்கும் நண்பர்கள் பொழுது போக்கிற்காய் ஆயத்தம் செய்கின்ற உல்லாசமான பயணங்கள் போக, சிவாவின் மனமும் ஏக்கத்தால் தவிக்கும்.

பயணங்கள் போகும் நாளுக்கு முந்திய நாளே நண்பர்களைக்கொண்டு குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டதாகத் தந்திகள் கொடுப்பான். தந்தியைக் கண்டதுமே முகாமையாளரும் எதுவித மறுப்புக்களுமின்றி லீவு அனுமதித்துவிடுவார். பயணமும் இன்பமாக அமைந்துவிடும்.

சிவா இதுவரை லீவுகள் பெறுவதற்காக தந்திகள் அடித்தபடியால் தகப்பன் தொடக்கம் சிறு தம்பிவரைக்கும் நீண்டு கொண்டே போகும். சரியாகப் பார்த்தால் இப்போது சிவாவின் குடும்பத்திலே அவன் மட்டும்தான் உயிரோடு இருக்கின்றான். தனிமையில் இருக்கும் வேளைகளில் இதை நினைக்க சிவாவுக்கே சிரிப்பாக இருக்கும்.

அன்று திங்கட்கிழமை. அலுவலகமே சுறுசுறுப்பாக இருந்தது. வேலையிலேயே மூழ்கியிருந்த சிவாவை தொலைபேசி அழைத்தது.

சிவாவின் கண்களில் கண்ணீர். உடலிலே உள்ள நரம்புகள் அனைத்தும் அறுந்து உடலே மரத்துப் போனதுபோல் ஒருணர்வு. எதுவித சிந்தனைகளும் அற்றவனாக கதிரையில் சாய்கின்றான் சிவா.

தொலைபேசியின் மறு முனையிலே பேசிய மாமாவின் குரலும் அவர் கூறிய தகப்பன் இறந்துபோன செய்தியும் காதுகளில் பலமாக எதிரொலித்துக் கொண்டிருந்தன.

அடக்கத்திற்குப் போய் சேர்வதானாலும் இப்போது புறப்பட்டாலே நாளைக் காலையிலாவது போய்ச் சேரலாம். உண்மையில் அரை நாள் பயண அளவு தூரமாகவே இருந்தாலும் வடகிழக்கு என்றாலே நிலமை அப்படித்தான்.

அழுது அழுது சிவப்பேறிப்போன கண்களுடன் முகாமையாளரிடம் சென்று விடயத்தைச் சொன்னான்.

முகாமையாளர் முகத்தில் அவனை நம்பாத சந்தேகம் தெரிந்தது. போன வாரம் தகப்பன் இறந்துவிட்டதாக வந்த தந்தியை எடுத்து சிவாவின் முகத்தில் எறிவதுபோல் மேசையில் போட்டுவிட்டு எரிந்து விழுந்தார்.



கடந்த வாரம் தகப்பன் இறந்து விட்டதாகப் பொய் தந்தி கொடுத்து லீவு பெற்றுக்கொண்டு மூன்று நாள் நுவரெலியா சென்று வந்தது இப்போதுதான் சிவாவுக்கு நினைவில் உறுத்தியது.

முன்பு தான் இழைத்த குற்றங்களையும் அதற்கான காரணங்களையும் விளக்கி மன்னிப்புக் கோரினான். எவ்வளவு முயன்றும் தந்தை இறந்த செய்தியை முகாமையாளரை நம்பச் செய்ய முடியவில்லை.

"நான் லீவு அனுமதிக்க மாட்டேன், ஆனால் நீ போக விரும்பினால் தாராளமாகப் போகலாம். பிறகு இங்கு வேலைக்கு வரத் தேவையில்லை. நாளைக்கே நான் வேறு ஆள் எடுத்து விடுவேன்." இது முகாமையாளர் இறுதியாகக் கூறிய பதில்.

பல மணிநேர சிந்தனையின் பின்னர் தயாராக வைத்திருந்த பயணப் பையை எடுத்துக்கொண்டு பஸ் தரிப்பிடம் நோக்கி நடக்கிறான் சிவா, தந்தையின் இறுதிக் கடமையை நிறைவேற்றுவதற்காக.

ஆனால் மனம் அவன் செய்த தவறுக்காக அழுதுகொண்டே இருந்தது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

> “அன்றைய மாதவியோ கோவலன்-கண்ணகி வாழ்வைச் சீரழித்தாள். இன்று....நீ....”

# திசை மாறிய நேசம்

**-மாரைக்காயான்-**

ஒரு சனிக்கிழமை. முற்பகல் பதினொரு மணி. 'டுமீல்' என்ற துப்பாக்கி வேட்டுச் சத்தம். 'திக்' என்ற உணர்வோடு உடல் நடுங்க யன்னல் திரைச்சீலையை விலக்கிப் பார்த்த சுசித்திராவின் கண்களில் எதுவுமே தென்படவில்லை. மீண்டும் டுமீல். டுமீல்... பட் படார் படார்....காதே செவிடுபடும் படியாக இடி முழக்கம் போன்று ஆயுதங்களின் பேரொலிகள் அதிகரிக்க இதயத் துடிப்பை அடக்குமுகமாக நெஞ்சைக் கைகளால் அழுத்திப் பிடித்தபடி அப்படியே சுவருடன் சாய்ந்து கொண்டாள். நடந்ததை ஊகிக்க முடிந்தது. அரச துருப்புக்கள் நகர்வலம் வந்திருக்கும். விடுதலைப் போராளிகள் மறைந்திருந்து துப்பாக்கியால் சுட்டுவிட்டு தலைமறைவாகியிருப்பார்கள். ஒருவித இலக்குமின்றி துருப்புக்களின் கரங்களிலிருந்த ஆயுதங்கள் இயங்க ஆரம்பித்திருக்கும்.

'எடியே பிள்ளை! எங்க மோன சத்தம் கேட்குது?' பயத்தில் முகம் வெளுக்க நடுங்கிய குரலில் வினவிக்கொண்டு தள்ளாடியபடி வந்த பக்கத்து வளவு சின்னாச்சிப் பாட்டியும் இவளுடன் சேர்ந்து கொண்டாள்.

தெருவிலே வந்துகொண்டிருந்த ஜனங்களும் வாகனங்களும் மூலைக்கொன்றாக சிதறியோடும் இரைச்சல் சத்தம் இவர்களின் செவிகளையும் முத்தமிட்டது. இப்போதெல்லாம் இது சகஜம்தான். வெடிச்சத்தம் இன்னமும் ஓய்ந்தபாடில்லை.

கடவுளை தியானித்தபடி இருவரும் பின்பக்கமாக அடுத்த வீட்டை நோக்கி விரைந்தபோது நெஞ்சிலே ஊசி குத்துவது போன்ற வலி. நெஞ்சைப் பிடித்த சுசித்திராவின் கரங்களை குபீரென பாய்ந்த குருதி அபிஷேகம் செய்தது. தலை சுற்ற நினைவுகள் மங்க உணர்வற்ற ஜடமாய் மண்ணிலே சரிந்தாள்.

■

பெற்றோருக்கு சுசித்ரா ஒரே பெண். வசதியான குடும்பம். திருமண வயதை நெருங்கி விட்டதால் மாப்பிள்ளை தேடும் படலம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அடுத்தடுத்துப் பயந்து தமது உயிரைக் காக்கும் பொருட்டு படித்தவர்களிலும் பணவசதி படைத்த பல இளைஞர்கள் வெளிநாடுகளில் தஞ்சமடைந்துவிட்டனர்.

தம் ஒரே மகளை பிரிய விருப்பமில்லாததாலும், முன்பின் தெரியாத ஒரு தேசத்துக்கு தம் ஒரே மகளைத் தனியே அனுப்பி, தாம் கண்குளிரக் கண்டுகளிக்க முடியாதபடி அவளின் திருமணம் நடப்பதைத் தாங்க முடியாததாலும் உள்ளூரிலே வாழும் ஒரு டாக்டரையோ, என்ஜினியரையோதான் மாப்பிள்ளையாக எடுக்க வேண்டும் என்பதில் பெற்றோர் உறுதியாக இருந்தனர். ஆனால் திருமணப் பேச்சுக் களத்தில் கால் பதித்த பின்னர்தான் தமது எதிர்பார்ப்பின்படி ஒரு வரனைத் தேடிப் பிடித்து அவன் கரங்களில் கன்னி ஒருத்தியை ஒப்படைப்பதில் உள்ள சிரமங்கள் புரிந்தது.

வருடங்கள் ஓடின. சுசித்திராவின் வயதும் ஓடியது. டாக்டரை எதிர்பார்த்தவர்கள் சாதாரண கிளார்க் பையனாவது பொருந்தி வரமாட்டானா என்று ஏங்க ஆரம்பித்தார்கள். சுரேந்திரன் வீட்டு சம்பந்தம் நெருங்கி வந்தபோது கிளார்க்காக இருந்தாலும் கம்பீரமான தோற்றத்துடன் காணப்பட்ட சுரேந்திரன் அனைவரையும் கவர்ந்திருந்ததால் அவனையே மாப்பிள்ளையாக்கி திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்று அவசர அவசரமாக செயற்பட்டனர்.

சம்பந்தங்கள் எதுவும் சரிவராமல் காலம் கடந்ததால் மனமுடைந்திருந்த சுசித்ராவுக்கோ மட்டற்ற மகிழ்ச்சி. தனித்த வாழ்க்கை கசந்த காலகட்டம். மனதில் பல இனிமையான கனவுகளுடன் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஒரு சுபநாளில் சுரேந்திரனுடன் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டாள்.

ஆரம்பத்தில் குடும்பம் மகிழ்ச்சியாகவே நகர்ந்துகொண்டிருந்தது. கோயில், சினிமா, கடற்கரையென இளஞ் சோடிகள் உலா வந்தன. நாட்டின் அமைதியற்ற குழப்பமான சூழ்நிலைகூட இப்புதுமணத் தம்பதியரில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. வருடங்கள் இரண்டும் உருண்டோடின. இவர்கள் வாழ்வும் புதுத் திருப்பம் கண்டது. சுரேந்திரனின் நடவடிக்கைகளிலும் மாற்றம் தெரிந்தது.

அலுவலகத்தால் நேரம் கழித்து வீடு வருவது, எதிலும் குற்றம் கண்டுபிடிப்பது, எதற்கெடுத்தாலும் சினப்பது. இவளை வெளியே அழைத்துச்செல்ல மறுப்பது போன்ற கணவனின் உதாசீன செயற்பாடுகள் சுசித்ராவைப் பெரிதும் வாட்டியது. மழலையின் அரவணைப்பில் இவ்வேதனைகளை மறக்கலாம் என்றால் இதுவரை அந்தப் பாக்கியம்கூட கிடைக்கவில்லையே என்று மனதினுள் புலம்பினாள். யாருமில்லாத வேளையில் தனிமையில் தன் துயரை கண்ணீரில் கரைக்க முயன்றவளாக கதறியழுதாள்.

ஒருநாள் மேசையைத் துப்பரவாக்கிக் கொண்டிருந்த சுசித்ராவின் கண்களில் அக்கடிதம் தென்பட்டது. சாதாரணமாக எடுத்தவள், மாதவி என்ற பெயரைக்



கண்டதும் 'அட நம்ம மாதவிக்கு, சுரேந்திரனின் கையெழுத்தில் அப்படி என்னதான் எழுதியிருப்பார்?' என்ற ஆவலில் பிரித்த போது அதன் ஆரம்பமே ஏதோ ஒருவித எச்சரிக்கையை மனதுக்குள் ஏற்படுத்த தொடர்ந்து வாசிக்க ஆரம்பித்தாள்.

'கடவுளே என்னுடன் ஒன்றாகப் படித்தவள், ஒருவகையில் எனக்கு தூரத்து உறவினளும்கூட. அவளா இப்படி எனக்குத் துரோகம் செய்ய நினைத்தாள்? வறுமையின் விளிம்பில் வாடும் பரிதாப நிலையில்; இரக்கம் கொண்டு, உணவளித்து, உடை கொடுத்து உதவியதற்கு மாதவி தந்த பரிசு இதுதானா? என்னை விவாகரத்துச் செய்துவிட்டு தன்னை மணக்கும்படி கோர எத்தனை நெஞ்சுரம் இவளுக்கு? உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்யும் நயவஞ்சகி என்று தெரியாமல் போய் விட்டதே.'

சுசித்ராவுக்கு அளவில்லாத ஆத்திரத்தை தந்த சுரேந்திரனின் மடலின் உள்ளடக்கம் இதுதான்:

*என் இனிய மாதவிக்கு,*

*அன்பு வந்தனங்கள். சுசித்ராவின் கரம் பற்றி இங்கு வந்தபின்தான் உன்னை சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. உன்னை சந்தித்த நாள்முதல் உன்மீது எனக்கு இனம்புரியாத பாசம். உனது ஏழ்மை நிலையை அறிந்தபோது உன்மீதிருந்த நேசம் பன்மடங்காகியது. சுசித்ராவை மணம் முடிக்கமுன் உன்னை சந்தித்திருக்கக்கூடாதா என்று ஏங்கிய நாட்கள் பல. நாளாக நாளாக என்மீது நீ காட்டும் பரிவு என்னை நெகிழ வைத்து விட்டது. இந்த நேசம் எந்த வகையைச் சார்ந்தது என்று இனங்காண முடியாது தவித்த வேளையில்தான் சில நாட்கள் இங்கு வருவதை நிறுத்தியிருந்தாய். அப்போதுதான் உன்னைக் காணாமல் உன்னுடன் கதைக்காமல் ஒரு கணமும் உன்னைப் பிரிந்து வாழ முடியாது என்ற உண்மையை உணர்ந்தேன். அந்நாட்களில் ஒரு நிலைக்கு வரமுடியாமல் என் மனம் தவித்தது. எதிலுமே வெறுப்பு, எதற்கெடுத்தாலும் கோபம்.*

*எதிர்பாராத விதமாக அன்று நீ காதலிப்பதாகக் கூறியதும் முதலில் அதிர்ந்தாலும் என் மனநிலையும் இதுதானே என்று உணர்ந்து சந்தோச சமுத்திரத்தில் மூழ்கிப் போனேன். அன்றிலிருந்து நம் காதல் பசுமையாக மௌனமாக வளர்ந்து கொண்டிருந்தது. ஆனால் திடீரென நீ என்னுடன் பழகுவதை நிறுத்திவிட்டு தொடர்ந்தும் என்னால் கள்ளக் காதலியாக இருக்க முடியாது. நான் வேணுமா? உங்களுக்கு சுசித்ரா வேணுமா? என்பதை முடிவு செய்து நான் வேணுமாயின் சுசித்ராவை விவாகரத்துச் செய்துவிட்டு சட்டப்படி என்னை மனைவியாக்குங்கள் என்று கோரியதுதான் எனக்கு குழப்பத்தை உண்டுபண்ணுகிறது. என் கையில் ஒப்படைத்த கையோடு சுசித்ராவின் பெற்றோரும் கண்களை மூடிவிட்டனர். சகோதர துணையின்றி ஒரே பிள்ளையாக இருப்பதால் என்னை விட்டால் அவளுக்கு வேறு கதியுமில்லை. அவளின் சொத்துக்களையும் என் தங்கைகளின் வாழ்வுக்காக என்னிடம் அர்ப்பணித்துவிட்டாள். இந்நிலையில் மனிதாபிமானமாக சிந்திக்கும்போது அவளை பிரித்துவிடுவது கொடுமையிலும் கொடுமைதான். எதற்கும் சிலகாலம் பொறுத்திரு நமக்கும் விடிவு வரும்.*

*உன் இனிய நினைவுகளுடன்*
*சுரேந்திரன்.*

பற்களைக் கடித்து பொங்கிவந்த ஆத்திரத்தைக் கட்டுப்படுத்த முயன்றாள். அவளது எதிர்காலமே கேள்விக்குறியாகி அவளை அச்சுறுத்திக்கொண்டிருந்தது. நெருங்கிய உறவினரும் இல்லை, சொந்தத் தொழிலுமில்லை. சுரேந்திரனை எதிர்த்து மோதிவிட்டு அவன் ஒதுக்கிவிட்டால் தொடர்ந்து வாழ்வதற்கு யாரின் துணையை நாடுவது? சுரேந்திரனை நம்பியல்லவா வியர்வை சிந்தி உழைத்து, திட்டமிட்டு செலவு செய்து மீதியை சிறுக சிறுக சேமித்து வீடாக, நகைகளாக, இலட்சம் பணங்களாக பெற்றோரால் எனக்கெனத் தந்த சொத்துக்களையும் கைகழுவி விட்டேன். யாரையும் நம்பி செயற்படுவது எத்தனை மதியீனம். இதனால்தான்போலும் 'நம்ப நட நம்பி நடவாதே' என்பார்கள். கடவுளே நீதான் எனக்கொரு விடிவுகாலத்தைத் தரவேண்டும் என இறைவன் மீது பழியைப் போட்டுவிட்டு எதையுமே அறியாதவள்போல் மௌனமாக இருந்துவிட்டாள்.

மாதவியின் வருகையும் தினமும் தொடர்ந்தது. சுரேந்திரனுடனான உரையாடல்களும் பலமணி நேரங்களுக்கு நீடித்தது. முன்பு போலவே சிலவேளை உணவும்



பரிமாறப்பட்டது. உடைகளும் வழங்கப்பட்டன. ஆனால் சின்ன வித்தியாசம். முன்னர் சுசித்ராவே விரும்பி மனமுவந்து பரிமாறினாள். இப்போதோ கணவனின் வேண்டுகோளுக்கு இணங்க வேண்டாவெறுப்பாக கடமைக்காகப் பரிமாறினாள். முன்னர் தான் அணிந்து அரைப்பழுதான ஆடைகளை வழங்கினாள். இப்போதோ கணவனின் கட்டளைப்படி புதிய ஆடைகளை கசப்புடன் வழங்கினாள்.

நாட்கள் நகர்ந்தன. அமைதியுமின்றி, இடியுமின்றி மப்பும் மந்தாரமுமாகவே வருடம் ஒன்றும் கழிந்தது. மாதவிக்கு வேலையும் கிடைத்தது. நந்தி விலகிவிட்டது. இனி விடிவு பிறந்துவிடும் என்றெண்ணி நிம்மதிப் பெருமூச்செறிந்தாள்.

அந்த நிம்மதி நீடித்ததும் சில வாரங்கள்தான். மாதவி வேலை செய்வதும் சுரேந்திரனின் அலுவலகத்திலேயே என்றறிந்ததும் அதிர்ந்தது நெஞ்சு. தொடர்ந்து சுசித்திரா வின் பெயருக்கு வந்த பல முகவரியற்ற மடல்கள் சுரேந்திரன்-மாதவியின் நடத்தைக் கேடுகளை அம்பலப் படுத்திக் கொண்டிருந்தன.

தொடர்ந்தும் கணவனுடன் வாதாடுவதில் பலன் இல்லை என்றுணர்ந்தவள் மாதவியிடம் சரணடைந்தாள்.

"திருமணமாகாத எத்தனையோ ஆண்கள் இருக்கும்போது எந்த ஆதாரமும் இன்றி கணவரையே நம்பியிருக்கும் எனது கணவர்தானா உனக்குக் கிடைத்தார்? உன் கைவசம் தொழிலாவது இருக்கிறது. ஆனால் எனக்கு...? என்னுடைய வாழ்க்கையைப் பாழாக்கிவிட்டு அதில் உனக்கொரு வாழ்வைத் தேட முனைகிறாயே இது நியாயமா? தயவு செய்து என் நிலைமையைச் சிந்தித்துப் பார்த்து என் கணவரை என்னிடமே தந்துவிடு." என்று அவள் கால்களில் மண்டியிட்டு இரந்த போதும் அந்தக் கல் நெஞ்சம் கரையவேயில்லை. சுசித்ராவை வரவேற்ற கோயில், கடற்கரை மாதவியை வரவேற்கவும் தவறவில்லை.

இருண்ட சுசித்ராவின் வாழ்க்கையில் ஒளியேற்ற அந்த இறைவனாலும் முடியவில்லை. அதனால்தான் போலும் அவளது துயரங்களுக்கு விடைகொடுக்க எண்ணி அவளைத் தன்னிடமே அழைத்துக் கொண்டான். எங்கிருந்தோ வந்த 'தோட்டா' அவளின் நெஞ்சை ஊடுருவி இதயத்தைத் தான் இலக்கு வைக்க வேண்டுமா?' என யாருமே வருந்தவில்லை. 'தொடர்ந்தும் அவள் வாழ்ந்து நாளுக்கு நாள் அணுவணுவாக வேதனையில் இறப்பதைவிட இதுவே மேல்' என்றார்கள். அவர்களின் வாய்கள் சுரேந்திரன் மாதவியைத் திட்டித் தீர்க்கவும் தவறவில்லை.

■

சுசித்ரா இறந்த செய்தியறிந்து சுரேந்திரன் பறந்து வந்தான். அவன் விழிகளில் ஒரு சொட்டுக் கண்ணீர்த்துளி. அவளுக்குச் செய்த துரோகங்களையும், இழைத்த கொடுமைகளையும் எண்ணி கழிவிரக்கம் கொண்டதால் பனித்தனவா? இல்லை விவாகரத்துச் சிக்கலின்றி இயற்கையாகவே அவள் விலக்கப்பட்டதால் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீர்த் துளிகளா அவை? எவராலுமே இனங்காண முடியவில்லை.

■

உயிருடனிருந்த சுசித்ராவை மனைவியென உறவு கொண்டாட வெறுத்தவன் உயிரற்ற உடல்மீது தாராளமாக உரிமை கொண்டாடினான். அவளது இழப்புக்காக நட்டஈடு கோரவும் அவன் தயங்கவில்லை. ஒரு தொகைப் பணமும் வந்தது. அவன் மனதிலும் மாற்றம் தெரிந்தது. மாதவி துணுக்குற்றாள். செய்வதறியாது திகைத்தாள். தன்மீதிருந்த அவனது நேசத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ள மிகவும் பிரயத்தனப்பட்டாள். இவளது நடவடிக்கைகள் அவனைக் கவர்வதற்குப் பதிலாக அவனுக்குக் கசப்பைத்தான் தந்தன.

இடமாற்றமாகிச் சென்று ஆறுமாதமாகியும் சுரேந்திரனிடமிருந்து மாதவிக்கு ஒரு கடிதம்கூட வரவில்லை. எவ்வித காரணமுமின்றி இடமாற்றம் பெற்றுச் சென்றவன் இவளுடனான தொடர்பையும் முழுதாகத் துண்டித்திருந்ததால் தன்னிடமிருந்து விலகுவதற்காகவே அவன் மாற்றலாகிச் சென்றிருக்கிறான் என்ற உண்மையை உணர மாதவிக்கு வெகுநாட்கள் பிடிக்கவில்லை. எல்லாமே சூன்யமாகி பேதலித்த வேளையில்தான் மற்றொரு இடியாக தந்தையிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது.

***மகள் மாதவிக்கு,***

*நலம். நாடலும் அதுவே. வெகு நாட்களாக உன்னிடமிருந்து மடல் எதுவும் வரவில்லையே? உடல் நலமில்லையா? எதற்கும் உடன் பதில் போடு. கண் காணாத ஊருக்குத் தனியே உன்னை வேலைக்கு அனுப்பிவிட்டு இங்கே நாம் தினமும் பயந்தபடியே தான் வாழ்கிறோம்.*

*இங்கு இப்போது இராணுவ நகர்வலம் இல்லை. முகாமுக்குள் முடக்கப்பட்டுள்ளனர். ஆதலால் ஊருக்குள் நேரடி மோதல்களும் இல்லை. ஆனாலும் ஆகாய, கடல் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன. அவை தாக்கி உயிர் பிரிந்துவிட்டால் மேல் போலுள்ளது. உன் தம்பிக்கும் ஷெல்பட்டு ஒரு கால் எடுக்கப்பட்டதால் நடமாட முடியாத நிலை. இவற்றையெல்லாம் உனக்கெழுதினால் மனவேதனைப்படுவாய் என்றுதான் இத்தனை நாளும் மறைத்து வந்தேன். ஊனங்களைவிட பட்டினிக் கொடுமையையும் தாங்க முடியவில்லை. ஆயுதத்தால்தான் நாம் ஏழ்மையை எதிர்கொண்டோம் என்பதல்ல; ஆரம்பத்திலேயே நமது குடும்பம் வறியதுதான். என் கூலிச் சம்பளத்தால் மூன்று வேளைக் கஞ்சியைத்தான் என்னால் ஊற்ற முடிந்தது. ஆனால் இப்போதைய போக்குவரத்துத் தடையாலும் பொருட்களின் தட்டுப்பாட்டாலும் ஒரு வேளைக் கஞ்சியே ஊற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளேன். இந்நிலையில் உன் தம்பியின் வைத்தியச் செலவு வேறு.*

*பெற்ற மகளிடம் பணம் கடன் கேட்கும் நிலை. உனது சம்பளத்தில் கை வைக்கக் கூடாது என்றுதான் எண்ணியிருந்தேன். திருமண வயதைத் தாண்டிக் கொண்டிருக்கும் நீ உனக்கென்று சேமிக்க வேண்டும். அப்பணத்தை மொத்தமாக எடுத்து உனக்கொரு வாழ்க்கையை அமைத்துத்தர வேண்டும் என்றெல்லாம் நான் கண்ட கனவுகளோ பல. ஆனால் பாழாய்ப்போன இந்தப் போராலே என் எதிர்பார்ப்புகளிலும் இடி விழுந்துவிட்டது.*

*அத்தியாவசியத் தேவைகள் போக மீதிப்பணத்தை அநாவசியமாகச் செலவு செய்யாது சேமித்து வைத்திருப்பாய்தானே? அவற்றை இங்கு வருபவர்கள் யாரிடமாவது கொடுத்துவிடு. மனது மிகவும் சங்கடப்படுகிறது. கடன் தந்தவர்களின் தொல்லையையும் தாங்க முடியவில்லை. வேறு வழி எதுவும் தெரியவில்லை. உடன் பணத்தை அனுப்பு. வேறு புதினமில்லை.*

*இப்படிக்கு*
*கையாலாகாத தந்தை.*

'கடவுளே இப்போது பணத்துக்கு என்ன செய்வது? சுரேந்திரனை எப்படியும் என் கணவனாக்கிவிட வேண்டும் என்றல்லவா அவரைக் கவர்வதற்காக புதிய ஆடைகள் அலங்காரப் பொருட்கள் என்றெல்லாம் செலவு செய்துவிட்டேன். ஒரு சதம் காசுகூட என் வசமில்லையே? எனது ஆடை அலங்காரங்களையும் அநாவசிய செலவுகளையும் அவதானித்தவர்களிடம் எப்படி குடும்பத்தில் கஷ்டம் என்று கூறி கடன் கேட்கமுடியும்?' பலதையும் நினைத்து மனம் குழம்பியவள் தந்தைக்கு எந்தவித பதில் மடலும் வரையத் தோன்றாது இருந்துவிட்டாள்.

சில வாரங்களில் நேரிலே வருகை தந்த தந்தையைக் கண்டதும் குற்ற உணர்வில் குறுகிப்போனாள். பணத்துக்கு என்ன பதில் சொல்வது என்று தடுமாறியவள் முடிவில் சுரேந்திரனுடனான தொடர்பு முதல் தற்போது தனக்கேற்பட்டிருக்கும் நிர்க்கதியான நிலைவரை சகலதையும் எடுத்துரைத்தபோது தந்தையோ எவ்வித சலனமுமில்லாது அமர்ந்திருந்தார்.

அவள் ஓய்ந்ததும் "எல்லாம் எனக்குத் தெரியும். மாதவி என்று நாமம் சூட்டியவனே நான்தான். அன்றைய மாதவி, கோவலன்-கண்ணகியின் வாழ்க்கையை சீரழித்தாள். இன்று நீ...! மாதவியர் எல்லோருமே குடும்பத்தை வெட்டிச் சரிக்கும் கோடரிகள்தான் போலும். ஆனாலும் பெற்ற நெஞ்சு பரிதவிக்கிறதே? அதனால்தான் நேரிலே வந்தேன். நான் வந்தது உன் பணத்தை நாடியல்ல. உனக்கொரு வாழ்வைத் தேடி. உன் சுரேந்திரனுக்கும் நம்மூர் சுசீலாவுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. உனக்கு இச்செய்தி கிட்டியிருக்க நியாயமில்லை. நீ செய்த துரோகத்துக்கு இதுதான் தண்டனையாக அமைய முடியும். சுசித்ராவை எண்ணும்போது இதுதான் சரியான தீர்வு என்று ஒதுங்கச் சொல்கிறது ஒரு மனம். அடுத்த கணம் உன்னைக் கண்முன் கொண்டுவந்து உன் உதிரத்தால் உருவாக்கப்பட்ட உன் மகளின் எதிர்காலத்தை சிந்தித்துப் பார் என்று நச்சரிக்கிறது இன்னொரு மனம். பெற்றவன் நான் என்ன செய்வேன்? ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இத்தகராறில் நான் தலையிடப் போவதில்லை. என்னால் உனக்கொரு வாழ்க்கையை அமைத்துத்தர முடியாது என்றுதானே நீயாக ஒரு வாழ்க்கையைத் தேட முயற்சி செய்தாய்? அதுவும் மனிதாபிமானமற்ற முறையில். நீ என்ன செய்வாயோ எனக்குத் தெரியாது. நான் நாளை ஊருக்குத் திரும்பி விடுவேன்." அத்துடன் அவர்களின் அன்றைய சம்பாஷனை முடிவுற்றது.

பணமின்றி மனக் கசப்புடன் சென்றுவிட்ட தந்தையை எண்ணி கவலைப்படக் கூடத் தோன்றவில்லை மாதவிக்கு. சுரேந்திரன் சுசீலாவின் திருமணத்தை எப்படி தடுத்து நிறுத்தலாம் என்ற சிந்தனையிலேயே இலயித்திருந்தவள் ஒரு முடிவுக்கு வந்தவளாக தனக்கும் சுரேந்திரனுக்கும் இடையிலான உறவை விபரித்து இவ்வுறவை அனைவரும் அறிந்திருப்பதால் சுரேந்திரனை விட்டால் இனிமேல் தனக்கொரு வாழ்வு அமைவது கஷ்டம் என்றும், அமைத்துத் தரக்கூடிய வகையில் தன் குடும்பம் இல்லை என்பதையும் மிகவும் உருக்கமாக மடலில் வரைந்து சுசீலாவின் முகவரிக்கு தபாலிலிட்டாள். அதன்பின்தான் மாதவியின் மனம் சமாதானமடைந்தது.

மறுவாரமே சுசீலா பதில் மடல் போட்டிருந்தாள்.

*"பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டநாள் முதல் மனதால் அவருடன் வாழ ஆரம்பித்துவிட்டேன். கணவராக அவரை வரித்துக் கொண்டுவிட்டேன். இனி எப்படி ஒதுங்க முடியும்? விரும்பினால் உன் காதலரிடம் கேட்க வேண்டியதுதானே? அவரே உன்மீது இரக்கம் கொள்ளாது உன்னைப் பிரிய விரும்பும் போது நான் மட்டும் எதற்காக உன்மீது இரங்கவேண்டும்? என்னிடம் நெருங்கி வந்துள்ள சீதேவியை எட்டி உதைக்க வேண்டும்? எனக்கு என் வாழ்க்கைதான் பெரிது."*

உச்சந்தலையில் யாரோ சம்மட்டி கொண்டு அடித்த உணர்வு. எங்கேயோ பரிச்சயமான வாசகம்.

தன் உயிர்த் தோழியான சுசீலாவிடம் சுசித்திரா தினமும் தன் வாழ்க்கையின் துயரங்களை சொல்லி அழும்போது மாதவியால் கருணையே சிறு துளியளவுமின்றி பேசப்பட்ட வாக்கியங்களையும் கூறியிருந்ததால் அதை மனதில் வைத்தே சுசிலா இவ்வாறு எழுதியுள்ளாள் என்பது மாதவிக்குத் தெரிய நியாயமில்லைதான்.

மாதவி இப்போது ஒரு நடைப்பிணம். ■

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# மருந்தொன்று தா மனமே

தருவது

## ரசிகன்

### இலக்கிய நயம்

**வா**ள் உராயும் சத்தம் அந்தப் பகுதியை போர் நடக்கும் பகுதிபோலாக்கிக் கொண்டிருந்தது.

கட்டுமஸ்தான உடலோடும், பயிற்சியாலும், வாலிப வயதுத் துடிப்பால் திணவெடுத்த தோள்களோடும், அந்த தோள்களின் வலிமைக்கு சவால் விடுவது போல புடைத்து நிற்கும் புஜங்களும், அந்த புஜங்களோடு போட்டியிடுவது போல பருத்தும், இறுகியும் திரண்ட தொடைகளும் கொண்ட காளையர் பலர் இருவர் இருவராய் தமக்குள் வாள்பிடித்து பயிற்சியில் இறங்கியிருந்தனர்.

மறத்தாலும், அறத்தாலும், பரந்து கிடக்கும் வளத்தாலும், இங்கு வாழும் மக்களின் சீர்மிகு குணத்தாலும், உழைத்து வாழ்வோரின் செல்வச் செருக்காலும், ஆண்களும், பெண்களும் காதல் நெறி வளர்த்து கூடி மகிழ்ந்து வாழும் மிடுக்காலும் நிமிர்ந்து நிற்கும் நாட்டுக்கு ஒரு கேடு வந்தால்- அந்நியத் துடுக்கரால் கெடுதியான சூது வந்தால்- வைரம் பாய்ந்த தோள்களுக்கும் வேலை வரும். அவர்தம் கை சுழற்றும் வீரவாள்களுக்கும் விருந்துச் சுவை கிடைக்கும்.

பார் புகழ, கார் மழைபோல் விடாது பொழியும் பெருமை சூழ வாழும் நாட்டை வஞ்சகத்தால்- கொஞ்சிப்பேசி குழி பறிக்கும் சாகசத்தால்- அந்நியர்கள் அபகரிக்க வந்துவிட்டால் வாலிப மலைகள் எழுந்து வழி மறித்து அவர்களுக்கு தோல்விக் குழி கொடுப்பது மெய்.

ரத்னபாண்டியன் மனதுக்குள் மகிழ்வு கொண்டான்.

அந்தப் பாசறைக்கு அவனே தலைவன்; அவனே பயிற்சியாளன்; அங்கு வந்து போர் வித்தை கற்கும் காளையர்க்கு அவனே ஆசான்; அவனே தோழன்.

"நெஞ்சின் மையம் நோக்கி வரும் எதிரியின் வாளை எப்படித் தடுக்கலாம்? கண் கட்டி வித்தைபோல எதிரியின் வாளை, அவன் எதிர்பாராத வேளையில் எப்படி காற்றில் பறக்கவிடலாம்?"

பொறுமையாய், நட்பாய், சினமில்லாமல் வித்தை கற்றுக்கொடுக்க, ஆசான்மீது மதிப்பு உயரும்.

"தோழரே! வெஞ்சமர் களத்தில் கடும் சினம் உமது கண்ணை மறைக்கும். சமர்க்கள மேட்டில் வெற்றிக்கனியினைச் சுவைக்க சினம் ஒரு தடையென அறிவீர்."

தம்பி என்று அழைத்தால் ஒரு மரியாதை இடைவெளி ஏற்படும்.

அண்ணா என்று அழைத்தால் பயிலுபவனுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை வரும். தம்பியிடம் தெரியாதது கேட்கிறோமே என்று வெட்கம் எழுதல் கூடும்.

தோழரே என்பது எனக்கு நீ உனக்கு நான் சமமானவர்கள் என்று உணர்த்தும். பரஸ்பர மதித்தல் போதும். தெளிவு வரும்வரை விவாதிக்க முடியும். தெரியாதது கேட்டு அறிவதற்கு சங்கடம் வருதல் தவிர்க்கப்படுதல் முடியும்.

குறிக்கோள் ஒன்றால் இணைந்ததை நண்பரே என்ற சொல்லைவிட தோழரே என்பது உணர்த்தியபடி இருக்கும்.

எனவே-ரத்னபாண்டியன் 'தோழரே' என்றே தன்னிடம் பயில்பவர்களை அழைத்தான். தோழரே என்றே தானும் அழைக்கப்படுவதை விரும்பினான்.

"கோபம் மனித இயல்பு. வீரனுக்கு அதுவும் ஒரு பலம்தானே தோழரே. பின் எதற்கு சினம் தூக்கி வீச என்று சொல்கிறீர்கள்?"

கேள்வி எழுப்பியவனை ரத்னபாண்டியன் அமைதியாகப் பார்த்து புன்னகைத்தான்.

"கோபம் வராதவன் கோழை. கோபத்தை உள்ளே அடக்கி மனதில் வன்மம் வளர்ப்பவன் கையாலாகாதவன்- பேடி.. ஆயினும் தோழா! வரம்பில்லா நீர் வயல் செழிக்க உதவாது. பொறுப்பில்லாச் சினம் கடமைச் சிறப்பு உயர உதவாது. உணர்ச்சிகள் உள்ளவனே மனிதன். அந்த உணர்ச்சிகளை ஆளத் தெரிந்தவனே மனிதரில் சிறந்தோன்."

"புரிகிறது தோழரே! எனினும் சிறு பொறியாய் ஒரு கேள்வி."

"கேள் தோழா! கேள்விகள் தேடலை வளர்க்கும். தேடல் அறிவை உயர்த்தும்."

கேள்வி கேட்டவன் ரத்னபாண்டியனை மரியாதையோடு நோக்கினான்.

"தோழரே! களத்தில் கொடிய எதிரி கண்ணில் படும்போது, அவன் சூதும், சூழ்ச்சியும், பொய்யும், புரட்டும், பொல்லாத கபடும் அறிந்தவன் ஆவேசம் கொண்டு பாய்வது இயல்புதானே?"

ரத்னபாண்டியன் தன் அடர்ந்த மீசையை விரல்களால் வருடிக்கொண்டான். கூர்மையான விழிகளால் தன் மாணவனை நோக்கினான்.

நிதானமாக உதடுகள் அசையப் பேசினான்.

"கொடியவர்மீது கோபம் எரிதலாக இதயத்தில் எழுவது இயல்புதான் தோழா! எனினும், அதிக ஆவேசம் உன் பலத்தில் பாதியை பங்குபோட்டுக்கொள்ளும். சக்தியில் பாதி விரயமாக எதிரிக்கு வசதி அதிகமாகும். எனவே என் தோழா! எதுவும் அளவாய் இருப்பது சிறப்பு. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு. ஆத்திரம் கூட அப்படித் தானடா. கோபம் இருக்கலாம். அது ஒரு திரையாய், பெரிதாய் விரிந்தால் வெற்றிக்கு தடையாய் மாறவும் முடியும்."

புரிந்ததற்கு அடையாளமாய் முகத்தில் திருப்தி காட்டி மாணவன் விலக ரத்னபாண்டியன் நீராடப் புறப்பட்டான்.

■

"**அ**ப்படியா சொன்னார்? அது சரிதான்."

என்றாள் ராதா.

"அவர் மிக நல்லவர் அக்கா. எத்தனை பொறுமை. எதிலும் தெளிவு."

தன் குருவின் பெருமை சொல்லிப் புகழ்ந்தான் ரத்னபாண்டியனிடம் விளக்கம் பெற்றவன்.

தன் தம்பியால் புகழப்படுபவன் தன்னால் விரும்பப்படுபவனாக இருந்ததில் புகழ்ச்சியெல்லாம் தனக்கே போல அக மகிழ்ந்து போனாள் அழகான ராதா.

"என்ன ராதா இது? வழியில் மறித்து வம்பு பண்ணுகிறாய்?"

"நான் எங்கே வம்பு பண்ணுகிறேன்? என் மனதுக்கு பிடித்த உங்கள் மீது அன்பு கொள்ளுகிறேன். தவறா குருவே?"

ரத்னபாண்டியன் அவள் விழிகளை நேராகப் பார்ப்பதை தவிர்த்து, எதிரேயிருந்த மரக்கிளையில் தாவிச் செல்லும் அணிலைப் பார்த்தபடி பேசினான்;

"யார் குரு? யாருக்கு குரு? முதலில் குறுக்கே நில்லாதே ராதா விலகு."

"பொறுக்குமா இந்த அநியாயம்? அடுக்குமா இந்தப் பேச்சு?"

உரத்துக் கூவினாள். ரத்னபாண்டியன் தம்மை யாரும் கவனிக்கப் போகிறார்களே என்று சங்கடம் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டான்.

"இப்போது ஏன் கூவுகிறாய்?"

"பின்னே என்னவாம்? உங்களை நம்பியிருப்பவளை நந்தி என நினைத்து குறுக்கே நில்லாதே என்று நிந்திப்பது நியாயமா குருவே?"

வாதிட்டால் தப்பமுடியாது. மாணவர்கள் நீராட வரும் நேரம். ரத்னபாண்டியன் அவசரப்பட்டான்.

"ராதா எனக்கு பணிகள் அதிகம். தயவு செய்து வழிவிடு."

"இதுவும் ஒரு பணிதான்."

"எது?"

"எனக்குக் கற்றுத் தருவது. தெரியாத கேள்விகளுக்கு சரியான பதில் சொல்லும் குருவே, இந்த ராதாவின் கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் நழுவி ஓடலாமா?"

"வம்பான கேள்விகளுக்கு நான் வாயால் பதில் சொல்வதில்லை."

"வாளால்தான் சொல்வீர்களோ?"

"சரியாகத்தான் சொல்கிறாய்!"

"காதலும் ஒரு போர்க்களம்தான் குருவே! அங்கும் மோதல் உண்டு. பலம் காட்டும் தருணங்கள் உண்டு. திணற வைக்கும் சாகசங்களும் நிறைய உண்டு. வெற்றி தோல்விக்கும் வழியும் உண்டு."

ரத்னபாண்டியனுக்கு அவள் சொல்லும் பொருள் புரியாமல் இல்லை. எனினும் புரியாததுபோல நடித்தான்.

"நீ சொல்லும் களம் புற்றி எனக்குத் தெரியாது. அந்த களத்திலே கால்வைக்க எனக்கு பிரியமும் கிடையாது."

ராதா விழிகளில் விஷமம் காட்டிச் சிரித்தாள்.

"கனி விரும்பாத உதடுகள் உண்டோ? கரும்புச் சுவை நாடாத எறும்புகள் இருக்க முடியுமோ? பலாச்சுளையில் மொய்க்க நினைக்காத ஈக்கள் ஏங்குமுளதோ? பூவின் தேனை புசிக்க மறுக்கும் வண்டுகள் கண்டதுண்டோ? எழில் அழகுப் பெண்களை இரசிக்காத வாலிப விழிகள் பார்த்ததுண்டோ? பொய் எதற்கு குருவே? என்மீது உங்கள் மனம் ஒரு வண்டாய் மொய்ப்பது மெய்! அதுமறைத்து உதட்டிலே இருந்து வரும் வார்த்தைகள் மாபெரும் பொய்."

ரத்னபாண்டியன் வாயடைத்துப்போய் நின்றான்.

"போதிக்கத் தெரிந்த நீங்கள் பொய் சொல்லி சாதிக்கவும் கற்று வைத்திருக்கிறீர்கள்."

ரத்னபாண்டியன் அதற்கும் பதில் சொல்லவில்லை.

அவளை ஆழமாக ஒரு பார்வை பார்த்தான்.

பின், விலகி நடக்கத் தொடங்கினான். அவன் தன்னை நேசிப்பது நிச்சயம் என்றுணர்ந்து ராதா மகிழ்ச்சியால் துள்ளினாள்.



அவன் வீசிய பார்வை இப்போதும் அவள் நெஞ்சின் மையத்தில் ஆணியடித்து நின்று வருடுகிறது- வருத்துகிறது. ஒருபுறம் நெஞ்சு இனிக்கிறது. மறுபுறம் நெஞ்சு வலிக்கிறது. இந்த பொல்லாத காதல் ஒரு தீராத நோய் போலன்றோ இருக்கிறது!

எதற்கெல்லாமோ மருந்து சொல்லும் மூலிகை வைத்தியர்கள்கூட இதற்கு ஒரு மருந்தை சொல்லமாட்டார்களா என்று நினைத்தாள் ராதா.

'மருத்துவரால்தான் முடியாது மனதே-மனதே நீ ஒரு மருந்து சொல்ல மாட்டாயா?' என்று தன் மனதிடம் கேட்டாள் ராதா.

"என்ன அக்கா, நீ இங்கிருந்தபடி எங்கோ போய்விட்டாயே?"

என்றான் தம்பி. ராதாவின் நினைவு கலைந்தது.

"ஒன்றுமில்லையடா நீ சாப்பிடு."

என்றாள். தம்பி சிரித்தான்.

"நான் சாப்பிட்டு முடித்து கை அலம்பியும் ஆச்சுது அக்கா." என்றான்.

'அய்யய்யோ இந்த பொல்லாத நோய் என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டதே' என்று நினைத்தாள் ராதா. தம்பி விலகிப் போனான். போகும்போது அவளை வினோதமாக பார்த்தபடிதான் போனான்.

ராதா தன் மனதை கடிந்து மீண்டும் மருந்தொன்று கேட்டாள்.

பாவம் ராதா. காதல் நோயில் அவதிப்படுகிறவர்கள் மனதிடம் மருந்து கேட்பதைத்தானே திருவள்ளுவரும் சொல்லிப் போனார்.

**"நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே**
**எனைத் தொன்றும்**
**எவ்வ நோய் தீர்க்கும் மருந்து"**

**குறள்- 1241- அதிகாரம்-125**

## குறுக்கெழுத்துப் போட்டி இல-59

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | | |
| | ■ | 3 | ■ | | ■ | 4 |
| 5 | | | ■ | 6 | 7 | |
| | ■ | | 8 | ■ | | |
| 9 | 10 | | | ■ | | |
| ■ | | ■ | 11 | | ■ | |
| 12 | | | | | ■ | |

### இடமிருந்து வலம்

1. காட்டு மிருகங்கள் இவனைக்கண்டால் அஞ்சும்.
2. ஒரு சிலர்தான் இப்படியாக முடியும்.
5. சூழலை அறிந்துகொள்ள இதுவும் மிக அவசியம்.
6. இராமனால் தன் தம்பி போல் நேசிக்கப்பட்டவன்.
9. இப்போது இது பற்றித்தான் இங்கே பேச்சு. (குழம்பியிருக்கிறது)
11. இதை மிரள வைத்தால் அவ்வளவுதான், காடு தாங்காது.
12. சீதனம் இப்படியும் அழைக்கப்படுகிறது.

### மேலிருந்து கீழ்

1. வெற்றிபெற்றால் பிரதிநிதி ஆகிவிடுவார்..
2. திசைகளில் ஒன்று.
3. சிலருக்கு இது இல்லாவிட்டால் சோறு உண்ணப் பிடிக்காது.
4. கோவில்களில் இது நடக்கும்போது கூட்டமும் அதிகமாக இருக்கும்.
7. சிவபூசை நேரத்தில் இவர் புகுந்தால் தொல்லைதான் என்று ஒரு பழமொழி உண்டு.
8. பிரதான போக்குவரத்துச் சாலைகளில் இவருக்கென்று தனியான ஒரு பகுதியே உண்டு.
10. இதுவும் களைப்புத் தீர்க்கும்.

***இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 30.07.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:***

***குறுக்கெழுத்துப் போட்டி இல-59***
***தினமுரசு வாரமலர்***
***த.பெ.இல. 1772***
***கொழும்பு.***

*சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.*

### குறுக்கெழுத்துப் போட்டி இல-57க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கு | றி | க் | 2 கோ | ள் | ■ | 3 க |
| ங் | ■ | 4 வி | ஷ | ம் | ■ | தி |
| கு | ■ | ய | ம் | ■ | 5 நா | ரை |
| 6 ம | ல | ர் | ■ | 7 கு | ண | ■ |
| ம் | ■ | 8 வை | க் | கோ | ல் | ■ |
| ■ | 9 மா | ■ | ■ | ல | ■ | 10 பா |
| 11 ப | ரி | கா | ச | ம் | ■ | ல் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.57இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. ஏ. யேசுநாதன் மொரட்டுவை.
2. க.சந்தணகுமாரி மஸ்கெலியா.
3. கே. சாந்திகுமார் நீர்கொழும்பு.
4. செல்வி. பாத்திமா பர்ஹத் ஏறாவூர்.
5. ஆர். இந்திராணி வவுனியா.
6. மு. மரியநாயகம் மன்னார்.
7. வி. யோகேந்திரம் நுவரெலியா.
8. செ. ஈஸ்வரி மட்டக்களப்பு.
9. கோ. சகுந்தலாதேவி கொழும்பு-10.
10. எம்.பி. அக்கிலா பானு வாழைச்சேனை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

**நாடெங்கும் தேர்தல் திருவிழா-உங்கள் முரசும் வரும் வாரம் சூடான தேர்தல் செய்திகள் மற்றும் அலசல்களோடு வந்து சேரும்.**



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

**இவ்வாரம் (24.07.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

# மகாபாரதம்

அங்கம் 38

1994 ரூபா 9/00 மலர் 61

காலத்தின் குரல்: கொந்தளிக்கும் எரிமலையை மண்ணைக்கொட்டி மூடிவிட முடியுமா? நாட்டைப் பிரித்துவிட்டால் பிரச்சனை தீர்ந்து விடுமா? இல்லையே! காண்டவப் பிரஸ்தத்தை தருவதாக திருதராட்டினன் கூறியதை அமைதி கருதி யுதிஷ்டிரன் ஏற்றுக்கொண்டான். காண்டவ பிரஸ்தம் அஸ்தினாபுர ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியானாலும் குன்றும் குழியும் நிறைந்த-எதற்கும் உதவாத இடம். அசுரர்களும், நாகர்களும் நிறைந்த பிரதேசம்-யமுனையின் மேற்குக் கரையில் உள்ளது. இப்பிரதேசத்தின் குறைபாடு களுக்காகவே இது ஒதுக்கப்பட்டு யமுனையின் மறுகரையில் தலைநகரம் அமைக்கப்பட்டது.

திருதராட்டிரன் நாட்டைப் பிரிப்பதில் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை. சகுனியின் ஆலோசனைகளுடன்தான் திட்டத்தினை வகுத்துள்ளான். பாதி இராஜ்ஜியம் பாண்டவர்களுக்குக் கொடுக் கப்பட்டமையினால்தான் அவர்களுக்கு அநீதி இழைக்கவில்லை என்று மக்களை சலபமாக திருதராட்டிரன் நம்பவைத்து விடலாம். ஆனால் இந்த அநீதியினை யுதிஷ்டிரன் தவிர்ந்த ஏனைய சகோதரர் களால் ஏற்கமுடியவில்லை.

-காட்சி தொடக்கம்-

கிருஷ்ணனுடன் பாண்டவர்களும் குந்தியும் உரையாடுகின்றனர்.

**பீமன்:** அண்ணா! பெரியப்பா திருதராட்டினர் சுவையாகப் பேசி தன் மகன் துரியோதனனுக்கு சாதகமாக நாட்டின் சிறப்பான பகுதியை எடுத்துக்கொண்டார்.

**யுதிஷ்:** தம்பி பீமா! அவர் நமது குடும்பத்தின் முதல்வர். அன்னாருக்கெதிராக இத்தகைய வார்த்தைகளை உதிர்த்தல் நல்லதல்ல.

**சகா:** பெரியவர்களும் பெருந்தன்மையுடன் நடக்கலாம் அல்லவா?

**குந்தி:** சகாதேவா! மூத்தவர்களிடம் இவ்வாறா பேசுவது.....?

**சகா:** மன்னியுங்கள் அம்மா. ஆனால்.....!

**அர்ச்:** அம்மாவிடம் எதிர்த்துப் பேசக்கூடாது சகாதேவா!

**சகா:** எதிர்த்துப்பேசவில்லை அண்ணா! சந்தேகம் தெளிய விரும்புகிறேன். எமது அபிப்பிராயத்தை அறியாமல் பெரியப்பா நாட்டை எப்படிப் பிரிக்க முடியும்?

**குந்தி:** யுதிஷ்டிரனுடைய தீர்மானத்துக்கு நீ ஒப்புதலளிக்காவிட்டால்.... நான்...!

**கிருஷ்:** பொறுங்கள் அத்தை. ஆத்திரத்தில் உதிரும் வார்த்தைகள் அசம்பாவிதங் களுக்கு இடம் தரலாம்...!

**குந்தி:** வாசுதேவ குமாரா! இளையவனான இவன் தன் அண்ணனிடம் இவ்வாறு பேசலாமா?

**அர்ச்:** அண்ணனின் முடிவை அவமதிப்பது நோக்கமல்ல அம்மா?

**கிருஷ்:** ஒவ்வொருத்தர் உள்ளத்திலுள்ளதை வெளிப்படையாகக் கூறுவது குடும்ப ஐக்கியத்தைக் காக்க உதவும். நகுலா! உனது எண்ணத்தைக் கூறு!

**நகுல:** அஸ்தினாபுரியின் அரியணைக்கு வாரிசு அண்ணன் யுதிஷ்டிரனே என்பது ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவு. அப்போ நாட்டை பெரியப்பா ஏன் பிரிக்க முற்பட வேண்டும்...?

**குந்தி:** மகனே நகுலா! பிதாமகர் பீஷ்மரும் இப்பிரிவினைக்கு சம்மதமளித்துள்ளார். இந்த உலகமே உங்களுக்கு எதிராகத் திரண்டாலும் அன்னார் உங்களுக்கு மாறாக மாட்டார் என்பது தெரியுமல்லவா?

**அர்ச்:** பிதாமகரின் கருணை எங்கள் பால்தானுள்ளது என்பது உண்மைதான். பிரிவினைக்கு அவர் அனுமதி இருந்தி ருக்கலாம். ஆனால், அஸ்தினாபுரி நகரையும் செழிப்பான பகுதிகளையும் துரியோதனனுக்கும், காடுமேடும் கட்டாந் தரையுமான காண்டவ பிரஸ்தத்தை எங்களுக்கும் தர அவர் ஒப்புக் கொண்டி ருக்கவேமாட்டார். துரியோதனன் இளையவனாக இருந்தும் அஸ்தினா புரியின் சிறப்பான பிரதேசம் அவனுக் கேன் அளிக்கப்பட்டது என்பதனை தாத்தாவிடம் ஏன் கேட்டு அறியலாகாது? இந்தப் பிரிவினையால் எங்களுக்கு என்ன நன்மை?

**கிருஷ்:** நான் இவ்வினாவுக்கு விடை கூறட்டுமா? திருதராட்டினரால் உங்களுக்கு அளிக்கப் பட்டது உங்கள் கர்மபூமி?

பின்னணிப்பாடல்:

**கடமையுணர்வுடன் காரியமாற்றும்**
**கண்ணியவானே கர்ம வீரனாம்.**
**எண்ணிய கருமங்களெளிதினிலெய்திட**
**உண்மையு முழைப்பும் உறுதுணையாகுமே.**

-காட்சி மாற்றம்-

யுதிஷ்டிரன் அரண்மனைக்கு பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் வந்து வணங்குகின்றனர்.

**அர்ச்:** அண்ணா! அம்மாவின் முன்னிலையில் கூற முடியாத முக்கியமான சம்பவம் எதையும் கூறவா எங்களை அழைத்தீர்கள்?

**யுதிஷ்:** ஆமாம்! எனது தம்பிமார் என்மீது கோபமாக இருக்கிறார்கள் என்பதை அறிந்தால் அம்மா விசனப்படு வாரல்லவா?

**சகா:** அண்ணா! நாங்கள் தங்களிடம் கோபப் படவில்லை அண்ணா. பெரியப்பாவின் தீர்மானத்தால் குழப்பமடைந்திருக்கி றோம், தங்கள் இராஜ்ஜியத்தின் சிறப்பான பகுதியை அபகரித்து சகோதரர் துரியோதனனுக்குக் கொடுக்கிறாரே!

**யுதிஷ்:** துரியோதனன் சகோதரன் என்று கொள்ளும் நீங்கள், அபகரித்துவிட்டார் என்று கூறுவது சரியா? துரியோதனனும் நம்மில் ஒருவன்தானே!

**நகுல:** அரக்குமாளிகை சம்பவத்தின் பின்னர் துரியோதனனை எம்மவன் என்று எவ்வாறு ஏற்க முடியும்? அஸ்தினாபுரி நகர் எம் தந்தையாருடைய தலைநகரம்! அது எமது உரிமையல்லவா?

**யுதிஷ்:** ஒவ்வொரு உரிமையும் கடமைகளைப் பின்னணியாகக் கொண்டுள்ளது. மக்கள் அமைதியாக வாழ வழி காட்டுவதே மன்னவனின் கடமை. அஸ்தினாபுர மக்கள் அமைதியாக இருப்பதற்காகவே அந்நாட்டை விட்டு காண்டவ பிரஸ்தம் செல்லத் தீர் மானித்தேன்.

**அர்ச்:** அண்ணா! காண்டவ பிரஸ்தத்தின் மன்னனாக தாங்கள் முடி சூடியதும் அஸ்தினாபுரத் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிடுமல்லவா?

**யுதிஷ்:** அர்ச்சுனா! தாய்க்கும் குழந்தைக்கு மிடையிலுள்ள பொக்குள்கொடி துண்டிக் கப்பட்டதும் இருவருறவும் நீங்கிவிடு வதுண்டா? சிறிதுகாலப் பிரிவும் எதிர்கால உறவுக்கு உரமூட்டலாமல்லவா?

**பீமன்:** அண்ணா! தங்கள் தீர்மானத்துக்கு நாங்கள் எவரும் எதிர்ப்பில்லை அண்ணா.

**யுதிஷ்:** எனது தீர்மானத்துக்கு மாறாக நீங்கள் செல்லமாட்டீர்கள் என்பதை அறிவேன். சகோதரர்களாகிய நீங்கள் நால்வருமின்றி தனியாக நான் எதையும் சாதிக்க முடியாது. உங்கள் ஒத்துழைப்புடன் காண்டவ பிரஸ்தத்தை இந்திரனே பொறாமைப்படும் அளவு இந்திர பிரஸ்த மாக்கிவிடுவோம். அஸ்தினாபுர அரியணை எனக்கு வேண்டாம். தம்பி மாராகிய நீங்களேதான் எனக்கு வேண்டும். அம்மாவைப் பொறுத்தவரை, அவரும் அஸ்தினாபுரத்தை விரும்ப வில்லை. கிருஷ்ணனே கூறினாரல்லவா இது நமது கர்மபூமி என்று! இதனை தேவ லோகமாக மாற்ற நீங்கள் நால்வரும் எனக்குப் பக்கபலமாக இருங்கள். பயத்தினால் நான் இந்த முடிவுக்கு வரவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

யுத்தம் வேண்டாம். யுத்தம் நடந்தால் கங்கை நதியைவிட ஆழமும் அகலமுமான இரத்த ஆறு ஓடும். இங்கு சகுனி மாமாவின் சூழ்ச்சிகள் தொடரும். அமைதி இருக்காது, அழிவுதான் அதிகரிக்கும். அங்கோ நாம் அமைதியுடன் அபிவிருத்தி காணலாம். அஸ்தினாபுரியின் அத்தி வாரத்தை அழிவுச் செல்கள் அரிக்கத் தொடங்கிவிட்டன. கிருஷ்ணனே மதுராவை விடுத்து துவாரகா செல்லவில்லையா? அதுபோல் நாமும் காண்டவ வனத்தை சொர்க்க பூமியாக்குவோம். ஆனால் சகுனி மாமாதான் அங்கும் நம் அமைதிக்கு பங்கம் விளைவிக்கக் கருதக்கூடும்.

-காட்சி மாற்றம்-

திருதராட்டினர் அரண்மனை– அமைதியற்று மன்னர் உலாவ காந்தாரி படுத்திருக்கிறார்.

பின்னணிப்பாடல்:

**கவுரவ குலமதன் திருவளர் நாடு**
**காரிருள் சூழ்ந்தே களையினை இழந்தது**
**அரியவ ரெவரோ அளித்திட்ட சாபமோ**
**இரு கூறாகியே பிரிபட நேர்ந்தது.**

**காந்தா:** பிரபு! நாட்டைப் பிரிப்பதால் நலனுண்டாகும் என்பதனால் பிரிவினை முடிந்துவிட்டது. பின்னர் ஏன் இன்னும் தூங்காதிருக்கிறீர்கள்?

**திருத:** தூக்கம் எனது அடிமையல்ல-என் கட்டளைப்படி நடப்பதற்கு. அது ஒரு சுதந்திரப்பறவை போன்றது. அது என்னை அணுகி பலகாலமாகிவிட்டதே!

**காந்:** காரணம் என்ன என்பதுதான் எனது கேள்வி பிரபு!

**திருத:** என்னிடம் இதற்கான சரியான பதி லில்லை. நான் என்னையே போர்க்கள மாக்கிக்கொண்டேன்.

**காந்:** தங்கள் வார்த்தைகளிலிருந்து பார்க்கப் போனால், ஏதோ ஒரு சம்பவத்தை என்னிடமிருந்து மறைத்து வைத்து விட்டீர்கள் போல் தோன்றுகிறது.

**திருத:** உண்மைதான். பல விடயங்களை நான் உன்னுடன் பகிர்ந்து கொள்ள வில்லை. வெறும் இருளைத் தவிர இந்நாடு உனக்கு எதனைத் தந்தது? ஆகவே உனக்கு மென்மேலும் துன்பத்தைத்தர நான் விரும்பவில்லை அன்பே!

**காந்தா:** அப்போ நீங்கள் எனக்கு நியாயம் அளிக்கவில்லை!

**திருத:** இருக்கலாம். நாட்டைப் பிரித்ததில் உனக்கு மகிழ்ச்சி உண்டா?

**காந்:** இல்லை. துரியோதனனின் நச்சரிப்பினால் அவ்வாறு நடந்துள்ளீர்கள்!

**திருத:** காந்தாரி! ஒன்றை மறந்துவிடாதே! துரியோதனன் என் அபிலாசைகளின் பிரதிபிம்பம். நான் அடையமுடியாத வற்றை என்மூலம் என் மகன் அடைய ஆசைப்படுகிறான். இந்த அரியாசனம் அவனுக்கும் உரித்தானதே! அதேபோல் யுதிஷ்டிரனுக்கும் இதில் உரிமை உண்டு. ஆனால் நான் இருவருக்குமே அநீதி இழைத்துவிட்டேனே!

-காட்சி மாற்றம்-

சகுனி பகடையுடன் காணப்படுகிறார். துரியோதனனும் துச்சாதனனும் வருகின்றனர்.

**துரியோ:** மாமா! தங்கள் நெற்றியில் சிந்தனைக் கீறல்கள் தென்படுகின்றனவே!

**துச்சா:** பாண்டவர்களின் தலையிடி தொலைந்துவிட்டதல்லவா?

**சகுனி:** உண்மைதான்! அதனால் பாதி இராஜ்ஜியமே பறிபோய்விட்டதே!

**துரி:** மாமா! நிலமை அவ்வாறாகிவிட்டது. அப்பா எனக்காகவேதான் பாடுபடுகிறார். ஆனால் பாண்டவர்பாலும் அவர் பாசம் வைத்துள்ளார். சின்னம்மா குந்தியைக் கண்டதும் வாயடைத்து விடுகிறது அவருக்கு. ஆகவே பாதி நாட்டை ஏற்பதே நல்லதெனப் படுகிறது. மாமா! பரந்து கிடக்கும் உலகின்மீது படையெடுத்து நாட்டின் எல்லையினை விரிவுபடுத்த என்னால் முடியும்!

**சகுனி:** துரியோதனா! உனது வீரத்தில் பூரண நம்பிக்கை எனக்கு உண்டு. இருப்பினும் இழந்த பகுதியினை மீண்டும் பெறும்வரை எனது இதயத்தில் பெரும் பாரம் அழுத்திக் கொண்டேயிருக்கும். அதனை மீட்டெடுக்க யோசித்து முடிவெடுங்கள்.

**துச்சா:** அண்ணன் யுதிஷ்டிரன் இன்னும் முடிசூடவில்லை. அதற்குள் அவரை அகற்றத் திட்டமிடுகிறீர்களே!

**சகுனி:** நாளை நடைபெறப்போவதை கருத்தில் கொண்டு இன்றே திட்டம் தீட்டினால் சிலகாலம் ஓய்வாக இருக்கலாம் அல்லவா? ஆனால் யாதவர்களை வெல்வதுதான் மிக முக்கியம்.

**துச்சா:** இதில் யாதவர்களுக்கு என்ன சம்பந்தம் மாமா?

**சகுனி:** துவாரகை மன்னன் தந்திரசாலி. அவனை மடக்கமுடியாது. ஆகவே பலராமனை வசப்படுத்திவிடலாம். விருந்தோம்பல்மூலம் பலராமனை உன்னுடன் அணைத்துக்கொள். உணவு மூலம் அவனை ஆட்கொண்டுவிடலாம். கூடுமானவரை பணிவுடன் நடந்து அவனுடைய நட்பினை சம்பாதித்துக் கொள்.

**துரி:** மாமா! நான் எவ்வளவும் பணிந்துபோக ஆயத்தமாக உள்ளேன்.

**சகுனி:** நீ உயர வேண்டுமானால் எவருடைய காலிலாவது விழுவதில் தப்பில்லை. சிறுபிள்ளைத் தனங்களை விட்டுவிடு.

**துரி:** மாமா! தாங்கள் இட்ட கட்டளை எதனை மறுத்தேன்? நிச்சயமாக பலராமனை என்னுடன் இணைத்து விடுகிறேன்.

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரம்– கிருஷ்ணன் ஒரு கடிதத்தை வாசிக்கிறார்.

**பலராமன்:** என்ன கிருஷ்ணா?

**கிருஷ்:** துவாரகையிலிருந்து தங்கை சுபத்ரா கடிதம் அனுப்பியுள்ளாள்.

**காவலன்:** இளவரசர் தங்களைக் காண வருகிறார்.

**கிருஷ்:** யுதிஷ்டிரனா வருகிறான்? நான் போய் அழைத்து வருகிறேன்.

**காவ:** இளவரசர் துரியோதனன் வருகிறார் என்று சொன்னேன்.

**கிருஷ்:** ஓஹோ! யுதிஷ்டிரன் இனிமேல் காண்டவ பிரஸ்தத்தின் மன்னன் என்றல்லவா அழைக்கப்படுவான். அண்ணா! துரியோதனன் தங்களைத்தான் பார்க்க வருகிறான்.

**பலரா:** ஏன் என்னை எவரும் பார்க்க வரக்கூடாதோ! மூத்தவர்களைத்தானே எவரும் பார்க்க வருவார்கள். இளைய வர்கள் வாழ்த்துக்களை மட்டும் பெறுவார்கள்.

**கிருஷ்:** ஆமாம். உண்மைதான் அண்ணா!

துரியோதனன் வருகிறான்.

**துரி:** எனது வந்தனம்!

**பலரா:** வாரும். என் அருகில் அமரும். கிருஷ்ணனைப் பார்த்தீரா?

**கிருஷ்:** இல்லை அண்ணா! அதற்குச் சந்தர்ப்பமே இருக்கவில்லை. அவருடைய சகோதரர்களை வரவேற்கும் பணியில் ஈடுபட்டிருந்திருப்பார். எனது வணக்கத்தையும் ஏற்றுக்கொள்ளும் துரியோதனரே!

**துரி:** வணக்கம் வாசுதேவா! தங்களைக்காண அவாவுற்றிருந்தேன். தங்கள் வேணு கானத்தைக் கேட்க வேண்டுமென்ற ஆசையும் எனக்குண்டு.

**கிருஷ்:** அப்படியா? நீர் சொந்த இன்பங்களில் களிக்கவே நாட்டம் கொண்டுள்ளீர்! எனது புல்லாங்குழலை நந்தகோன் கிராமத் திலேயே விட்டுவிட்டேனே!

**துரி:** நந்தகோனுக்கு அப்பாலுள்ளவர்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கக்கூடாதா?

**பலரா:** இவன் என்ன செய்வான் என்று எவருக்குமே தெரியாது. இவன் எவரை யும் எப்போது அணைப்பான் என்றோ எப்போது ஒதுக்குவான் என்றோ கூற முடியாது. ஆனால் இவனால் என்னை ஒதுக்கி விடமுடியாது. ஏனெனில் நான் இவனை விடுவதில்லையே!

**துரி:** வாருங்கள் அஸ்தினாபுரி நகரைச் சுற்றிப்பார்த்து வரலாம். துவாரகைபோல் அழகில்லாவிட்டாலும் பார்ப்பதில் லாபமுண்டு.

**கிருஷ்:** அண்ணா! போய்ப் பார்த்து வாருங்கள். நான் விதுரர் வீடுவரை செல்கிறேன். அத்துடன் துரோணாச் சாரியார், பிதாமகர் பீஷ்மர் ஆகியோரையும் பார்க்க வேண்டும். அவர்களாலல்லவா இன்று உங்கள் அஸ்தினாபுரி போற்றுதற்குரிய பூமியாகத் திகழ்கிறது.

-காட்சிமாற்றம்-

விதுரர் மாளிகையில் கிருஷ்ணர் உண வருந்துகிறார்.

**கிருஷ்:** ஆகா! ... அருமையாக இருக்கி... இத்தகைய சுவையான உணவை எங்குமே சுவைத்ததில்லை!

**விதுர:** கேட்டாயா? உன்னால் சமைக்கப்பட்ட உணவு பற்றிய குறிப்பினை யார் கூறுகிறார்கள் பார்!

**கிருஷ்:** மாமா! மாமி! நான் உண்மையைத்தான் கூறுகிறேன். அரசமாளிகை உணவுகள் அலுத்துவிட்டன. மீண்டுமொருமுறை அஸ்தினாபுரி வந்தால் தங்கள் வீட்டில்தான் உணவருந்துவேன்.

**விதுர.மனைவி:** கொடுத்த வாக்கை மறக்க மாட்டீர்களல்லவா?

**விதுர:** அவ்வாறு எதையும் கிருஷ்ணர் மறப்பவரல்லவே!

பின்னணிப்பாடல்:

***விண்ணையும் மண்ணையும் அளந்தவனாங்கே***
***விதுரரின் வீட்டு விருந்தினில் மகிழ்ந்தனன்***
***அன்பினில் தோய்த்து அகத்தூய்மையுடன்***
***அளித்த அமுதினை அகில நாயகனேற்றுப் புகழ்ந்தனன்.***

**விதுர:** வாசுதேவா! ஒரு சந்தேகம்! துவாரகைக்கும் காம்பிலிய நகருக்கும் இடையில்தான் அஸ்தினாபுரி அமைந்துள்ளதா?

**கிருஷ்:** பாரதத்தின் எந்த ஒரு பாதையும் இன்று அஸ்தினாபுரத்தை ஒதுக்க முடியாது. இப்புதுமை தாங்கள் அறியாத தல்லவே? இன்று நடப்பது நடந்தே தீரும். மேலும் வரப்போவதை எதிர்பார்த்திருப்போம்.

**விது.மனை:** இந்நாட்டின் துரதிஷ்டம்; பொருத்தமான இளவரசன் யுதிஷ்டிரன் தன் நாட்டை விட்டே அகல வேண்டியுள்ளது.

**கிருஷ்:** காலம் கெட்டுப்போவதில்லை. மனிதர்களின் செயல்களினால்தான் நன்மையும் தீமையும் விளைகின்றன.

**துரோ:** அவ்வாறானால் தீதறியாத யுதிஷ்டிரன் ஏன் தண்டிக்கப்படுகிறான்?

**கிருஷ்:** தண்டனையா? இல்லை. ஒரு புதிய நகரை நிர்மாணிக்கும் பணியினை துரதிஷ்டம் என்பதா? அல்லவேயல்ல! இத்தகைய காரியத்தை நிறைவேற்றும் தகுதி துரியோதனனுக்கு உண்டா? யுதிஷ்டிரன் தனது தம்பிமாருடன் முன்னேற்றப்பணியினை முடுக்கிவிட் டிருக்கிறான். இத்தகைய ஆற்றல் துரியோதனனிடம் கிடையாது.

**துரோ:** அவ்வாறு ஏன் கருத வேண்டும்?

**கிருஷ்:** துரியோதனன் தன் தந்தையின் நிழல்மட்டுமே. நிலத்தில் வேரூன்றிய மரம் அவன். அவனால் அசைய முடியாது. ஆச்சாரியார் அவர்களே! சந்தர்ப்பம் அம்மரத்தைச் சாய்த்து எதிர்கால நிகழ்வுகளுக்கு எரியூட்டும் விறகாக்கிவிடும். ஒன்றை மறந்துவிட வேண்டாம்! தங்களுக்கு துரியோதனனும் அர்ச்சுனனும் வேண்டப்பட்டவர்கள். ஆனால் தங்களின் ஈடேற்றத்துக்கு அர்ச்சுனனே வழி காட்டியாவான்.

-காட்சி மாற்றம்-

அர்ச்சுனன் விற்பயிற்சியில்டுபட்டிருக்கிறான். பீஷ்மர் வருகிறார்.

**பீஷ்ம:** மகனே! துணையற்றவர்களுக்குத் துணைபோவதுதான் சத்திரியரின் கடமை! திருதராட்டினர் அநீதியிழைத்துவிட்டார் என்பதற்காக எப்பாபமுமறியாத ஒரு மரத்துக்கு இத்தனை தண்டனையா?

**அர்ச்:** தாத்தா! பெரியப்பா அநீதி இழைக்கிறார் என்பதைத் தெரிந்தும் தாங்களும் அதற்கு உடந்தையாகத் துணை போயிருக் கிறீர்களே!

**பீஷ்ம:** ஆமாம் மகனே! அஸ்தினாபுரியினைப் பேரழிவிலிருந்து காப்பதற்கு வேறு வழி எனக்குத் தெரியவில்லையே மகனே!

**அர்ச்:** தாத்தா! பெரியப்பா மட்டும் சற்று ஒதுங்குவாரானால் எனது வில்லினால் பிரச்சனையைத் தீர்த்திருப்பேன் அல்லவா?

**பீஷ்ம:** ஆமாம் மகனே! நிச்சயமாக உன்னால் முடியும். இன்று நான் வயதாளியாகி விட்டேன். பார்வை மங்கிவிட்டது. இந்த இருளுக்கப்பாலுள்ள ஒளியைக் காணும் சக்தி என் கண்களுக்கு இல்லை. உன்தாய் குந்தி உண்மையினை கூறியிருக்க மாட்டாள் என நினைக்கிறேன். திருதராட்டிரனையே அன்று மன்னனாக்க விரும்பினேன். மூத்தவன் என்பதற்காகவல்ல; தனக்கு அநீதி இழைக்கப்பட்டது என்று அவன் மனம் புழுங்கலாகாது என்பதற்காகத் தான். விதுரரின் அரசியல் ஞானமும் என் தாய் சத்தியவதியின் ஆணையும் எடுத்து... அலங்கார... அந்தணர்கள் அ... மந்திரங்களை ஓதிய வண்ணம் ... வேண்டும். மற்றுமுண்டான காரிய... துரிதமாக நடைபெறட்டும்!

**விதுர:** வணக்கம் பெரியப்பா! துரியோதனன் பலராமனை அழைத்துக்கொண்டு நகரை வலம் வருகிறான்.

**பீஷ்ம:** அவனுக்கு இன்னும் என்ன வேண்டுமாம்?

**விதுர:** பாகப்பிரிவினை அவனுக்குப் பிடிக்க வில்லை. பிரிக்கப்பட்டதையும் தன் பங்குடன் இணைப்பதே அவனுடைய நோக்கம்.

**பீஷ்ம:** தனது எல்லைகளை விஸ்தரிக்க இப்போதே கனவு காண்கிறானா?

**விதுர:** தனது அபிலாசைகளை நிறைவேற்ற அண்ணன் திருதராட்டினர் துரியோதனனை கருவியாகக் கணிக்கிறார் பெரியப்பா!

**பீஷ்ம:** இந்தப் பொறாமைப் புயல் எப்போதுதான் அடங்குமோ!

கிருஷ்ணர் வருகிறார்.

**கிருஷ்:** வணக்கம் பிதாமகர் அவர்களே!

**பீஷ்ம:** வாரும் தேவகி புதல்வனே! எனது வணக்கத்தையும் ஏற்றருளும்!

**கிருஷ்:** இளையவர்கள் மீது பெரியவர்கள் வாழ்த்துரை பொழிவது எப்போ திருந்தோ...?

**பீஷ்ம:** எந்த அளவு கோலைக் கொண்டு உம்மைவிட நான் பெரியவனாவேன் கிருஷ்ணா...?

**கிருஷ்:** வயதின் வரம்புதான் பெரியவர் பிதாமகரே!

**பீஷ்ம:** நீரோ எமது விருந்தாளி. உமது கருத்தினை என்னால் மறுதலிக்க முடியுமா? அமரும். கிருஷ்ணா! மகுடாபி ஷேகம் பற்றி உமது திட்டமென்ன?

**கிருஷ்:** பாண்டவர்களுடன் காண்டவ பிரஸ்தம் செல்ல எண்ணுகிறேன். அண்ணன் பலராமனைப் பொறுத்தவரை, அவர் துரியோதனனுடன் திரிவதால் அவர் இங்கே சிலகாலம் தாமதிக்கலாம்.

-காட்சி மாற்றம்-

துரியோதனன் மாளிகை–பலராமனுக்கு விருந்தூட்டப்படுகிறது. துரியோதனனும் துச்சாதனனும் மாறிமாறி உபசரிக்கின்றனர்.

**பலரா:** போதும்....போதும்.....! வயிறார உண்டு விட்டேன்.

**துச்சா:** தங்கள் கருத்துப்படி ஆயுதங்களில் சிறந்தது எது?

**பலரா:** என்னைப் பொறுத்தவரை என்னிட முள்ள ஏர்தான்! இருப்பினும் கதாயுதமும் சிறந்ததே! நீங்கள் துரோணாச்சாரியாரின் மாணாக்கர்கள் என்பதனால் பாக்கிய வான்களே!

**துரி:** தங்கள் மாணாக்கனாக இருப்பதும் பாக்கியம் தானே?

**பலரா:** அடடா! நான் ஆசிரியனல்லவே! வெறுமனே கதாயுதத்தைச் சுழற்றுவேன். அவ்வளவுதான்!

**துரி:** ஏன் பீமனுக்கு தாங்கள் பயிற்சி அளித்தீர்கள் அல்லவா?

**துச்சா:** அண்ணா! உங்களைவிட பீமன் அவருக்கு இரத்த உறவல்லவா?

**பலரா:** அவ்வாறு கூறவேண்டாம். எனக்கு துரியோதனனும் பீமனும் சமதையான வர்களே! கிருஷ்ணனை காண்டவ பிரஸ்தத்திலிருந்து துவாரகைக்கு அனுப்பிவிட்டு சிலகாலம் இங்கேயே தங்கிவிடுகிறேனே!

**துரி:** சில நாட்களென்ன? கதாயுத யுத்த முறையில் தங்களுக்குத் தெரிந்த நுணுக்கங்கள் அனைத்தையும் எனக்குச் சொல்லித்தரும்வரை தங்களை நகரவிடப் போவதில்லை.

**பலரா:** சரி! மகுடாபிஷேகம் முடிந்ததும் கதாயுதப் பயிற்சியில் உமது ஆசை தீரும்வரை பயிற்சி அளிக்கிறேன்- போதுமா?

பின்னணிப்பாடல்:

**தேனூறும் வார்த்தைத் தித்திப்பில் கலங்கியே**
**திளைத்துவிட்டான் பல ராமன் மயங்கியே!**

-தொடர்ந்து வரும்-

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது

www.padippakam.com



வான் உராயும் சத்தம் அந்தப் பகுதியை போர் நடக்கும் பகுதிபோலாக்கிக் கொண்டிருந்தது.

கட்டுமஸ்தான உடலோடும், பயிற்சி வாலிப வயதுத் துடிப்பால் நிமிர்ந்த தோள்களோடும், அந்த தோள்களின் வலிமைக்கு சவால் விடுவது போல புடைத்து நிற்கும் புஜங்களும், அந்த புஜங்களோடு போட்டி விடுவது போல பருத்தும், இறுகியும் திரண்ட தொடைகளும் கொண்ட ... இருவர் இருவராக ... பயிற்சியில் இறங்கியிருந்தனர்.

...


இரகசியம்!
நகைகள்
COLOMBO 11
கொழும்பு 11




மலைகளிலிருந்து செங்குத்தாக விரைந்தோடி வரும் மோட்டார் சைக்கிள் போட்டிகள் இப்பொழுது பரவலாகப் பெருகி வருகின்றன. மேடும் பள்ளமுமாக-சமதரையல்லாத பாதைகளில் பயணம் செய்யும் போது சவாரி செய்பவருக்கு வலுவுடனே தொல்லைகள் நேர்வதும் அபாயமுண்டு. அத்தகைய குலுக்கலும் அலுக்கலுமில்லாமல் சௌகரியமான சவாரியை வழங்கவல்ல நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் இது.


Kala



JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

433686


'ஃபாஸ் ஃபாய்' என்ற பெயர் சூட்டப்பட்ட இந்த வண்டி மலையில் செங்குத்தாக 60 மைல் வேகத்தில் ஓடக்கூடியது. வண்டி சறுக்காமலும் சவாரி செய்வோர் சரிந்திடாமலும் செல்லுவதற்கேற்றவசதிகள் இதிலுண்டு. அமெரிக்காவில் கலிபோர்னியாவில் சந்தைக்கு வந்திருக்கும் இதன் விலை 2500 முதல் 3500 டொலராகும்.


...றுக்கலில்லை

வரையும்



## தினமுரசு வாரமலர்

## கண்ணின் மணியே கொஞ்சம் சிரி!



அமெரிக்காவில் மிக இளவயதிலேயே கன்னிப் பெண்கள் பலர் கர்ப்பிணிகளாகி குழந்தைகளையும் பெற்று விடுகின்றனர். 'காதல் சுதந்திரம்' கரைகடந்து விட்டமையினால் கைவிடப்படும் குழந்தைகள் மலிந்து விட்டன. இந்நிலைக்குள்ளான தாய்மாரையும் குழந்தைகளையும் பாதுகாக்கும் பொறுப்பினை அரசாங்கமே ஏற்கவேண்டியிருக்கிறது. இதனால் மக்கள் வரிப்பணம் ஆண்டொன்றுக்கு 34 பில்லியன் டொலர் நிவாரணமாக செலவிடப்படுகிறது.

மாதாந்த நிவாரணப் பணம் கிடைக்கும் என்பதற்காகவே சில இளவட்டங்கள் தாய்மை எய்துவதாகவும் அறியப்படுகிறது.

இத்தகைய பாரிய செலவினத்தைக் குறைக்க கிளின்ரன் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி 'கன்னித் தாய்மார்-குழந்தைகள்' பராமரிப்புக்காக ஆக 9.4 பில்லியன் டொலர் மட்டுமே செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த புஞ்சிட்டை வீதியில் வீசிச்செல்ல எப்படி மனம் வந்தது? அழுத கண்ணீர் துடைக்கின்றன ஆறுதல் கரங்கள். ஒன்றுமறியாப் பிஞ்சு தேறுதல் பெறுகிறது.

## புதிய 007



கண்பார்க்க கை செய்யும். ஆனால் இந்த ஒராங்குட்டான் இன குரங்குக்கு கண் பார்க்க வாய் செய்யும்.

'மொடேர்ன் ஆர்ட்' என்னும் நவீன ஓவியக்கோடு இந்தக் குரங்கார் தன் வாயால் தூரிகை பிடித்து வரையும் ஓவியங்கள் ஈர்த்துப்போகிறதாம்.

அமெரிக்க புளோரிடா மாநிலத்தில் இந்தக் குரங்கார் வரைந்த ஓவியங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. வாலை வைத்துக் கொண்டு சும்மா இருக்கமுடியாதவர்கள் இவரைப் பின்பற்றிப் பார்க்கலாமே.

புதிய 007ஐ கண்டுபிடித்துவிட்டார்கள். இனி ஜேம்ஸ் பொன்ட் படங்களின் நாயகன் பியஸ் புரோஸ்னன்.

'ரெமிங்டன் ஸ்டீல்' படத்தில் அவரது நடிப்பு ஜேம்ஸ் பொண்ட் பாத்திரத்தில் நடிக்கும் தகுதியை நிலைநாட்டிவிட்டது.

அடுத்து வரப்போகும் படம் 'அமெரிக்கா எஸ்ரேட்'. புதிய ஜேம்ஸ் பொண்ட் அசத்தப் போகிறார்.

## நடமாடும் இருக்கை



## மூன்றாகப் பிறந்த மூத்தோர்கள்

இரட்டையர்கள் பற்றி பலவிதமான சுவாரசியத் தகவல்களை மூரக தந்திருக்கிறது.

ஒரு வித்தியாசமாக இதோ ஒன்றாகப் பிறந்த மூவர் பற்றிய தகவல்.

மூவருமே முதிர் புன்னகை சிந்துவது தமது 95வது பிறந்தநாளுக்காக!

அமெரிக்காவில் ஒன்றாய் ஒரு சூலில் பிறந்து பக்குவமாய் வளர்ந்து தம் குடும்பம் பிள்ளைகள் என்று திசைக்கொன்றாக பிரிந்தபோதும் இவர்கள் மறக்காமல் ஒன்றுசேரும் நாள் பிறந்தநாள். எங்கிருந்தாலும் அன்று மட்டும் ஒன்று சேர்ந்துவிடுவார்கள்.

மூதாட்டிகள் மூவரும் ஒரே குரலில் சொல்லும் ஆசை என்னவென்றால், நூறாண்டு மூவரும் வாழ்ந்து நூறாவது பிறந்த நாளை சேர்ந்தே கொண்டாடிய பிறகுதான் சிவன் போக வேண்டும் வாழ்க நூறுக்கும் மேலே.



கையில் இருக்கையிட்டு புன்னகை இதழில் நிறுத்தி காட்சிதரும் இவர் ஒரு விசப்பர அழகி. கரம்கொடுத்து காரிகையைத் தாங்கி நிற்கும் இந்த தாராளமான வாலிபர்கள் கப்பல் மாலுமிகள். கடல் பயணம் நீண்டநாள் எடுக்கும். அதனால் சலிப்பிருக்கும். எனவே மனதில் களிப்பிருக்க சிரிப்பு உதிர்க்கும் அழகியை தூக்கி வேடிக்கை காட்டுகிறார்கள். நடமாடும் இருக்கை கிடைத்த திருப்தியில் புன்னகை சிந்துகிறாள் இந்தப் பூங்கொத்து.


ஆயிரம் பொய்கள் மறைத்திடினும்- உதய சூரியன் மறைவதில்லை........

ஆணைகள் இட்டு யார்தடுப்பினும்- எமது வெற்றி அலை குறைவதில்லை........

உங்கள் உரிமை உதய சூரியனுக்கே!



உங்களுடன் என்றும்

தமிழர் விடுதலைக் கூட்டணி

திருகோணமலை கிளை

ADVT.